வெளியீடு 12-9-2001 Issued 12-9-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 28, 2001 – தொகுதி 1 – எண் 3

Monday the 28th May, 2001 – Volume 1 – No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

D.
V21, 31' P01
P01.1.3
222386.

[Price Rs. 3.00

26-05-2001

உள்ளடக்கம்

பக்கங்கள்


1. இரங்கல் குறிப்புகள்—

முன்னாள் உறுப்பினர்கள் 61 - 63

2. இரங்கல் தீர்மானங்கள்—

(அ) திரு. சாதிக் அலி, முன்னாள் தமிழக ஆளுநர் 63

(ஆ) திரு. பா. ராமச்சந்திரன், முன்னாள் மத்திய மின் துறை அமைச்சர் மற்றும் முன்னாள் கேரள மாநில ஆளுநர் 63 - 64

(இ) திரு. ப. குழந்தைவேலு, முன்னாள் தமிழக அமைச்சர் 64

(ஈ) திரு. எம்.ஆர். கோவேந்தன், முன்னாள் தமிழக அமைச்சர் 64 - 65

3. அறிவிப்புகள்—

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் 65

(ஆ) வினாக்களுக்கு துறைகள் விரைந்து பதில் அனுப்புதல் 66

4. தகவல் கோரல்—

உறுப்பினரின் முன்னறிவிப்பு 66 - 67

| | பக்கங்கள் |
|---|---|
| **5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—** | 67 - 190 |
| திரு. பி.ஆர். சுந்தரம் | 67 - 81 |
| டாக்டர் க. பொன்முடி | 81 - 106 |
| திரு. சி. ஞானசேகரன் | 106 - 127 |
| * திரு. சி. சிவசாமி | 127 - 133 |
| * திரு. கி. பாரிமோகன் | 133 - 139 |
| திரு. இரா. ஜீவானந்தம் | 139 - 143 |
| * திரு. க. பாரமலை | 143 - 149 |
| * திரு. கே. ராமச்சந்திரன் | 149 - 154 |
| * திரு. கே. ஆறுமுகம் | 155 - 159 |
| * திருமதி வளர்மதி ஜெபராஜ் | 160 - 165 |
| திரு. போளூர் வரதன் | 165 - 175 |
| * திரு. மீ.அ. வைதியலிங்கம் | 175 - 190 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 190 |


22328

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 14, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 மே 28, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்."

இடைவிடாது துன்பங்கள் மேன்மேல் தொடர்ந்து வரினும் மனம் கலங்காதவர் அடைந்த துன்பங்களே துன்பப்பட்டுப் போம்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கல் குறிப்புகள்

#### முன்னாள் உறுப்பினர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ஏ.கே. காதர் குட்டி மற்றும் திரு. பி. காளியப்பன் ஆகியோர் 14-2-2001 அன்றும், திரு. கி. பாலசுப்பிரமணியன் அவர்கள் 20-2-2001 அன்றும், திரு. கி. ஜெயராமன் அவர்கள் 18-3-2001 அன்றும், திருமதி டி.என். அனந்தநாயகி அவர்கள் 4-4-2001 அன்றும், திரு. எஸ்.ஆர். சென்னியப்பன் அவர்கள் 17-4-2001 அன்றும், திரு. இ.எம். நடராஜன் அவர்கள் 28-4-2001 அன்றும், திரு. எஸ்.என். இராமசாமி அவர்கள் 9-5-2001 அன்றும் மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ.கே. காதர் குட்டி அவர்கள் 1937 முதல் 1939 வரை மற்றும் 1946 முதல் 1951 வரை அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் கோட்டையம் முகமதிய ஊரக தொகுதியிலிருந்து அன்றைய சென்னை மாகாண சபையின் உறுப்பினராக சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார்கள்.

திரு. பி. காளியப்பன் அவர்கள் 1977 முதல் 1980 வரை காரைக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு செவ்வனே பணியாற்றி உள்ளார்கள்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் அவர்கள் 1991 முதல் 1996 வரை பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றி உள்ளார்கள்.

திரு. கி. ஜெயராமன் அவர்கள் 1967 முதல் 1971 வரை மற்றும் 1971 முதல் 1976 வரை சேலம் 1 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தொடர்ந்து இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி உள்ளார்கள்.

திருமதி டி.என். அனந்தநாயகி அவர்கள் 1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை பேசின் பிரிட்ஜ் தொகுதியிலிருந்து இரு முறையும் 1971 முதல் 1976 வரை மைலாப்பூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றி உள்ளார்கள்.

திரு. எஸ்.ஆர். சென்னியப்பன் அவர்கள் 1970 ஆம் ஆண்டில் பெருந்துறை தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1971 வரை உறுப்பினராக நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. இ.எம். நடராஜன் அவர்கள் 1967 முதல் 1971 வரை அந்தியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார்கள்.

திரு. எஸ்.என். இராமசாமி அவர்கள் 1980 முதல் 1984 வரை மற்றும் 1985 முதல் 1988 வரை சாத்தான்குளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றத்தக்க வகையில் பணியாற்றி உள்ளார்கள்.



அவர்களது மறைவினால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும், இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்.)

## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) திரு. சாதிக் அலி, முன்னாள் தமிழக ஆளுநர்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் திரு. சாதிக் அலி, முன்னாள் தமிழக ஆளுநர் அவர்கள் மறைவு குறித்து. முதுபெரும் காந்தியவாதியும், இந்திய நாட்டின் விடுதலைக்காக பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு பலமுறை சிறை சென்றவரும், எழுத்தாற்றல் மிக்கவரும், மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும், மஹாராஷ்டிர மாநிலத்தின் ஆளுநராகவும், 4-11-1980 முதல் 2-9-1982 வரை இம்மாநில ஆளுநராகவும், பணியாற்றிய திரு. சாதிக் அலி அவர்கள் 17-4-2001 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

முற்பகல் 10-05

### (ஆ) திரு. பா. ராமச்சந்திரன், முன்னாள் மத்திய மின் துறை அமைச்சர் மற்றும் முன்னாள் கேரள மாநில ஆளுநர்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. பா. ராமச்சந்திரன், சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர், முன்னாள் மத்திய மின் துறை அமைச்சர் மற்றும் முன்னாள் கேரள மாநில ஆளுநர் அவர்கள் மறைவு குறித்து.

தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும், மக்கள் நல்வாழ்விற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவரும், காங்கிரஸ் கட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவரும், எளிமையும் அடக்கமும் கொண்டு வாழ்ந்தவரும், முன்னாள் மத்திய மின் துறை அமைச்சரும், கேரள மாநிலத்தின் முன்னாள் மாநில ஆளுநரும் 1957 முதல் 1962 வரை செய்யாறு தொகுதியிலிருந்தும், 1962 முதல் 1967 வரை பெரணமல்லூர் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து இரு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1962 முதல் 1967 வரை அரசு தலைமைக் கொறடாவாகப் பணியாற்றியவரும், அனைத்துத் தரப்பினராலும் பா.ரா. என்று அன்புடன் அழைக்கப்பட்ட திரு. பா. ராமச்சந்திரன் அவர்கள் 23-5-2001 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

### (இ) திரு. ப. குழந்தைவேலு, முன்னாள் தமிழக அமைச்சர்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த இரங்கல் தீர்மானம் - திரு. ப. குழந்தைவேலு, முன்னாள் தமிழக அமைச்சர் அவர்கள் மறைவு குறித்து.

இனிய பண்பும், அடக்கமும் கொண்டவரும் 1977-80, 1980-84 ஆகிய ஆண்டுகளில் உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து தொடர்ந்து இரண்டு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், வேளாண்மைத் துறை அமைச்சராகவும், உள்ளாட்சித் துறை அமைச்சராகவும், புதுடெல்லியில் தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியாகவும் பணியாற்றிய திரு. ப. குழந்தைவேலு அவர்கள் 12-4-2001 அன்று சாலை விபத்தில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

### (ஈ) திரு. எம்.ஆர். கோவேந்தன், முன்னாள் தமிழக அமைச்சர்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. எம். ஆர். கோவேந்தன், முன்னாள் தமிழக அமைச்சர் அவர்கள் மறைவு குறித்து.



1977-80, 1980-84, 1985-88 ஆகிய ஆண்டுகளில் பேராவூரணித் தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பேரவை உறுப்பினராகவும், 1-7-1983 முதல் 21-10-1986 வரை பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராகவும், எளிமையும், இனிய பண்பும் செயல் திறனும் கொண்டு பணியாற்றிய வருமான திரு. எம்.ஆர். கோவேந்தன் அவர்கள், 26-5-2001 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)*

## 3. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் முதல் கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கின்றேன்:

1. திரு. கா.பூ. முனுசாமி
2. திரு. பி.ஆர். சுந்தரம்
3. திரு. ஏ. பாப்பா சுந்தரம்
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்
5. திருமதி டி. யசோதா
6. திரு. ஐ. கணேசன்

[2001 மே 28

**(ஆ) வினாக்களுக்குத் துறைகள் விரைந்து பதில் அனுப்புதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. வினாக்கள் உறுப்பினர்களிடமிருந்து பேரவைச் செயலகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. அவை அனுமதிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தற்போது அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. வினாக்களுக்கு விடைகள் வரும் வரை சில நாட்களுக்கு பேரவையில் வினாக்கள்- விடைகள் நேரம் இருக்காது. சட்டமன்றப் பேரவை விதி 45-ன்படி வினாக்களுக்கான விடைகள் 42 நாட்களுக்குள் அளிக்க வேண்டும். அப்படி முடியாவிட்டால் மேலும் இரண்டு வார கால அவகாசத்தில் விடைகள் கொடுக்க வேண்டும். இனிமேல் வினாக்களுக்கான விடைகளை 42 நாட்களுக்குள் செயலகத் துறைச் செயலாளர்கள் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

## 4. தகவல் கோரல்

### உறுப்பினரின் முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் முன்மொழிதல். திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. ப. ரங்கநாதன்:** நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்வில் உள்ளது. அறையில் வந்து விவாதித்து உரிய ஏற்பாட்டைச் செய்துகொள்ளலாம். சில ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு என்ன பதில் என்று நான் அனுப்பியிருக்கிறேன். மற்றவற்றை அறையிலே வந்து நீங்கள் கேட்டுக்கொள்ளலாம்.

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவையிலிருந்து எழுப்புவதற்கு அனுமதி தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அறைக்கு வாருங்கள். என்னவென்று பேசி முடிவு செய்து கொள்ளலாம்.



2001 மே 28]

**திரு. ப. ரங்கநாதன்:** சேலம், நாமக்கல், சூரமங்கலம் போன்ற பகுதிகளில்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இதற்கு அனுமதி அளித்த பிறகு இதை விவாதிக்க வேண்டும். இது ஆய்வில் உள்ளது. அறைக்கு வாருங்கள். விவாதித்துக்கொள்ளலாம்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் முன்மொழிதல். திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்காணும் நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:

"2001 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" எனும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல், திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடங்குதல். திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் இனம், மதம், சாதி ஆகிய அனைத்திற்கும் அப்பாற்பட்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிக் கட்டிலே அமர்த்திட , புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சியை மீண்டும்

@ பக்கங்கள் 191 முதல் 216 வரை இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொண்டுவர, அல்லும் பகலும் அயராது பாடுபட்ட எங்கள் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அள்ளித் தந்து, வாய் நிறைய நம்மை வாழ்த்தி அனுப்பி வைத்த தமிழக வாக்காளப் பெருமக்களுக்கும் குறிப்பாக, தமிழகத்துத் தாய்மார்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இராசிபுரம் தொகுதியில் என் வெற்றிக்காக எனது தொகுதிக்கு வந்து, வாக்கு சேகரித்து என்னை வெற்றி பெறச் செய்ததற்கும், வரலாற்றுச் சிறப்புமிக்க 2001 ஆம் ஆண்டு கவர்னர் உரையை முதன்முதலாக முன்மொழிந்து பேச அனுமதித்ததற்கும் என் அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பாதம் பணிந்து வணங்கி என் உரையை ஆரம்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்
மீண்டும் தர்மம் வெல்லும்'

என்ற பாரதியாரின் கூற்றுப்படி இன்று தர்மம் வெற்றி அடைந்து, அதர்மம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. 'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' என்ற வாக்குட படி இன்று புரட்சித் தலைவி அவர்கள் தமிழக முதல்வராகி சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 2001-ல் தமிழகத்தின் முதல்வராக நிச்சயம் வருவார்கள் என்று இந்த அவையிலே நான் பேசி இருக்கின்றேன். அதற்குப் பதிலளித்துப் பேசிய முன்னாள் முதல்வர், இந்நாள் சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் சிரித்தார். அந்த ஆளும் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எள்ளி நகையாடினார்கள். என்னையும், என்னுடைய தலைவியையும் அவமானப்படுத்திப் பேசினார்கள். அன்றைக்கு அவர்கள் சிரித்த அந்த ஆணவச் சிரிப்புக்கு இன்றைக்கு மக்கள் சரியான பாடத்தைப் புகட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் சட்டமன்றத்திலே பேசினேன். அடுத்த மகளிர் தினத்தில் எங்கள் அன்னை தமிழக முதல்வராக வருவார்கள் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி கடந்த 14 ஆம் தேதி அன்னையர் தினத்தில் எங்கள் அன்னை தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்கள்.



(மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆதிபராசக்தி இன்று அருள் செய்துகொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10—15

முன்பு, டாக்டர் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டபோது மக்கள் மன்றத்திலே கேட்டார்கள். 'நான் என்ன தவறு செய்தேன்? ஏன் இந்த ஆட்சியைக் கலைத்தீர்கள்?' என்று மக்களிடம் சென்றார்கள். மக்கள் மீண்டும் அவரை தமிழகத்தின் முதல்வராக ஆக்கினார்கள். அதுபோலத்தான் இப்போதும் நடந்துள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக தி.மு.க. ஆட்சியில் நடந்தது என்ன? தி.மு.க.—விற்கு சிம்ம சொப்பனமாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கின்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவரை அரசியலிலிருந்து அழிக்க வேண்டும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு, ஓர் அம்சத் திட்டத்தை அவர்கள் ஐந்து ஆண்டுகளாக நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள். ஒரு வழக்கு போட்டாலே இந்த நாட்டைவிட்டு ஓடிவிடுவார்கள் புரட்சித் தலைவி அவர்கள் என்று தப்புக் கணக்கு போட்டார்கள். சிறையில் அடைத்தார்கள், சித்ரவதை செய்தார்கள். அந்தக் கொடுஞ்செயல்களை எல்லாம் தாங்கிக்கொண்டு நான் நிரபராதி என்று மக்கள் மன்றத்திலே சென்று கேட்டார்கள். நான் நிரபராதி, எனக்கு வாக்களியுங்கள், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், டாக்டர் எம்.ஜி.ஆருடைய ஆட்சியை மீண்டும் தமிழகத்திலே கொண்டு வருவேன் என்று மக்களிடம் சென்று டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முறையிட்டார்கள். மக்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள். புரட்சித் தலைவி அவர்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வெற்றி பெற்றால் நான்தான் தமிழகத்தின் முதல்வர் என்று மக்களிடம் கூறினார்கள். அதன்படி, இன்றைக்கு அவர்கள் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டு, அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வினுடைய பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் முதல்வராக இங்கே வந்திருக்கிறார்கள். மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பதை கவர்னரும் நிரூபித்திருக்கிறார்கள்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையில் கூறினார்கள்; பொது மக்களிடம் தேர்தல் பிரச்சாரத்தின்போது கூறினார்கள்; தேர்தல் பிரச்சாரத்திலே, கடந்த 5 ஆண்டுக் காலத்தில் தி.மு.க. அரசு செய்த அதிகார துஷ்பிரயோகங்கள், லஞ்ச ஊழல்கள்

ஆகியவற்றைப் பட்டியலிட்டுக் காட்டினார்கள். சன் டி.வி. நடத்திய அதிகார துஷ்பிரயோகங்கள், சிமெண்ட் விலை ஏற்றத்தில் நடந்த குளறுபடிகள், இதில் யார் யார் பயனடைந்தார்கள் என்ற கணக்கு, பொது விநியோக முறையிலே கிட்டத்தட்ட 1400 கோடி ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டது, கொப்பரைத் தேங்காய் கொள்முதலிலே ஊழல், போக்குவரத்துத் துறையிலே ஊழல், திருப்பத்தூர் சந்தனக் கிடங்கிலே சந்தன மரங்கள் எரிக்கப்பட்டதிலே அந்தச் சட்டமன்ற உறுப்பினருக்கு இருக்கின்ற தொடர்பு இ· ·ற்றையெல்லாம் தொடர்புபடுத்திப் பேசினார்கள். இந்த ஊழலாட் ı வேண்டுமா? இந்த ஊழலாட்சியை அகற்ற வேண்டும் என்று மக்களிடம் வாக்கு கேட்டார்கள். மக்களும் இந்த ஊழலாட்சி அகற்றப்பட வேண்டும் என்று வாக்களித்தார்கள். அதேபோலத்தான் தி.மு.க. தலைமையும் கேட்டது. ஐந்து ஆண்டுக் காலமாக இருக்கிற இந்தப் பொற்கால ஆட்சித் தொடருவதற்கு வாக்களியுங்கள் உதயசூரியனுக்கு என்று கேட்டார்கள். மக்களும் கூறினார்கள், உங்களுடைய பொற்கால ஆட்சி தேவையில்லை, புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆருடைய பொற்கால ஆட்சிதான் எங்களுக்குத் தேவை என்று அவர்கள் இப்பொழுது வாக்களித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஏன்? இந்த 5 ஆண்டுக் காலத்திலே மக்கள் விரோத அரசு நடந்துகொண்டிருந்தது. ஒன்றை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக மக்களை ஒட்டுமொத்தமாக திராவிட முன்னேற்றக் கழக அரசு வஞ்சித்துவிட்டது.

மத்தியிலே ஆண்ட பி.ஜே.பி. அரசு இரண்டு தடவை டீசல் விலை, மண்ணெண்ணெய் விலை, gas விலையை உயர்த்தியது. அப்போது மத்தியிலே அமைச்சராக இருந்த மம்தா பேனர்ஜி தட்டிக் கேட்டார். ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு தட்டிக் கேட்டார். ஆனால் அப்போதிருந்த நம்முடைய முதல்வரோ வாயே திறக்கவில்லை. அதற்கு நேர்மாறாக வியாக்கியானம் செய்தார். வேறு வழியேயில்லை, மத்திய அரசு உயர்த்திவிட்டது என்று கூறினார். அதனால் அந்த ஆட்சியை மக்கள் தூக்கி எறிந்திருக்கிறார்கள்.

மொத்தமாக ஒட்டுமொத்தத் தொழிலாளர்களை அந்த அரசு வஞ்சித்துவிட்டது. உதாரணத்திற்கு ஒன்றே ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சேலம் உருக்காலை. சேலம் உருக்காலையைத் தனியாருக்குத் தாரை வார்ப்பதை எதிர்த்து எங்களுடைய புரட்சித் தலைவி ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். சேலத்திலே ஒரு



ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். நாங்கள் எல்லாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, எதிர்க்கட்சிகள் எல்லாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானம் போடப்பட்டது. தீர்மானம் போட்டதோடு சரி, அந்தத் தீர்மானத்தைப் பற்றி முன்னாள் முதல்வர் நினைக்கவேயில்லை. நான் வாஜ்பாயோடு பேசுவேன், நியாயம் கேட்பேன் என்றார். வாஜ்பாயை சந்திக்கவேயில்லை. ஆகவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்களுக்கு விரோதமான அரசு என்று ஒட்டுமொத்தமாக இப்பொழுது மக்கள் அதைத் தூக்கி எறிந்திருக்கிறார்கள்.

நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புவிஈர்ப்பு சக்தியை நியூட்டன் கண்டுபிடித்ததைப்போல, அமெரிக்காவை கொலம்பஸ் கண்டுபிடித்ததைப்போல, முன்னாள் முதல்வர் இரண்டு அற்புதங்களை தான் கண்டுபிடித்துவிட்டதாக அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பறைசாற்றிக்கொண்டார். ஒன்று சமத்துவபுரம். சமத்துவபுரம், சமத்துவபுரம் என்று கூறிக்கொண்டு சாதிக் கட்சிகளை அழைத்து சாதி வெறியை ஊட்டியதால் இப்பொழுது சாதிக் கட்சிகளை மக்கள் வெறுத்துப்போகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

அடுத்தபடியாக உழவர் சந்தை. வெறும் புள்ளிவிவரங்களை மட்டும் கொடுத்துவிட்டால் அந்தத் திட்டம் வெற்றியடைந்துவிடும் என்று கூற முடியாது. அந்த உழவர் சந்தைகளைப் பார்க்கப் போனால், பல இடங்களிலே அவை மூடிக்கிடக்கின்றன. அங்கே ஆடு, மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறார்கள். பல பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. ஆகவேதான் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் முதன்முதலில் செயல்படாமல் இருக்கின்ற உழவர் சந்தைகள் எல்லாம் மூடப்படும் என்று கூறியிருக்கிறார்கள்.

*முற்பகல் 10—20*

அடுத்து, நான் தற்போது எங்கள் புரட்சித் தலைவி அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள கவர்னர் உரைக்கு வருகின்றேன். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சமர்ப்பித்துள்ள கவர்னர் உரையில் அடுக்குமொழியில் வார்த்தைகள் இல்லை; மக்களை ஏமாற்றும் கவர்ச்சித் திட்டங்கள் இல்லை; இந்த கவர்னர் உரை என்பது வெறும் வார்த்தைக் குவியல்களாக, வறட்டு சித்தாந்தத்தால் வற்றிப்போன விளக்கங்களாக இல்லாமல், ஒடிந்து, மெலிந்து, பட்ட மரங்களாகக் காட்சி தருகின்ற தமிழகத்து கிராமங்கள்

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2001 மே 28

மீண்டும் பச்சை மரங்களாக துளிர்த்து, பூத்து, காய்த்துக் குலுங்குகின்ற வகையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த கவர்னர் உரையில் அனைத்துத் தரப்பு மக்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்கின்ற விதத்தில் நடைமுறைக்கு ஒத்துவருகின்ற திட்டங்கள் தொகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. ஒரு பூஜ்யத்திலிருந்து இப்போது எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ராஜ்யத்தை ஆள வந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கஜானாவை காலி செய்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று உண்மையைச் சொன்னால், அரிசி கையிருப்பிலே இருக்கின்றது என்று கூறுகின்றார்கள். புரட்சித் தலைவி அவர்கள் 1996-ல் இந்தப் பதவியை விட்டு விலகியபோது 874 கோடி ரூபாய் ரொக்க இருப்புடன் வளமான பொருளாதாரத்தை விட்டுச் சென்றார்கள். இன்றைக்கு கருவூலத்திற்கு அளிக்கப்பட வேண்டிய தொகை மட்டும் 700 கோடி ரூபாயாக இருக்கிறது. நான் ஒன்றை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில், ஏன் இந்தியாவில் எங்குமே நடக்காத, நடக்க முடியாத சாதனையை எங்கள் புரட்சித் தலைவி அவர்கள் சாதித்திருக்கின்றார்கள். 19 ஆம் தேதி அமைச்சரவை பதவியேற்றிருக்கின்றார்கள். 25 ஆம் தேதி ஒரு நல்ல கவர்னர் உரையைக் கொடுக்கின்றார்கள். எந்த அரசாவது, எந்த முதலமைச்சராவது, இந்த ஐந்து நாட்களில் இவ்வளவு சிறப்பான கவர்னர் உரையைக் கொடுத்திருக்கின்றார்களா என்றால் இல்லை. அது டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒருவரால்தான் முடியும் என்று சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கவர்னர் உரையில், தமிழக மக்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்துள்ள தெளிவான, உறுதியான தீர்ப்பு மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும் என்றும், மாநிலத்தில் இந்த வரலாற்றில் ஈடு இணையே இல்லையென்றும் கூறப்பட்டிருக்கின்றது. அதைப்பற்றி முன்னாள் முதல்வர் அவர்கள் வியாக்கியானம் செய்திருக்கின்றார்கள். மாநில வரலாற்றில் அந்த வெற்றி, ஈடு இணையைப்பற்றி ஒரு வியாக்கியானமே பேசியிருக்கின்றார்கள். அவர் இந்த அவையிலே இல்லையென்றாலும் நான் கேட்க விரும்புகிறேன்.

அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஒழிந்துவிட்டது. அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அழிந்துவிட்டது, அதனுடைய பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இங்கு வரவே முடியாது என்று இருந்த நிலைமையை மாற்றி, சாம்பலான பிறகு உயிர் பெற்று எழுகின்ற பீனிக்ஸ் பறவைபோல, எங்களுடைய ஆட்சியைப் புரட்சித் தலைவி



2001 மே 28] [திரு. பி.ஆர். சுந்தரம்]

அவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கின்றார்கள். இது மாபெரும் சாதனையல்லவா? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

சென்னையிலே நீங்கள் பெற்றிருக்கின்ற வெற்றி, நான் தனித் தனியாகச் சொல்ல முடியும். இருந்தாலும் ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். முன்னாள் முதல்வர் அவர்கள் 4000 ஓட்டு வித்தியாசம். மேயர் அவர்கள் 7000 ஓட்டு வித்தியாசம். ஆற்காடு வீராசாமி அவர்கள் 5000 ஓட்டு வித்தியாசம். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 336 ஓட்டு வித்தியாசம். பரிதி இளம்வழுதி அவர்கள் 86 ஓட்டு வித்தியாசம். இவற்றை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாங்கள் பெற்ற வெற்றி இமாலய வெற்றி.

**திரு. பா. பரணிகுமார்:** கவர்னர் உரையைப்பற்றிப் பேசச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** எங்கள் புரட்சித் தலைவி மட்டும் நேரம் இருந்திருந்து சென்னையை இன்னும் இரண்டு முறை வலம் வந்திருந்தால் (மேசையைத் தட்டும் ஒலி) என்ன நடந்திருக்கும் என்பதை நீங்களே சற்று சிந்தித்துப் பாருங்கள். 34 ஓட்டு, 86 ஓட்டு வித்தியாசம், சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். தாயே, நீங்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வந்தபோது அதிக நேரம் எடுத்துக்கொண்ட காரணத்தினால் சென்னையைச் சுற்றிவர முடியவில்லை. வந்திருந்தால் - அதற்கு மேல் நீங்களே நினைத்துப் பாருங்கள். உங்களுடைய கோட்டையே கலகலத்துவிட்டது. தப்பித்தோம், பிழைத்தோம் என்று இங்கே வந்திருக்கின்றீர்கள். நீங்கள் எங்களைப் பார்த்து வியாக்கியானம் செய்கின்றீர்கள்.

அடுத்தது, தன்னிறைவு என்ற தத்துவத்தை இந்த நாட்டிற்குத் தந்தவர் அண்ணல் காந்தியடிகள். அதற்கு உயிரோட்டம் கொடுத்தவர் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள். அதேபோல 'கரீபி ஹட்டோ' என்று வறுமையே வெளியேறு என்ற கோஷத்தை எழுப்பியவர் அன்னை இந்திரா காந்தி அவர்கள். இன்றைக்கு அதைத்தான் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் கூறியிருக்கின்றார்கள். 'வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடாது. தமிழகத்தை ஒரு வளமான மாநிலமாக, இந்தியாவின் முதன்மை இடமாக

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2001 மே 28

மாற்றுவேன்' என்று சூளுரைத்து இருக்கின்றார்கள். அந்தச் சூளுரையைக் கேட்டு இன்றைக்கு நாடே பாராட்டுகின்றது. பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாடே பாராட்டுகின்றது.

முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், காவல் துறையைப்பற்றி அவர்கள் கூறியது 'போலீசாரின் ஈரல் 75 சதவிகிதம் கெட்டு விட்டது' என்பதாகும். இப்பொழுது இந்திய ஆட்சிப் பணியாளர்களை பழிவாங்கிய காரணத்தாலும், மாநில அரசின் உயர் அலுவலர்கள், காவல் துறையினர், மன உறுதியும், ஊக்கமும் குன்றியிருப்பது குறித்து இந்த அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் மாநிலத்தின் பிற பணியாளர்களின் மன உறுதியையும், பெருமையையும் மீட்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. ஏனென்றால், ஒரு அரசினுடைய நற்பெயர் அதை நடத்தும் அதிகாரிகளின் எண்ணத்தைப் பொறுத்துத்தான். அதை புரட்சித் தலைவி அவர்கள் தெளிவாக அறிந்து இந்த கவர்னர் உரையில் அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்திருக்கிறார்கள்.

*முற்பகல் 10—25*

கவர்னர் உரையில் சட்டம்-ஒழுங்கைப்பற்றி எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. காட்டிலே இருக்கிற கொலைகாரன், கொள்ளைக்காரன், சந்தன மரக் கடத்தல் வீரப்பன் மற்றும் அவனுடன் இருக்கின்ற பிரிவினைவாதிகள் ஆகியோரிடம் சமாதானத் தூது சென்று கொண்டிருந்த ஒரு கையாலாகாத அரசுதான் முன்பு ஆட்சி செய்துகொண்டிருந்தது. டாக்டர் புரட்சித் தலைவியைப்பற்றி சன் டி.வி-யிலே ஒரு பேட்டி கொடுத்த ஒரே காரணத்திற்காக வீரப்பனைப் பிடிக்கிற பணியிலே அவர்கள் முழு கவனம் செலுத்தவில்லை. அதிரடிப் படையின் கைகள் கட்டப்பட்டிருந்தன. தீவிரவாதம் தலைவிரித்தாடியது, பயங்கரவாதம் தலைவிரித்தாடியது. இன்றைக்கு அந்த சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்போம் என்று இந்த அரசு சூளுரைத்திருக்கிறது, வரவேற்கின்றேன். கூடியவிரைவிலே சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்தபடியாக, கவர்னர் உரையில் தீவிரவாதம், பிரிவினைவாதம், இவற்றைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லையில் பிற மாகாணங்கள், அண்டை நாட்டுத் தீவிரவாதிகளால் தமிழகத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அண்டை நாட்டு விடுதலைப் புலிகளால், ராஜீவ்



2001 மே 28] [திரு. பி.ஆர். சுந்தரம்]

காந்தியை இந்தத் தமிழ் மண்ணில் நாம் இழந்தோம். 1991 ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரியணை ஏறியவுடன் விடுதலைப் புலிகளைத் தமிழகத்தைவிட்டே விரட்டினார்கள். தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்கினார்கள். இன்றைக்கு இந்தியாவிலேயே தன்னுடைய உயிரைப் பணயம் வைத்து, தன்னுடைய உயிரை துச்சமாக மதித்து, தீவிரவாதிகளுக்கும், பயங்கரவாதிகளுக்கும் முடிவு கட்டுவேன் என்று கூறிய ஒரே முதல்வர் இந்தத் தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவிதான் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டு நலன்களின் பாதுகாப்பில் வேறு எந்தத் தலைவரையும்விட் அம்மா அவர்கள் முதலிடத்தில் இருப்பார்கள் என்பதில் யாருக்கும் ஐயம் இருக்கத் தேவையில்லை. ஏனெனில் நியாயத்திற்காகவும், உரிமைக்காகவும் போராடக்கூடிய போர்க்குணம்மிக்க வீராங்கனை எங்கள் அம்மா என்பது அனைவருக்கும் தெரியும்.

சேதுசமுத்திரத் திட்டத்தை மத்திய அரசு விரைந்து செயல்படுத்த வேண்டுமென்றும், முல்லை பெரியார் அணையின் உயரத்தை 152 அடியாக உயர்த்த கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றும், கச்சத் தீவை மீண்டும் மீட்பதற்கு மத்திய அரசை அணுகுவோம் என்றும், காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், கர்நாடக அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்றும், மக்கள் பிரச்சினைகளை இந்த கவர்னர் உரையில் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த கவர்னர் உரையில் மேலும் வேளாண்மையைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேளாண்மையைப் பொறுத்தவரையில், நவீன பாசன முறைகள், நிலத்தை முழுவதும் பயன்படுத்துதல், மீன் வளர்ப்பு முறை, நீரைச் சேமித்தல் என்று பல நல்ல அற்புதமான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள்.

உழவர் சந்தையைப்பற்றி நான் முன்பே கூறினேன். உழவர் சந்தைக்கு சில எதிர்ப்புகள் வருவதாகக் கூறியிருக்கிறார்கள். தினமணி பத்திரிகையிலே சேலத்திலே உழவர் சந்தையை மூட எதிர்ப்பு என்று வந்திருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியுடன் இதைக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (பத்திரிகையைக் காண்பித்தார்) இந்தப் பத்திரிகையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே இருப்பவர்கள் எல்லாம் விவசாயிகளே அல்ல. பாருங்கள். தி.மு.க.வாலே ஏவப்பட்ட தி.மு.க. கட்சியினர்.

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2001 மே 28

இந்தப் படத்தைப் பாருங்கள் (பேரவைத் தலைவரிடம் பத்திரிகையைக் கொடுக்கிறார்) இந்தப் படத்திலே அனைவரும் கையைத் தூக்கிக்கொண்டிருக்கிறார்கள். கையைப் பார்த்தால் உங்களுக்கே தெரியும் என்று நினைக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து பத்திரிகையாளர்களிடம் இதைக் காட்டுங்கள். அவர்கள் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் விவசாயிகளுடைய பிரச்சினை...

* **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இடத்தில் ஒரு விளக்கம் அளிப்பது நல்லது என்று கருதுகிறேன். ஆளுநர் உரையில் 8-ம் பக்கத்தில் கூறப்பட்டிருப்பது என்னவென்றால், 'உழவர் சந்தைகளால் விவசாயிகளும் பயனடையவில்லை, நுகர்வோரும் பயனடையவில்லை. எனவே இத்திட்டம் தோல்வியடைந்துள்ளது. இவ்வரசு செயல்படாமல் உள்ள உழவர் சந்தைகளை மூடிவிடக் கருதியுள்ளது' என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த அரசு ஆட்சிக் காலத்தில் ஏறக்குறைய 100 உழவர் சந்தைகளைத் திறந்திருக்கிறார்கள். அவற்றில் மிகக் குறைந்த அளவில் 10 உழவர் சந்தைகள் தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மற்ற உழவர் சந்தைகள் எல்லாம் வெறிச்சோடிக் கிடக்கின்றன. அங்கே விவசாயிகளும் செல்வதில்லை. பொதுமக்களும் செல்வதில்லை. ஆகவே செயல்படாமல் இருக்கின்ற உழவர் சந்தைகள் மூடப்படும் என்றுதான் அறிவித்திருக்கிறோம். செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற உழவர் சந்தைகள் மூடப்படமாட்டாது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

*முற்பகல் 10—30*

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, அடுத்து உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அடுத்து நீங்கள்தான் பேசப் போகிறீர்கள், அப்போது சொல்லுங்கள். ஒன்றும் பிரச்சினை இல்லை. செயல்படாத உழவர் சந்தைகள் மூடப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அடுத்து, விவாதத்தில் நீங்கள் கலந்துகொள்ளப் போகிறீர்கள். அப்போது விளக்கங்களைச் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு மிக்க நன்றி. உள்ளாட்சியைப் பொறுத்தவரையில், உள்ளாட்சி அமைப்புகளுக்குத்



2001 மே 28] [திரு. பி.ஆர். சுந்தரம்]

தேர்தல், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம், ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்வதற்கு ஏற்ப அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மிக அழகாக ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கவர்னர் உரையில் கல்வியைப் பொறுத்தவரையில், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களைப்பற்றிச் சிந்தித்து அவர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றுகின்ற வகையில் உன்னதமான ஒரு புதிய கல்வித் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

எங்குமே இல்லாத அளவுக்கு 11 மற்றும் 12 ஆம் வகுப்பிலே பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமுதாயத்தைச் சார்ந்த மாணவிகளுக்கு இலவச மிதி வண்டித் திட்டம் என்பது இந்தியாவில் தமிழகத்திலேதான் முதன்முதலாக இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள். இதை நான் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்வியைப் பொறுத்தவரையில் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் தரமான கல்வி, ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியர், உயர்நிலைப் பள்ளிகளைப் படிப்படியாக மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் திட்டம், தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களிலும், தொழிற்படிப்புக் கல்லூரிகளிலும் ஊரக மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டை 15 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்துதல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளையும் புதிதாக அமைக்கப்படவுள்ள தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவருதல் போன்ற மிக அற்புதமான திட்டங்களைக் கல்வியைப் பொறுத்தவரையில் கவர்னர் உரையிலே கூறியிருக்கிறார்கள்.

இதற்கும் மேலாக, டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆசிரியர்கள் இடமாற்றம் குறித்து நேற்று ஆசிரியர் பிரதிநிதிகளை அழைத்து, அந்தந்த மாவட்டங்களில் கவுன்சிலிங் செய்து அவர்கள் விருப்பப்படி ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படும் என்று கூறியிருக்கிறார்கள். இதுபோன்று எங்கே நடந்திருக்கின்றது? (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தை முதன்முதலாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவ்வாறு ஒவ்வொன்றாக அடுக்கிக் கொண்டே செல்ல முடியும்.

மகளிர் மேம்பாட்டுத் திட்டம். மகளிருக்கு சட்டமன்றத்தில், பாராளுமன்றத்தில் 33 சதவிகித இட ஒதுக்கீடு. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பில் 69 சதவிகித இடஒதுக்கீட்டு சட்டப் பாதுகாப்பு, ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற சிறப்பான திட்டம், 100 வீடுகளுக்கு மேல் எண்ணிக்கை உள்ள குடியிருப்புகளைக் கொண்ட கிராமங்களுக்குக் குடிநீர் வசதி. சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தை உடனடியாக விரைவுபடுத்துதல், சென்னைக்குப் புதிதாக இரண்டு நீர்த் தேக்கங்கள் அமைத்தல், சென்னை குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காக புதிய வீராணம் திட்டம்—எங்கள் ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட திட்டம் என்பதற்காகவே முந்தைய அரசு அந்தப் புதிய வீராணம் திட்டத்தைக் கிடப்பில் போட்டது - அன்றைக்கு இந்தப் புதிய வீராணம் திட்டத்தை நிறைவேற்றியிருந்தால் இன்றைக்கு சென்னை மாநகருக்குக் குடிநீர்ப் பிரச்சினை வந்திருக்காது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுச் சங்க நிர்வாக அமைப்புகளுடைய பதவிக் காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகியும் உங்களுடைய வசதிக்காக, நீங்கள் செய்த நிர்வாகத்திற்கு வசதியாக அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுடைய பதவிக் காலத்தை நீட்டிப்புச் செய்தீர்கள். அப்படி பதவிக் காலம் நீட்டிப்புச் செய்யப்பட்ட சங்கங்களை எல்லாம் கலைத்துவிட்டு செப்டம்பரிலே தேர்தல் நடைபெறும் என்று புரட்சித் தலைவி அவர்கள் கவர்னர் உரையிலே கூறியிருக்கின்றார்கள். தவறு நடந்துள்ளது என்பதற்கு நானே சாட்சி. தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்திலும் ஆளுங்கட்சியின் தலையீடு இருந்தது. சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கி இயக்குநர் தேர்தலுக்காக அந்தப் படிவத்தை வாங்கச் சென்ற என்னை, அந்தப் படிவத்தை வாங்க விடாமல் அடித்துத் துரத்தியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பொது விநியோகத் திட்டம். பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்களைக் கடத்துபவர்கள் யாராக இருந்தாலும் இரும்புக்கரம் கொண்டு அடக்குவோம் என்று புரட்சித் தலைவி அவர்கள் கூறியிருப்பதை மக்கள் வரவேற்கிறார்கள்.

முற்பகல் 10—35

அடுத்து சுகாதாரம். அனைவருக்கும் நோயற்ற வாழ்வு, தரமுள்ள மருத்துவ வசதி எளிதில் கிடைக்கச் செய்வது இந்த அரசின் குறிக்கோள் என்று கூறப்பட்டிருக்கிறது. இதை ஏழை எளிய மக்கள் இன்று வரவேற்கின்றார்கள்.



கோப்புகளை முடிக்கும் வாரம். கோப்புகளை 90 நாட்களுக்குள் முடிக்கும் வகையில் கோப்புகளை முடிக்கும் வாரம் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. எந்தக் கோப்பாக இருந்தாலும், 90 நாட்களில் பைசல் செய்யப்பட வேண்டுமென்று கவர்னர் உரையிலே கூறப்பட்டிருப்பது அடித்தட்டு மக்கள், எந்தவிதப் பிரச்சினையும் இன்றி, அவர்களுடைய பிரச்சினையைத் தீர்வு செய்வதற்கு இதுவொரு வழிகோலாக இருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த ஆட்சியை ஆன்றோரும், சான்றோரும், ஆன்மீகவாதிகளும் வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள், வரவேற்றுக் கொண்டிருக்கின்றார்கள். எங்கள் புரட்சித் தலைவியைப் பொறுத்தவரையில் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் மிக்க ஆர்வமாக இருக்கின்றார்கள். மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவருக்கு நிகர் அவரேதான்.

கடந்த 2, 3 நாட்களுக்கு முன்பு நெய்வேலி நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் பிரச்சினையில், பிரச்சினை ஏற்பட்டு தமிழகமே இருளில் மூழ்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. புரட்சித் தலைவி அவர்கள் தலையிட்டு, அந்தப் பிரச்சினையைச் சுமுகமாக முடித்தார்கள். 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்று கூறி இருக்கிறீர்கள். இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் கேரள முதல்வர் மாண்புமிகு திரு. ஏ.கே. அந்தோணி அவர்களிடம் பேசி 100 மெகாவாட் மின்சாரத்தைப் பெற்றிருக்கின்றார்கள். இது முதல் சாதனை அல்லவா? (மேசையைத் தட்டும் ஒலி)

மக்களுடைய பிரச்சினையை அவர்கள் தீர்க்கவில்லையா? நம்முடைய சபாநாயகர் அவர்களை வாழ்த்திப் பேசும்போது முதல் நாள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எதிர்க் கட்சிகளுக்குப் பாதுகாப்புபற்றி இங்கே பேசினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் இந்த நேரத்திலே ஒன்றை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 25 ஆம் நாள் இதே அவையிலே எங்கள் புரட்சித் தலைவிக்கு நேர்ந்த அந்த நிகழ்ச்சியை நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றைக்கு நீங்கள் என்ன செய்தீர்கள்? நீங்கள் எல்லாம் இங்கே பார்த்துக்கொண்டிருந்தீர்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். அந்தப் பிரச்சினையைப்பற்றி உரிமை மீறல் பிரச்சினை எழுப்ப வேண்டுமென்று அடுத்த நாள் கேட்கின்றார். உரிமை மீறல் பிரச்சினையை எழுப்புவதற்கு அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அவர்கள் இங்கேதான் அமர்ந்திருக்கின்றார்கள்.

அவரேதான் சாட்சி. அந்தப் பிரச்சினையை இந்த அவையிலும் பேசக் கூடாது, வெளியிலும் பேசக் கூடாது என்று வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டீர்கள்.

மற்றொன்று. நான் சட்டமன்ற உறுப்பினராக இந்த அவையிலே இருந்தேன். 1997 மார்ச் 1 ஆம் தேதி எங்களுடைய புரட்சித் தலைவி, ராஜீவ் காந்தியைக் கொன்ற கொலையாளிகள் சிவராசன், தாணு அவர்களுடன் இருப்பது போன்ற ஒரு புகைப்படத்தினை இந்தச் சட்டமன்றத்திலே காட்டி, புரட்சித் தலைவிமீது கொலைக் குற்றம் சாட்டியபோது, அந்தப் புகைப்படத்திலே இருப்பவர்கள், சிவராசன், தாணு அல்ல, தர்மபுரியைச் சேர்ந்த வக்கீல்கள் என்று நான் விளக்கம் சொல்வதற்கு எழுந்தபோது, என்னை விளக்கம் கூறுவதற்கே அனுமதிக்காமல், என்னை இந்த அவையை விட்டு தூக்கி வீசியது அன்றைக்கு இருந்த அரசு என்று இந்த நேரத்திலே எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் முன்பாக உங்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது அவைக் குறிப்பிலே இருக்கின்றது. இல்லை என்று யாருமே சொல்ல முடியாது. இருந்தாலும் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்குக் கூறியிருக்கின்றார்கள். எதிர்க்கட்சிகளுக்குரிய பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதுதான் அவர்களுடைய பெருந்தன்மை.

சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் நான் கூறினேன். எங்களுடைய ஆட்சி வந்தவுடன் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு, தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கின்றேன். புரட்சித் தலைவி அவர்களும் கூறியிருக்கின்றார்கள். தவறுகள் கண்டு பிடிக்கப்பட்டு உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு தமிழகம் எங்கும் ஊராட்சி ஒன்றியங்களின் திமுக. ஒன்றியச் செயலாளர்கள், அரசு அலுவலகங்களில் பணியாற்றும் மக்கள் நலப் பணியாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய வரிப் பணம் மக்களுக்காகத்தான் செல்ல வேண்டுமே தவிர, மக்களுடைய வரிப் பணம் வீணாக கட்சிக்காரர்களுக்குச் செல்லக் கூடாது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன், முதன்முதலாக மக்கள் நலப் பணியாளர்களை வீட்டுக்கு அனுப்பும் கோப்பில் கையெழுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 10—40

இறுதியாக, மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களுக்கு ஒன்றை தெரிவித்துக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே கூறியதுபோல, தொல்காப்பிய உரை எழுத வேண்டுமென்ற உங்களுடைய நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள மக்கள் இன்றைக்கு உங்களுக்குஅவகாசம் கொடுத்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள். தொல்காப்பியத்திற்கு நீண்ட உரையை எழுதுங்கள். ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறி எனக்கு வாய்ப்பளித்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. பொன்முடி.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி பிரச்சினை குறித்து ஒரு விளக்கம் அளிக்க அனுமதிக்க வேண்டும். இந்தப் பிரச்சினை குறித்துத் தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உங்களுடைய உறுப்பினர் அவர்களைப் பேசச் சொல்லுங்கள். அடுத்து, டாக்டர் பொன்முடி பேசுவார். டாக்டர் பொன்முடி மூலமாகச் சொல்லுங்கள். பொன்முடிக்கு எல்லா விவரமும் தெரியும். நீங்கள் சொல்வதைக்கூடக் கேட்டு டாக்டர் பொன்முடி அவர்கள் உரிய விளக்கத்தைச் சொல்வார்கள். (குறுக்கீடு) உங்களுடைய உறுப்பினர் பேசவிருக்கிறார். அவரையே பேசச் சொல்லுங்கள். நீங்கள் ஆளாளுக்கு நேரத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது. டாக்டர் பொன்முடி அவர்களைப் பேச அழைக்கின்றேன். உரிய விளக்கத்தை அவர் சொல்வார்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலை குலைந்தாலும் நிலை குலையாத் தலைவராக, வஞ்சனைகள், சூழ்ச்சிகள், பொய்ப் பிரசாரங்கள், அனுதாப அலைகள் எல்லாம் தேர்தலிலே தற்காலிக தோல்விகளைக் கொடுத்தாலும் தமிழகத்து மக்களுக்காக இந்த 76 வயதிலும் 26 வயது இளைஞரைப் போல பாடுபட்டுக்கொண்டிருக்கிற எங்கள் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி இந்த ஆளுநர் உரையிலே நான் இங்கே என்னுடைய வாதத்தை வைக்க முற்படுகின்றேன். அதற்கு முன்பாக, நான்கு முறை விழுப்புரம்

தொகுதியிலே போட்டியிட்டு என்னை மூன்று முறை வெற்றி பெறச்செய்த விழுப்புரம் தொகுதி மக்களுக்கு இந்த அவையின் மூலமாக என்னுடைய உளமார்ந்த நன்றியை முதலில் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவர்னர் உரையைப் பொறுத்தவரையில் இதிலே புதியதாக ஒன்றும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. குறிப்பாக, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள்கூட இது பெரிய வரலாற்றுச் சாதனை என்று சுட்டிக்காட்டினார்கள். இந்தத் தேர்தல் பலவகையில் வரலாறு படைத்துள்ளது. இம்மாநில வரலாற்றில் இதற்கு ஈடு இணையே இல்லை என்று கவர்னர் உரையிலே எழுதப்பட்டிருக்கிறது. வரலாறு இல்லை என்று சொன்னால் ஒரு -- unique event -- இதுவரை நடைபெறாத ஒரு செய்தி நடைபெற்றிருந்தால் அதை வரலாறு என்று சொல்லலாம். ஆனால் இப்பொழுது அதுபோன்ற நிகழ்வுகள் நடைபெற்றதாக எனக்குத் தோன்றவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் சொன்னார், பல்வேறு பழிவாங்கல் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு எங்களுடைய தலைவி பதவியேற்று இருப்பதே ஒரு பெரிய வரலாற்று நிகழ்ச்சிதான் என்று. 13 . ஆண்டுக்காலம் இந்த நாட்டிலே ஆட்சியில் இல்லாமல் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு நெருக்கடிகளை எல்லாம் சமாளித்து கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் இங்கே ஆட்சிப் பொறுப்பை ஏற்றாரே அந்த வரலாறுதான் இன்றும் திரும்ப வந்திருக்கலாமே தவிர இது ஒரு புதிய unique event என்று சொல்வதற்கில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிட அனுமதிக்க வேண்டும். அவர்களுடைய தலைவர் 13 ஆண்டுக் காலம் வனவாசம் இருந்தார் என்பது உண்மை. ஆனால் ஆட்சியில் இல்லாத அந்த 13 ஆண்டுக் காலம் அவர் பெரும் சோதனைகளையும் வேதனைகளையும் தாங்கிக்கொண்டார் என்பது தவறான தகவலாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் 13 ஆண்டுக் காலம் வனவாசம் இருந்தபோது எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் ஆட்சியில் இருந்தார். அவர் எந்தவிதமான பழிவாங்கும் நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அவர்களுடைய தலைவரை எந்தவிதமான துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆட்படுத்தவில்லை. ஆகவே 13 ஆண்டுக் காலம் ஆட்சி அதிகாரம் இல்லாமல் இருந்தார்களே தவிர எந்தச் சிரமத்தையும், தொல்லையையும் அவர்கள் அனுபவிக்கவில்லை என்பதுதான் உண்மை.



**டாக்டர் க. பொன்முடி:** அந்த 13 ஆண்டுக் கால வரலாற்றில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பத்திரிகை எல்லாம் படித்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவேதான் தவறான தகவல்களை எல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கைதி உடையோடே சிறையிலே அடைக்கப்பட்ட காட்சிகளையெல்லாம் நாடு கண்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. மூன்று மாத காலம், ஆறு மாத காலம்...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 13 ஆண்டுக் காலத்தில் சில சமயம் அவர்களுடைய தலைவர் சிறைக்குச் செல்ல நேரிட்டபோது, அன்றைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அளித்த விசேஷ அனுமதியின்பேரில் அவர்கள் இல்லத்தில் சமைக்கப்பட்டிருந்த அறுசுவை உணவு அவருக்கு ஜெயிலில் வழங்கப்பட்டது என்பதுதான் உண்மை.

*முற்பகல் 10—45*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை சிறைக்கே செல்லவில்லை என்று சொன்ன அம்மையார் குறைந்தபட்சம் சிறைக்குச் சென்றார்கள்; வீட்டிலேயிருந்து வந்த உணவு அளிக்கப்பட்டது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டதற்காக நான் உளமார நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் சிறைக்குச் சென்றது உண்மைதான்; சிறைக்குச் செல்லவேயில்லை என்று கூறவில்லை. எனக்கு இல்லத்திலிருந்து எந்த உணவும் தர அனுமதிக்கப்படவில்லை. சிறையில் தந்த உணவைத் தான் நான் உண்டேன். ஆனால் அவர்களுடைய தலைவர் சிறைக்குச் சென்றபோதெல்லாம் ஒருநாள்கூட சிறையில் அளித்த உணவை உண்டதில்லை என்பதை இந்த நேரத்தில் நான் திட்டவட்டமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் சிறையிலே இருந்தபோது அவரோடு நானும் சிறையிலே இருந்தேன். இன்னும் சொல்லப்போனால், பக்கத்து அறையிலே இருந்தேன். ஒருநாள்கூட வீட்டிலேயிருந்து அவருக்கு எந்தவிதமான உணவும் வந்ததில்லை என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்லுகின்றேன். அதே அதிகாரிகள் இப்போதும் இருக்கிறார்கள். (கூச்சல்-குழப்பம்) நான் சிறை...

[2001 மே 28

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர் தெரிந்தே தவறான தகவல்களை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

* **பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிட்டுப் பேசுவது என்பதை நான் விரும்புவதும் இல்லை; இது நீடிக்க வேண்டுமென்றும் விரும்பவில்லை. சிறையில் நானும் அப்போது இருந்திருக்கிறேன். இரண்டு முறை இருந்திருக்கிறேன். சிறையில் இருந்தபோது சிறை உணவைத்தான் நாங்கள் விரும்பிச் சாப்பிட்டிருக்கிறோம். வீட்டு உணவு என்பது சிறைக்கு வருகிற பழக்கம் இல்லை. ஆனால் அம்மையார் அவர்கள் சிறையில் வைக்கப்பட்ட அந்தக் காலகட்டத்தில் அன்றைக்கே சட்டத் துறை அமைச்சர், சிறப்பு அனுமதிகள் வழங்க வேண்டுமென்று அதிகாரிகள் மூலமாகக் கேட்கப்பட்டு, அதற்காக அரசு ஆணையிட்டு, அந்த அம்மையாருடைய வசதிகளைக் குறைக்க வேண்டாமென்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சட்டமன்றத்தில் அன்றைக்கு சட்டத் துறை அமைச்சர் அந்த விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சினையை மேலும் நீடித்துப் பேசி ஏதோ ஒருவரை ஒருவர் சிறையிலே வைத்து அதன் மூலமாக ஒரு நோக்கத்தோடு செயல்பட்டதாக ஒரு எண்ணம் ஏற்படுவதை நான் விரும்பவும் இல்லை. ஆனால் நானும் சிறை உணவைத்தான் உண்டிருக்கிறேன். எனக்கு அந்த உணவு போதுமானது என்பதை அந்தக் காலகட்டத்தில்—கலைஞரோடு இருந்தபோது—அதைத் தெரிவிப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேராசிரியர்....

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சிறை உணவைத்தான் உண்டார் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. அவர் அப்படித்தான் உண்டிருப்பார். அதைப்போலவே வேறு சிறையில் இருந்த மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்களும் சிறை உணவைத் தான் உண்டிருப்பார்கள் என்பதை நாம் சந்தேகப்பட வேண்டிய அவசிய மில்லை. ஆனால் முன்னாள் முதலமைச்சர், அவர்களுடைய தலைவர், மீண்டும் சொல்கிறேன், சிறையில் இருந்தபோது ஒருநாள்கூட சிறை உணவை உண்டது கிடையாது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அளித்த அனுமதியின்பேரில் அவர் இல்லத்திலிருந்து வந்த உணவைத்தான் அவர் அருந்தினார் என்பதை மீண்டும் உறுதிபடக் கூறுகிறேன்.



2001 மே 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் அவர்கள் சொல்வதும் உண்மை. முதலமைச்சர் அவர்கள் சொல்வதும் உண்மை. பேராசிரியர் அவர்கள் சிறைச்சாலையிலே இருந்த காலத்திலே அவர் சிறைச்சாலை உணவைத்தான் உண்டார் என்பது எனக்குத் தெரியும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இருந்தபோது, சிறப்பு அனுமதி தந்து, வீட்டிலே இருந்து உணவு கொடுக்கப்பட்டது என்பதுதான் உண்மை. அந்த உண்மை எனக்குத் தெரியும்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்களும் அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களும் நம்மைவிட நெருங்கிய நண்பர்களாக இருந்ததன் விளைவாக, என்ன ஆணையிட்டு என்ன நடைபெற்றது என்பதைப்பற்றி நாம் விவாதிப்பதிலே அர்த்தமில்லை. தனிப்பட்ட நட்புணர்வோடு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எந்த அளவுக்கு நடந்துகொண்டார்கள் என்பதை கலைஞர் அவர்களே என்னுடைய இனிய நண்பர், உற்ற நண்பர் என்று பல முறை குறிப்பிட்டதை நான் கேட்டிருக்கிறேன். நண்பர்களுக்கிடையே நடைபெற்றதை அரசியல் ஆக்க வேண்டாம் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே 1996 வரை சிறைச்சாலையிலே சனிக்கிழமைகளிலே பார்வையாளர்கள் பார்க்கலாம். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 28 நாட்கள் இருந்தபோது முன்னாள் தமிழக முதல்வர் அவர்கள் சனிக்கிழமைகூடப் பார்க்கக் கூடாது என்ற ஓர் உத்தரவையிட்டிருக்கிறார்கள். இதை மாண்புமிகு பேரவைத் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் தளவாய் சுந்தரம் அவர்களுக்கு, விவாதம் ஆரோக்கியமாக முடிவு பெற்றிருக்கிறது. பேராசிரியர் அவர்களே ஏற்றுக்கொண்டார்கள். நண்பர்களுக்கு இடையே நடந்தது என்று; ஆகையினால் இந்தப் பிரச்சினைக்கு அத்தோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு பொன்முடி அவர்களை இப்போது பேச அழைக்கிறேன்.

* **திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நாள் முதலமைச்சர் எத்தனை முறை சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறார்? எத்தனைக் காலம் இருந்திருக்கிறார்? முன்னாள் முதலமைச்சர் போராட்டத்தின் அடிப்படையில் எத்தனை முறை சிறைக்குச் சென்றிருக்கிறார்? எத்தனை மாதங்கள், வருடங்கள் சிறையில் இருந்திருக்கிறார் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை இப்போது அதுவல்ல. சிறைச்சாலையிலே இருந்தபோது என்ன நடந்தது என்பதுதான் பிரச்சினை. அதுபற்றிய விளக்கம் சொல்லி முடிக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள்.

முற்பகல் *10—50*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்த செய்தியையே திசை திருப்பியிருக்கிறார்கள். கடந்த காலங்களிலே 5 ஆண்டுக் காலம் ஆட்சியில் இல்லாமல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருப்பது ஒரு unique event என்று சொன்னேன். 13 ஆண்டுக் காலம் ஆட்சியிலே இல்லாமலிருந்து கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, எண்ணிக்கையின் அடிப்டையிலேயும் இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி என்று சொல்ல முடியாது. இரண்டேயிரண்டு இடங்களைப் பெற்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் 1996-லே மிகப் பெரும்பான்மையோடு ஆட்சியைப் பிடித்திருப்பதையும் யாரும் மறுக்க முடியாது. ஏன், நீங்களேகூட. ஆனால் நாங்கள் இரண்டு இடங்களைப் பெற்றிருந்த நேரத்தில் அதைவிட அதிக எண்ணிக்கையை நீங்கள் பெற்றிருந்தீர்கள். ஆகவே இவற்றையெல்லாம் வரலாற்று நிகழ்ச்சி என்று சொல்வதைவிட, இதிலே நீங்கள் வரலாறு படைத்திருக்கிறீர்கள் என்று நான் குறிப்பிட விரும்பவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** அவர்களுடைய வாய்ப்பு வருகிறபோது தெளிவுபடுத்திப் பேசுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஏதோ சொல்ல விரும்புகிறார்.



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள். அதாவது நடைபெற்ற தேர்தலில், 2001-லே நடைபெற்ற தேர்தல் ஏதோ வரலாற்றுச் சிறப்பு மிக்கது இல்லை என்ற விளக்கத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் தேர்தலில் இப்போதும் போட்டியிட்டவன், 1999-லேயும் பாராளுமன்றத்திற்குப் போட்டியிட்டவன். 1999-லே நடைபெற்ற தேர்தலைப் பார்த்தீர்கள் என்றால் தன்னுடைய அதிகாரத்தை அரசானது முந்தைய அரசானது பயன்படுத்தி எல்லா வாக்குச் சாவடிகளிலும் rigging செய்துதான் தேர்தல் நடத்தினீர்கள். என்னுடைய கிருஷ்ணகிரி பாராளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் பார்த்தீர்கள் என்றால்கூட நேரடியாக ஓர் ஆசிரியர் கள்ள வாக்குகள் அளித்ததை, 40 வாக்குகளை உதய சூரியனுக்குப் போட்டதை, கையும் களவுமாகப் பிடித்து F.I.R. போட்டு அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல் நாகரசம்பட்டி என்ற பகுதியிலே பார்த்தீர்கள் என்றால், வாக்குச்சாவடிகளிலேயிருந்து எல்லா வாக்குகளையும் வெளியிலே எடுத்துச் சென்று போட்டார்கள்.

அதுபோல, கூட்டுறவுத் துறையிலே எப்படி தேர்தல் நடத்தினீர்களோ அதுபோலத்தான் பாராளுமன்றத் தேர்தலையும் நடத்தினீர்கள்.

அதே நிலைமையில்தான் இப்போது நடைபெற்ற தேர்தலிலும் இவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்ட பல நிகழ்ச்சிகளைக் கண்டோம். அப்படியிருந்தும் நாங்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று, 140 இடங்களிலே போட்டியிட்டு 133 இடங்களிலே வெற்றி (மேசையைத் தட்டும் ஒலி) பெற்றிருக்கின்றோம். அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியே தவிர வேறு ஒன்றும் கிடையாது. நீங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகப்படுத்தினாலும், நீங்கள் குறுக்கு வழியிலே செய்தாலும், எந்த வழியிலே தேர்தலை நடத்திக் காட்டினாலும் அதையெல்லாம் முறியடித்து புரட்சித் தலைவி அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால் இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியே தவிர வேறொன்றும் கிடையாது.

அது மட்டுமல்ல, 1991-லே வெற்றி பெற்ற அந்த வரலாற்றையும் நாம் மறந்துவிடக் கூடாது. அதைவிட வெற்றியானதை என்றுமே தி.மு.க. பெற்றதில்லை. நீங்கள் சொன்னதுபோல 2 இடங்களிலே உங்களைக்

கொண்டுவந்து வைத்தது இந்தப் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதை மறந்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் உண்மையான வரலாறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி அவர்கள் நேரடியாக ஆளுநர் உரைக்குச் சென்றுவிட்டால் பிரச்சினை தீரும்.

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலேதான் பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) ஆளுநர் உரையிலே வரலாற்று என்பதற்கு, என்ற சொல்லுக்குத்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதற்கு என்ன வரலாறு என்பதற்காக இதைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. இதிலே சில unique events நடைபெற்றிருக்கின்றன. என்னவென்றால், முன்னாள் மத்திய அமைச்சராக இருந்த திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள்மீது F.I.R. போட்டவுடனேயே அவர்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவ்வளவு அரசியல் நாணயத்தோடு நடந்துகொண்ட அந்த முதலமைச்சர் அவர்கள், இன்று நீதிமன்றத் தீர்ப்புகள் இருந்தும், தேர்தல் ஆணையத்தினுடைய தீர்ப்புகள் இருந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கெல்லாம்கூட—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன், ஆளுநர் உரைக்குள்ளே கொஞ்சம் சுற்றி வாருங்கள். உரைக்கு வெளியிலே போனால் பிரச்சினை வரும். சிக்கலில் மாட்டாதீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் 1998-ல் சேடப்பட்டி முத்தையா அவர்கள் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்லியது அன்றைய பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள், நான் அல்ல என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாஜ்பாய் அவர்கள் சொன்னதைக் கேட்டு அன்றைய கட்சித் தலைவர் அவர்கள் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்று அந்த நிலைமை மாறி அவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதைப்போல இன்று பல்வேறு அரசியல் பிரச்சினைகளை உருவாக்கியிருக்கிற ஒரு சூழலில் இந்த அரசு பொறுப்பேற்றிருக்கிறது. இது வரலாற்றிலே ஒரு unique event தான். அதை நான் மறுக்க விரும்பவில்லை.



அது மட்டுமல்ல, இந்த கவர்னர் அறிக்கையிலே பேசுகிறபோது வாக்காளர்கள் ஒரு கோடி பேருக்குமேல் வாக்களிக்க முடியவில்லை என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது உண்மை. இந்த வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கிறபோது எங்களுடைய முன்னாள் அமைச்சராக இருந்த ஆற்காடு வீராசாமி அவர்களுடைய பெயர்கூட வாக்காளர் பட்டியலிலே விடுபட்டு பிறகு அது புகார் செய்யப்பட்டு அதன்மூலமாகச் சேர்க்கப்பட்டதை இங்கே சட்டமன்றத்திலேயே அப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்று சொன்னால் அப்போது வாக்காளர் பட்டியல் தயாரிப்பதிலேகூட பல பிரச்சினைகள் இருந்ததை நாங்களே சுட்டிக்காட்டி இருக்கிறோம். ஏதோ அதிகார துஷ்பிரயோகத்தை இந்தத் தேர்தலிலே பயன்படுத்தினோம் என்று சொன்னார்களே அதுகூட இல்லாமல்...

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சியில் இருந்தபோது அதிகார துஷ்பிரயோகம் நடந்தது என்பதுதான் உண்மை. எங்கள் கழகத்தில் உள்ளவர்களே, விடுபட்ட வாக்காளர்களை, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 25 இலட்சம் பேர் என்ற கணக்கில் விடுபட்ட வாக்காளர்களைச் சேர்த்தார்கள். ஆனால் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இரகசிய உத்தரவிட்டு, இப்படிச் சேர்க்கப்பட்ட 25 இலட்சம் வாக்காளர்களில் 2 இலட்சம் பேரை வாக்காளர் பட்டியலில் சேர்த்தால் போதும், மற்றவர்களை விட்டுவிட வேண்டும் என்று உத்தரவிட்டதும் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாநிலத் தேர்தல் ஆணையம் தனித் தன்மை உடையதாக independent-ஆகப் பணியாற்றும் ஒன்று. நான் அந்தத் துறை அமைச்சராக இருந்தவன். அவர்கள் எனக்குத் தெரிவித்த செய்தி, எந்தத் தொகுதியிலே நான்கு விழுக்காட்டுக்கு மேல் வாக்காளர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டு இருக்கிறார்களோ, அவை மறுபரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்தார்கள். அந்த முறைப்படி அவர்கள் மறுபரிசீலனை செய்தார்கள். அந்த மறுபரிசீலனை என்பது, அரசு அலுவலர்களில் கீழ் நிலையிலே உள்ளவர்கள் மூலமாகத்தான் வீடு வீடாகச் சென்று பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று வந்தபோது, அவர்கள் எப்படிப்பட்ட ஒரு ஆய்வு நடத்தினார்கள் என்றால் ஒரு தெருவில் யாரோ இரண்டு பேர்

இல்லை என்றால், அந்தத் தெருவையே மொத்தமாக அடித்துவிடுவார்கள். அப்படி அடிக்கப்பட்ட அந்த வாக்காளர் பட்டியல்தான் தேர்தல் நேரத்திலே வைக்கப்பட்டது. ஒரு தெருவிலே உள்ள வாக்காளர்கள் 150 பேர், அவ்வளவு பேரும் அடிபட்டுப் போய்விடுவார்கள். அவர்கள் எந்தக் கட்சி என்பது யாருக்கும் தெரியாது. அதிலே ஏற்கெனவே சேர்க்கப்பட்டவர்கள் விடுபட்டுப் போனது, நீக்கப்பட்டது என்பது பின்னர் யாருக்கும் தெரிவிக்கப்படாமல் தேர்தல் நேரத்திலே வைக்கப்பட்டு, குறைந்தது 50 இலட்சம் பேருக்காவது வாக்குரிமை மறுக்கப்பட்டு இருக்கிறது. இந்த அந்தி திராவிட முன்னேற்றக் கழகத்தாலும் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. பொன்முடி பேசலாம்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு கோடி பேர்களும் identity card இருந்துகூட வாக்களிக்க முடியாத சூழ்நிலை எல்லாம் உருவாகி இருக்கிறது. இதைத் திருத்த வேண்டுமென்று தேர்தல் ஆணையத்திற்கு இந்த அரசு எழுதியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே அனைவரும் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும் என்பதைக்கூட வற்புறுத்தினால் நன்றாக இருக்கும். இந்த ஒரு கோடி பேரும் வாக்களித்திருந்தால் முடிவுகள் கூட மாறியிருப்பதற்கான வாய்ப்புகள் இருந்திருக்கலாம். (குறுக்கீடு) என்னுடைய கருத்தைச் சொல்லவே கூடாது என்கிறார்களே. வெற்றி பெற்றவர்கள் பல்வேறு கருத்துகளைச் சொல்லுகின்றபோது, நான் சொல்வதிலே என்ன தவறு இருக்கிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி பேசலாம். உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவரவர்களுக்கு வாய்ப்பு வருகிறபோது, கருத்துகளை எடுத்துச் சொல்லலாம். பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் தயவுசெய்து பேச வேண்டாம்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் உயர் அலுவலர்களும், காவல் துறையினரும், மன உறுதியும், ஊக்கமும் குன்றியிருப்பது இவ்வரசின் கவனத்திற்கு வந்துள்ளது என்று இந்த ஆளுநர் உரையிலே குறிக்கப்பட்டிருந்தது. உண்மைதான். இந்த ஆட்சி மாறிய உடனே, என்னிடம்கூடப் பல அதிகாரிகள் வந்தார்கள். இந்த ஐந்து ஆண்டுக் காலம் பிரச்சினை இல்லாமல்



இருந்தோம். இப்போது எப்படி நடக்குமோ என்று பல பேர் மன உறுதியும், ஊக்கமும் குன்றியிருந்த நிலைமையிலே அதையும் மாற்றுவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்லியிருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த கவர்னர் உரையைப் பொறுத்தவரையில்...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அவர்களுடைய ஐந்து ஆண்டு ஆட்சிக் காலத்தில், I.A.S. அதிகாரிகளும், I.P.S. அதிகாரிகளும் பிரச்சினை இல்லாமல் இருந்தார்கள் என்பது உண்மை அல்ல. அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், முதன்முறையாக, I.A.S. அதிகாரிகளும், I.P.S. அதிகாரிகளும், கைது செய்யப்பட்டு அவமானப்படுத்தப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார்கள் என்று நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக, தவறு செய்தவர்கள்மீது, நீதிமன்றங்கள் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இந்தத் தேர்தல் அறிக்கையைப் பொறுத்தவரையில், கடந்த கால கலைஞர் ஆட்சியிலே நடைபெற்றிருக்கிற நல்ல பணிகளையெல்லாம் இதிலே மேலோட்டமாகச் சொல்லி இருக்கிறீர்களே தவிர புதிதாக ஒன்றும் இருப்பதாகத் தோன்றவில்லை. குறிப்பாகக் கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற நல்ல செயல்கள் என்று நீங்கள் சுட்டிக்காட்டாவிட்டாலும், அவற்றை ஏற்றுக்கொண்டு, அவற்றை விரிவாக்கம் செய்திருக்கிறீர்கள். உதாரணமாக இந்தியாவிலேயே கிராமப்புறத்திலே படிக்கிற மாணவர்களுக்குத் தொழிற்கல்வி நிலையங்களில் 15 சதவீதம் இட ஒதுக்கீடு உண்டு என்று முதன்முதலாக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தவரே, முன்னாள் முதல்வர் கலைஞர் என்பதை நாடு நன்கு அறியும். அதை ஏற்றுக்கொண்டு 15 சதவீதத்தை இன்று 25 சதவீதமாக உயர்த்தியிருக்கிறீர்கள். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

முற்பகல் 11—00

அது மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கிற, கிராமப்புறத்திலே இருக்கிற மாணவர்கள் அனைவருக்கும் இலவச bus pass என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்ததே தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர்தான். அதையொட்டி உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே நீங்கள்

குறிப்பிட்டிருந்தீர்கள். 12-ஆம் வகுப்பு வரை படிக்கிற மாணவர்களுக்கான இலவச bus pass மட்டுமின்றி, கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள், பல்கலைக்கழகத்திலே படிக்கின்ற மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள் என்று அனைவருக்கும் இலவச bus pass வழங்கப்படும் என்று உங்கள் தேர்தல் அறிக்கையிலே நீங்கள் சொல்லியிருந்தீர்கள். ஆனால் அதைப்பற்றி இந்த கவர்னர் உரையிலே எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்று நான்கு நாட்களுக்குள் தயாரிக்கப்பட்ட ஆளுநர் உரையில் எல்லாவற்றையும் சொல்லிவிட முடியாது. ஓரளவுக்குச் சொல்லியிருக்கிறோம். எங்கள் தேர்தல் அறிக்கையிலே பல வாக்குறுதிகளை அளித்திருக்கிறோம் என்றால், ஐந்தாண்டுக் கால ஆட்சிக் காலத்தில் படிப்படியாக அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்றுதான் பொருள். (மேசையைத் தட்டும் ஒலி) இனி இந்தக் கூட்டத்தொடரை அடுத்து, பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது. அப்போதும் பல அறிவிப்புகளைச் செய்வோம் என்று நினைவூட்ட விரும்புகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற மாணவிகளுக்கு சைக்கிள் கொடுக்கிறோம் என்று சொன்னபோது, இதையும் சேர்த்துச் சொல்லியிருக்கலாமே என்ற அளவிலேதான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்குச் செய்ய வேண்டுமென்ற ஆசைதான். ஆனால் அவர்கள் கஜானாவை காலியாக விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்களே, என்ன செய்வது? (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கிற நிதியை வைத்துக்கொண்டு இப்போது இவ்வளவுதான் செய்ய முடியும்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கம் சொல்ல வேண்டிய நிலைமை எனக்கு ஏற்படுகிறது. கருத்து தெளிவானால்தான் உண்மைகளைப்பற்றி யாரும் வாதாட முடியும். கஜானாவை காலியாக வைத்துவிட்டுப் போனார்கள் என்று



சொல்கிறபோது, நாளைக்கு அ.தி.மு.க. ஆட்சி வரும், அம்மையார் முதலமைச்சராக வருவார், காலி செய்துவிட வேண்டுமென்று செய்ததாக தயவுசெய்து கருதக்கூடாது. காலியாக ஆயிற்றா, அந்தப் பணம் வேறுவிதமாக அரசாங்கத்திலே பெரும் நிதியாக, உணவுப் பொருளாக வாங்கி வைக்கப்பட்டிருக்கிறதா என்பதுகூட வேறு. கலைஞரோ, நாங்களோ, நாங்கள்தான் ஆட்சிக்கு வருவோம் என்று உறுதியாக நம்பிக்கொண்டிருந்தோம். இன்றைக்கு ஏமாந்திருக்கலாம். நீங்கள் வெற்றி பெற்றிருக்கலாம். நாங்கள் தோற்றிருக்கலாம். அப்படி நாங்கள் உறுதியாக நம்பிக்கொண்டிருந்தபோது, கல்வித் துறைக்கோ, மற்ற துறைகளுக்கோ இன்னும் பல கடமைகள் செய்யவேண்டுமென்று விரும்பி இருந்தபோது, அந்த நோக்கத்தோடு இருக்கிறபோது, கஜானாவை காலியாக்குகிற நோக்கம் எங்களுக்கு வருமா? முதல் நாள் வரையில் ஆட்சிக்கு வருவதாக நம்பியிருந்து, மக்களுடைய ஆதரவு இருப்பதாக ஒரு தோற்றத்தை நாங்கள் நம்பியிருந்தபோது, இந்தத் தோல்வியை நாங்கள் இன்றைக்கு ஏற்றுக்கொண்டிருந்தாலும்கூட, வெற்றி பெறுவோம் என்று நம்பியிருந்தபோது, கஜானாவை காலி செய்கிற நோக்கம், முதலமைச்சருக்கோ, மற்றவர்களுக்கோ வருவதற்கு வாய்ப்பில்லை என்பதை விளக்குவதற்கு மட்டும் இதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியாளர்கள் வேண்டுமென்றே செய்தார்களோ, செய்வதை அறியாமல் செய்தார்களோ, எப்படியோ இன்றைய நிலைமை, நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான் எங்களுக்கே தெரிய வந்தது. இன்றைய நிலைமை அரசு கஜானா காலியாக உள்ளது. 1996-ல் நாங்கள் ஆட்சியை விட்டு இறங்கியபோது தமிழகத்தின் பொருளாதார நிலைமை, நிதி நிலைமை மிகவும் ஆரோக்கியமாக இருந்தது. அன்றையதினம் 874 கோடி ரூபாய் உபரி நிதியை வைத்துவிட்டுச் சென்றோம். ஆனால் இன்று நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற சமயத்தில் பார்த்தால் ரு. 700 கோடிக்கு மேல் பற்றாக்குறை இருக்கிறது. நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. Deficit budget இருக்கிறது. இதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி.

**பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். குறுக்கிடுவது நோக்கமல்ல. மத்திய நிதிக் குழு மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நிதி இவ்வளவு வழங்கும் என்று

எதிர்பார்த்து நிதித் துறைச் செயலாளர் அரசுக்குத் தெரிவித்து அந்தக் கருத்தின் அடிப்படையில் வரவு-செலவுத் திட்டம் நிறைவேற்றப்பெற்றது. மத்திய நிதிக் குழு வேறு ஒரு formula-வை வகுத்துவிட்டதன் காரணமாக, வளர்ந்த மாநிலங்கள் பாதிக்கப்பட்டன. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எதிர்ப்பு தெரிவித்தது மட்டுமல்ல, அதை மாற்றியமைக்க வேண்டும், இன்னும் சொல்லப்போனால், வளர்ந்த மாநிலங்களுக்குத் தனியாக ஊக்கத் தொகையைத் தருவதன் மூலமாகத்தான் நீங்கள் ஏற்படுத்திய இந்த இழப்பை நாங்கள் ஈடுகட்ட முடியும் என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து அந்த முயற்சியிலே இந்த அரசு ஈடுபடவேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

*(மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை எழுந்து நின்றார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சருக்கு, அதுபற்றி முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். நான் ஒரே ஒரு கருத்தைச் சொல்கிறேன். கஜானா காலி என்பது உண்மை. அதை யாரும் மறுக்க முடியாது. அனைவரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எதிர்க்கட்சித் தலைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இவர்கள் ஏதோ நினைத்ததுபோல வெற்றி பெறுவோம் என்ற தவறான எண்ணம். அதை இப்போது சாக்கு போக்கு சொல்கிறார்கள். உண்மை அதுவல்ல. இவர்களுக்குத் தெரியும், வெற்றி பெற முடியாது என்று. தெரிந்துதான் எப்படியாவது வெற்றி பெறவேண்டும் என்பதற்காக, சில திட்டங்களை அவசர அவசரமாகப் போட்டு, பணத்தையெல்லாம் செலவு செய்துவிட்டார்கள். அப்படிச் செய்துவிட்டதன் காரணமாகத்தான் — நாங்கள் ஆட்சிக்கு வருவோம் என்று தெரியும் — தெரிந்த பிறகு — இந்தப் பளு பூராவும் புரட்சித் தலைவிக்குத் தரவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் செய்திருக்கிறார்களேயொழிய, வேறொன்றும் கிடையாது.

அதுமட்டுமல்ல, எதிர்காலத்தில் ஒரு நிலைமையைக் கொண்டுவந்தால் நன்றாக இருக்கும். எந்தக் கட்சி ஆட்சியை விட்டுச் செல்கிறதோ அந்தக் கட்சி கஜானாவைக் காலி செய்துவிட்டால், அந்தப் பற்றாக்குறையை அந்தக் கட்சிதான் ஏற்றுக்கொள்ளவேண்டுமேயொழிய பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அத்தகைய ஒரு நிலைமை அந்த ஆட்சிக்கு வந்தால்தான், தேர்தல் நேரத்திலே தவறான திட்டங்களைத்



தந்து, எப்படியாவது வெற்றிபெற வேண்டுமென்ற குறுக்கு வழியை விட்டுவிடுவார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11—05*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியொரு எண்ணம் இருக்குமானால், அரசமைப்புச் சட்டத்திலே ஒரு திருத்தம் தாராளமாகக் கொண்டுவந்து நிறைவேற்றிக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன். அது அனைவரையும் கட்டுப்படுத்தக்கூடிய சட்டமாக இருக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அந்த மாதிரிக் கொண்டு வந்தால் ஏற்றுக்கொள்வோம்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத்தில், பழைய ஆட்சியில் நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, இதை மிகக் கடுமையாகச் சொல்லி இருக்கிறேன். ஏனென்றால், vote on account வரும்போது, ஆயிரம் கோடி ரூபாய்க்குப் பற்றாக்குறையை நீங்கள் எப்படிக் கொண்டுவரலாம் என்று பேசியிருக்கிறேன். அது, உண்மையிலேயே அந்த அரசு வேண்டுமென்றே இந்த அரசு மீது மிகப் பெரிய ஒரு பொறுப்பை ஏற்படுத்திவிட்டார்கள் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி)

* **திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று. கண்டிப்பாக மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருந்தது; எங்களுடைய தலைவருக்கு இருந்தது என்று பேராசிரியர் அவர்கள் - மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக ஆட்சிக்கு வருவோம் என்று நம்பியிருப்பாரேயானால், இதுதான் நான் சந்திக்கும் கடைசித் தேர்தல் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொல்லி இருக்கமாட்டாரே! (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். கலைஞர் அவர்கள், தான் நின்ற தேர்தல்கள் இத்தனையாகிவிட்டன, தொடர்ந்து தான் தேர்தலிலே நிற்கவில்லை என்று சொன்னாரே தவிர, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே நிற்காது என்று அவர்கள் சொல்லவில்லை, நான்கூட அதை ஏற்றுக்கொள்ள வில்லை.

[2001 மே 28

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்தவரையில் deficit budget என்பதே, ஏதோ தீண்டப்படாத ஒன்று என்ற அடிப்படையிலே சொல்வது, தவறான ஒரு வாதமாகும். அரசியல் சட்டத்தைத் திருத்துவீர்களோ இல்லையோ, நீங்கள் ஐந்தாண்டுகள் இருக்கப் போகிறீர்கள். குறைந்தபட்சம் உங்களுடைய ஆட்சியிலேயாவது deficit budget இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு நீங்கள் உத்தரவாதம் அளித்தாலே போதும். ஆகவே deficit budget என்பது, எந்த நிதிநிலையிலேயும் வளர்ச்சிக்குரிய ஒரு காரணமாக எங்கும் நிகழ்ந்துகொண்டிருக்கிற ஒரு உண்மைதான். ஆகவே நீங்கள் ஏதோ 700 கோடி ரூபாய் வைத்தோம் என்று சொன்னால் — கிராமத்திலே சொல்வார்கள், கிராமத்து விவசாயி, ஒரு இலட்சம் ரூபாய் பணத்தைச் சம்பாதித்து, எங்கே வைப்பது என்று தெரியாமல், பெட்டியிலே போட்டு பூட்டி வைத்துக்கொள்வான். கேட்டால், எப்பொழுது பார்த்தாலும், நான் ஒரு இலட்சம் ரூபாய் வைத்திருக்கிறேன்; ஒரு இலட்சம் ரூபாய் வைத்திருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால் உண்மையிலேயே வளர்ச்சிப் பணியிலே இருக்கிற விவரம் தெரிந்த ஒரு விவசாயியாக இருந்தால், அதே ஒரு இலட்ச ரூபாயை வங்கியிலே போட்டு, கடனைப் பெற்று ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து, வளர்கிறபோது — வங்கிக்குக் கடன் கூட இருக்கும் — அது வளர்ச்சி. ஏதோ, அந்தக் காலத்து விவசாயியைப்போல, பெட்டியிலே வைத்துப் பூட்டிக்கொண்டு, ஒரு இலட்சம் ரூபாயை வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இருப்பதைப்போல, நாங்கள் மிச்சம் வைத்துவிட்டுச் சென்றோம்; மீதி வைத்துவிட்டுச் சென்றோம் என்று சொல்வது என்பது, ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்குச் சரியாக இருக்காது.

ஐந்தாண்டுக் கால கலைஞருடைய ஆட்சியிலே ஏற்பட்டிருக்கிற வளர்ச்சிப் பணிகள், பொருளாதார வளர்ச்சிகளையெல்லாம் நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும். இந்த கவர்னருடைய அறிக்கையில் நீங்கள் மேலோட்டமாகச் சிலவற்றைச் சொல்லியிருக்கிறீர்கள். கணினிமயம் ஆக்குவதைப்பற்றி, குறிப்பாக இந்தியாவிலே தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னணி மாநிலம் தமிழகம்தான் என்ற சிறப்பு நிலையை உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது கடந்த கால கலைஞருடைய ஆட்சியில் தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருந்த ஒன்று. இந்தியாவிலேயே தகவல் தொழில்நுட்பத்திற்காகத் தனிக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு என்று கடந்த ஐந்தாண்டுகளில் எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டியிருக்கின்றன.



2001 மே 28] [டாக்டர் க. பொன்முடி]

அது உண்மை. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கென்று அரசின் தனித் துறையை உருவாக்கிய மாநிலமே தமிழ்நாடுதான். இந்தியாவிலேயே அதிகமான மென்பொருள் வல்லுநர்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடுதான். இந்தியாவிலேயே மென்பொருள் திட்டங்கள் தயாரிப்பதற்குச் சிறந்த இடம் சென்னைதான் என்று NASSCOM என்ற அமைப்பு ஆராய்ந்து அறிவித்துள்ளது.

"The DQ Week" என்ற கம்ப்யூட்டர் வார இதழ், "What Sinha has apparently missed out is one city where lot more software action is taking place quietly. without Tamil Nadu Chief Minister M. Karunanidhi having to shout from the roof-tops about the silent revolution going on in Chennai" என்று குறிப்பிட்டிருக்கிறது.

*முற்பகல் 11—10*

கடந்த மாதம் 26-4-2001 அன்று நடுநிலை நாளேடு ஒன்று எழுதிய தலையங்கத்தில், 1999-2000-ல் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருளினுடைய மதிப்பு 1914 கோடி ரூபாய். 2000-2001-ல் 3116 கோடி ரூபாய். 1993-94-ல் மென்பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுடைய எண்ணிக்கை தமிழகத்திலே பத்துதான். கடந்த காலத்தில், கலைஞருடைய ஐந்து ஆண்டுக்கால ஆட்சியில் 764 மென்பொருள் உற்பத்தி நிலையங்கள் இங்கே உருவாகி இருக்கின்றன. ஏற்றுமதி சுமார் ரூ. 15 கோடியிலேயிருந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பொன்முடி, அமைச்சர் அவர்கள் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் கம்ப்யூட்டர் டெக்னாலஜியைப் பொறுத்தவரைக்கும், ஏதோ ஒரு பெரிய முன்னேற்றம் ஏற்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறான அடிப்படையிலானது ஆகும். காரணம், மாநில அரசு இதற்காக ஏதோ ஆயிரம் கோடி, இரண்டாயிரம் கோடி என நிதியை இந்த மின்னணுவியல் துறையினுடைய வளர்ச்சிக்கு ஒதுக்கீடு செய்யவில்லை.

மறைந்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலும், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும், பொறியியல் கல்லூரிகள், நூற்றுக்கணக்கான பொறியியல் கல்லூரிகள் தமிழகத்திலே தொடங்கப்பட்டதை மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அதனுடைய நோக்கமே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே, Arts education has already outlived its utility என்று சொல்லி கலை படிப்பு மூலமாக வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக உருவாகிறதேயொழிய self-employment போன்றவை உருவாக வழியில்லை என்ற ஒரு முடிவுக்கு வந்து, பொறியியல் கல்லூரிகள் எண்ணற்ற அளவில், ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முதலீட்டில் தமிழகத்தில் தொடங்கப்பட்ட காரணத்தால் the technical experts in Computer Technology and Information Technology-ஐ உருவாக்கிய பெருமை புரட்சித் தலைவர் அவர்களுக்கும், புரட்சித் தலைவி அவர்களுக்குமே சாரும். அப்படி கம்ப்யூட்டர் இன்ஜினியர்களை இலட்சக்கணக்கில் உருவாக்கிய காரணத்தால், அவர்கள் எல்லாம் அமெரிக்கா சென்று வேலைவாய்ப்பினை பெறக்கூடிய ஒரு வாய்ப்பை, இந்திய துணைக் கண்டத்திலேயே முதல்முறையாக ஒரு Computer Engineering Graduates Revolution என்று அந்த Revolution-ஐ, புரட்சியை - புரட்சித் தலைவி அவர்களும், புரட்சித் தலைவர் அவர்களும் உருவாக்கிய காரணத்தால் வெளிநாடுகளிலிருந்து, குறிப்பாக, அமெரிக்க மண்ணிலிருந்து அவர்கள் இங்கே வந்து, இந்தத் தொழிலைத் தொடங்கினார்கள். அரசு ஓரளவிற்கு Infrastructure facility-ஐத் தந்ததேயொழிய அரசு ஏதோ கோடி கோடியாக பட்ஜெட்டிலே allocation மூலமாக நிதியைத் தந்து, இந்த வெற்றியைச் செய்தது என்பது தவறான தகவல். இந்தப் பெருமை புரட்சித் தலைவி மற்றும் புரட்சித் தலைவர் இவர்களையே சாரும் என்று சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பொன்முடி, நீங்கள் பேசத் தொடங்கி அரைமணி நேரம் ஆகியிருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று நிமிடங்களிலே உங்களது உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நான் 5 நிமிடங்கள் கூடப் பேசவில்லை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. கொஞ்சம் குறுக்கீடு வராமல் பேசுவதுதான் எதிர்க்கட்சிக்கே அழகு.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கணினி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் - இந்த மாதிரி அமைச்சர் பதில் சொன்ன பிறகு, அதற்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது அல்லவா! புரட்சித் தலைவர் அவர்கள் மறைந்தது 1987. அதற்குப் பிறகு, 7 ஆண்டுகள் கழித்து 1994-95ல் இங்கேயிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருளுடைய பங்கு 17 கோடி ரூபாய். 7



ஆண்டுகளுக்குப் பிறகு, அதனுடைய impact என்று சொல்ல முடியாது. அதனுடைய impact உண்மையிலேயே நாங்களும் நிதி உதவியைச் செய்தோம் என்று எப்போதும் சுட்டிக்காட்டவில்லை. திட்டங்களை வகுத்திருக்கிறோம். தனித் துறையை உருவாக்கியிருக்கிறோம். வெளிநாட்டினர் இங்கே வந்து மூலதனம் செய்வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். டைடல் பார்க்-ஐ உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம். ஆகவே தனியான திட்டம், ஒரு தனியான துறை இவற்றை உருவாக்கி இந்தியாவிலேயே மென்பொருள் உற்பத்தியில் தமிழகம்தான் முதலிடம் என்ற நிலையை உருவாக்கியவர் முன்னாள் முதல்வர் கலைஞர் என்ற வாதத்தை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே செய்ததைக்கூட நீங்கள் ஏற்றுக்கொள்ள என்ன தயக்கம் இருக்க வேண்டும்? இது கலைஞருடைய ஆட்சியிலே நடைபெற்றிருக்கிறது.

மற்றொன்று இந்த கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவோம் என்று உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். அந்த ஓய்வூதியத்தைப்பற்றி, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு என்பதைக் கோடிட்டுக் காண்பித்திருக்கிறீர்கள். அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு உரிய ஊதியம் கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்ற வரிகள் மட்டுமே இருக்கிறதே தவிர, அவர்களுக்காக 12 வாரியங்களை உருவாக்கி, கிட்டத்தட்ட எட்டு இலட்சம் உறுப்பினர்களைச் சேர்த்து, அவர்களுக்குப் பல சலுகைகளை கலைஞருடைய அரசு அறிவித்திருந்தது. குறிப்பாக 10 ஆம் வகுப்பு படித்த மாணவர்களுக்கு 1000 ரூபாய், 12 ஆம் வகுப்பு தேர்வு பெற்றிருந்தால் 1500 ரூபாய், இதுபோன்று படிப்பதற்கான சலுகைகள், விபத்திலே உயிர் இழந்தால் ஒரு இலட்சம் ரூபாய், இயற்கையாக மரணமடைந்தால் 20 ஆயிரம் ரூபாய் என்றெல்லாம் பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் தொடர்ந்து இந்த அரசு நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் தேர்தல் அறிக்கையிலே சொன்னதைப்போல அந்த அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஓய்வூதியத்தையும் நீங்கள் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே,...

**டாக்டர் க. பொன்முடி:** I am not yielding. கொஞ்சம் பேசி முடித்துவிடுகிறேன். இப்படியே நேரமாகிக்கொண்டிருக்கிறது. நான் பேசிய பிறகு அவர் பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து கடல்சார் வாரியம். இங்கே பல்வேறு துறைமுகங்கள் உயர்த்த வேண்டுமென்று கோடிட்டுக் காண்பித்திருக்கிறீர்கள். அதுவும் கலைஞருடைய ஆட்சியில், அதற்காக தனி வாரியம், கடல்சார் வாரியம் — Maritime Board உருவாக்கப்பட்டு, குளச்சல் துறைமுகத்திலே மேலைநாட்டினுடைய துணையோடு அதைப் பராமரிக்கிற, விரிவுபடுத்துகிற திட்டமும் கையெழுத்தாகி நடைமுறைப்படுத்த கடந்த ஆட்சியிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே கடந்த காலங்களிலே கலைஞருடைய ஆட்சியிலே நடைபெற்றவற்றை எல்லாம் பல நிலைகளிலே இதிலே நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். அவை தொடரட்டும். நீங்கள் எப்படியிருந்தாலும் அவருடைய அடித்தளத்தைத் தொடர்ந்துதான் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

*முற்பகல் 11—15*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உழவர் சந்தையைப்பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். செயல்படாத உழவர் சந்தை என்று சொன்னார்கள். ஆனால் என்னுடைய சந்தேகம் எல்லாம், செயல்பட்டுக்கொண்டிருக்கிற உழவர் சந்தைகளையும் செயல்படாமல் ஆக்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்றைய பத்திரிகைச் செய்திகளை தயவுசெய்து முதலமைச்சர் அவர்கள் படித்துப் பார்க்க வேண்டும். திண்டுக்கல்லிலே - இந்த உழவர் சந்தைகளுக்கு இலவசமாக காய்கறிகளை ஏற்றிக்கொண்டு வருவதற்கு உழவர்களுக்கு வசதியாக பேருந்து வசதிகள் செய்து கொடுப்பதுதான் உழவர் சந்தைகளின் நோக்கம். ஆனால் இன்று அந்தப் பேருந்துகள் எல்லாம் நிறுத்தப்பட்டுவிட்டன. உழவர்களுக்காக விடப்பட்ட பேருந்துகள் நிறுத்தப்பட்டுவிட்டன என்று பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. இப்படிச் செய்வதன் மூலமாக, உழவர் சந்தைகளை தோல்வியுறச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்துவிடக்கூடாது என்ற அடிப்படையிலேதான் இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உழவர் சந்தை என்பது உழவர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் வாய்ப்பாக இருக்கின்ற ஒன்று. விவசாயிகளைப் பொறுத்தவரையில்— (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு தலைவர் அவர்களே—

222386



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ஒரே ஒரு விளக்கம். அவர் உழவர் சந்தைபற்றிச் சொல்கிறார். அதற்கு ஒரு விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. நானும் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன்தான். சந்தேகம் இருக்காது என்று நினைக்கிறேன். காலையிலே எழுந்து எங்களுடைய வேலை என்னவென்றால், மாட்டுக்கு புல் போடுவோம்ங்க; பயிர்த் தொழில் செய்வோம்ங்க; பிறகு தண்ணீர் பாய்ச்சுவதைப் பார்ப்போம்ங்க — இவைதான் உழவர்களுடைய வேலை. அந்த வேலையை விட்டுவிட்டு, நீங்கள் சொன்னமாதிரி, bus-இலே free-யாகப் போகலாம் என்று சொல்லிக்கொடுத்துவிட்டீர்களல்லவா! இப்போது என்ன செய்கிறார்கள் என்றால், சிலர்-நான் எல்லோரையும் சொல்லவில்லை-சிலர் என்ன செய்கிறார்கள் என்றால், காய்கறிகளை எடுத்துக்கொண்டு போகிறார்கள். அதனால் அவர்களுடைய உழவர் தொழிலும் போச்சு. Town-க்குப் போய் உட்கார்ந்துகொண்டு எடை போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். வியாபாரி செய்கிற வேலையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதைச் சரியாக எடை போடுவதற்கும் தெரியவில்லை. எடை போடுவதற்குத் தெரியாமல் வியாபாரம் பண்ணிய பிறகு- இது 11 மணி வரை போகிறது-இந்த மாதிரி போன பிறகு என்ன செய்கிறார்கள் என்றால், இருக்கிற பணத்தை சில பேர் என்ன செய்கிறார்கள் என்றால், எதிரிலே வேறு கடையை பார்க்கிறார்கள்; காய்கறி விற்றவுடனே எதிரிலே இருக்கிற வேறு கடைக்குப் போய் செலவு செய்துவிட்டு, உருண்டு புரண்டு போய்ச் சேருவதற்குள் இரவாகிப் போய்விடுகிறது. முன்னேயாவது, காய்கறிகளை அங்கே வீட்டிலே விற்கும்போதாவது பெண்களுக்குப் பணம் கிடைக்கும்; விவசாயம் செய்வதற்கும் நன்றாக இருந்தது. பெண்கள் செலவு செய்ய வசதியாக இருந்தது. இப்போது இவர்களுக்கு உழவர் கடை வந்த பிறகு என்ன ஆகிவிட்டது என்றால், உழவர்களை எல்லாம், வியாபாரம் செய்யத் தெரியாதவர்களை எல்லாம் போகச் சொல்லிவிட்டு, உழவும் செய்ய முடியாமல் அங்கே போய் விற்றுவிட்டு, சாராயத்தை சிலர் குடித்துவிட்டு, வீட்டுக்கு பணத்தை எடுத்துச் செல்லாத ஒரு அவல நிலைமைதான் உழவர் சந்தையில் வந்திருக்கிறது; உண்மை நிலைமை வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். உழவர் சந்தையைப்

பொறுத்தவரைக்கும், இன்னும் நடைமுறையில் இருக்கின்ற, மிக்க வேதனைக்குரிய ஒரு முறைகேடு என்னவென்றால், ஒரு நகரத்திற்கு அருகிலே ஒரு உழவர் சந்தை அமைக்கப்படுகிறபோது, பக்கத்திலே 2 கிலோமீட்டர், 3 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள உழவர்கள் அங்கு வருகிறார்கள். ஆனால் 15 கிலோமீட்டர், 10 கிலோமீட்டர், 8 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிற உழவர்கள் எல்லாம் அங்கு வருவதில்லை. மாறாக அந்த உழவர் சந்தையிலே திமு.க.-காரர்கள் - நான் ஆதாரத்தோடு சொல்கிறேன், திமுக-காரர்கள் போலி உறுப்பினர் அட்டையை வைத்து போலித்தனமாக உறுப்பினர்களாக, உழவர்களாக அங்கு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். பல இடங்களில் அந்த நிகழ்வுகள் இருக்கின்றன. அதிலே தரகர்களை நாம் ஒழிக்க வேண்டும். இடைத்தரகர்களை ஒழித்துவிட்டு, உழவர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையே இடைத்தரகர்கள் இல்லாமல் இருக்கின்றபோதுதான், உழவர்கள் பலனை அடைவார்கள் என்பதுதான் உண்மையான நோக்கம். அந்த நோக்கம் ஈடேறாமல், இடைத்தரகர்கள், போலி உறுப்பினர் அட்டைகளை வைத்துக்கொண்டு, உழவர்கள் என்ற பெயரில், உழவர் சந்தை மூலமாக உழவர்களின் இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள் என்பதுதான் உண்மை.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான செய்தி. அவரிடம் கேள்வி கேட்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு போலித்தனமான அட்டை வைத்துக்கொண்டு இருப்பதைக் கண்டுபிடிப்பதற்கு ரொம்ப கஷ்டமா? அதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடாதா? அதையெல்லாம் திருத்தி அந்தச் சந்தையை மறுபடியும் ஊக்குவிக்கக்கூடாதா? ஒரு திட்டம் என்றால், சில தவறுகள் நடக்கலாம். ஆனால் அரசு அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து சீரமைப்பதுதான் முக்கியம். அதற்காக அதைக் கலைத்தே விடவேண்டுமா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவாக இது குறித்த விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். நன்றாக இயங்குகிற உழவர் சந்தைகளை, முறைகேடு இல்லாத உழவர் சந்தைகளைக் கலைப்பது என்பது அரசின் நோக்கமே அல்ல. செயல்படாமல் இருக்கிற உழவர் சந்தைகளை, முறைகேடுகள் உள்ள உழவர் சந்தைகளை தக்க நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என்பதுதான் உழவர்களின் நலன் கருதி அரசு எடுத்து இருக்கிற முடிவாகும்.



*முற்பகல் 11—20*

**திரு. கோ.சி. மணி:** செயல்படாமல் இருந்து அதைக் கலைக்கிறீர்கள் என்றால் அதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் முறைகேடுகள் நடந்திருக்கின்றன, அதை நாங்கள் கலைக்கிறோம் என்றால், ஏன் அதைத் திருத்தக்கூடாதா? மீண்டும் அதை நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடக் கூடாதா? அல்லது அதை நடத்த அனுமதிக்கக் கூடாதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆளுநர் உரையிலே முறைகேடுகள் நடக்கின்ற உழவர் சந்தைகள் கலைக்கப்படும் என்று சொல்லவில்லை. செயல்படாத உழவர் சந்தைகளை மூடிவிடக் கருதியுள்ளது என்றுதான் சொல்லியிருக்கிறோம். நீங்கள் நன்கு ஆளுநர் உரையைப் படித்துப் பார்க்குமாறு வேண்டுகிறேன்.

**திரு. கோ.சி. மணி:** முதலமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்துதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையில் தெளிவாக விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். செயல்படாமல் உள்ள உழவர் சந்தைகள்தான் மூடப்படும் என்று சொல்லி விட்டார்கள். ஆகவே இதிலே வேறு பிரச்சினைக்கே இடம் இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு திட்டம் கலைக்கப்பட்டது என்ற சொற்களைப் பதிவேட்டில் பதிவுசெய்ய வேண்டும் என்று விரும்புகிறார் என்று தெரிகிறது. கலைப்பு என்ற சொல்லை ஆளுநர் உரையில் பயன்படுத்தவேயில்லை. மீண்டும் தெளிவுபடுத்துகிறேன். செயல்படாமல் உள்ள உழவர் சந்தைகள் மட்டும்தான் மூடப்படும். மற்றவை மூடப்பட மாட்டாது என்பதை மீண்டும் தெளிவுபடுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குப் பல்வேறு நன்மைகளை இந்த அரசு செய்யும் என்ற எதிர்பார்ப்போடு உங்களுக்கு வாக்களித்தார்கள் பலபேர். அவர்களிடம் அப்படித்தான் பிரச்சாரம் செய்யப்பட்டது. விவசாயிகளுடைய கூட்டுறவுக் கடன் அபராத வட்டியை முன்னாள் முதல்வர் அவர்கள் குறைத்தார்கள். அப்போது, இங்கே இருந்த தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கூட சேர்ந்து, வட்டியையும் தள்ள வேண்டுமென்று கேட்டு வெளிநடப்புச் செய்தவர்கள் எல்லாம் இப்போது இங்கே இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கடனைப்பற்றியோ, கூட்டுறவுக் கடனுடைய வட்டியைப்பற்றியோ எந்தவிதமா ஏ குறிப்பும் இந்த ஆளுநர் உரையில் இல்லாதது வருந்தத்தக்கது...

**மாண்புமிகு செல்வி ஜெ, ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதற்கு விளக்கம் அளித்து இருக்கிறேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர், திரும்பத் திரும்ப இந்தக் குற்றச்சாட்டையே சொல்வதால் மீண்டும் என்னுடைய விளக்க உரையைக் கூற வேண்டிய அவசியத்தை அவரே ஏற்படுத்தியிருக்கிறார். ஆளுநர் உரையில் எல்லாவற்றையும் சொல்லிவிட முடியாது. இந்தக் கூட்டத் தொடரை அடுத்து நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளது. அந்த பட்ஜெட் உரையில் நாங்கள் செய்ய நினைத்து, நாங்கள் வாக்குறுதி அளித்த இன்னும் பல திட்டங்களை அறிவிப்போம். எல்லாவற்றையும் நாங்கள் சமர்ப்பித்துள்ள முதல் ஆளுநர் உரையிலேயே கூறிவிட முடியாது. விவசாயிகளுக்கு, கடனை, கடன் மீதுள்ள அபராத வட்டியை ரத்து செய்யவேண்டுமென்ற ஆசை, அந்த எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. விரைவிலேயே அமைச்சரவை கூடி இதைப் பரிசீலித்து தக்க முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி அவர்கள். இத்தோடு நிறைவுரை ஆற்றுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** நிறைவுரைக்கு வந்துவிட்டேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதிலே கரும்புக்கு பாக்கித் தொகை உடனடியாகக் கொடுப்போம் என்று கூட-அந்த உடனடியாக என்ற வார்த்தை இருந்த காரணத்தால்- மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதையும் நிதிநிலை அறிக்கையில் சொல்கிறேன் என்றுகூடச் சொல்லலாம். நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், எதிர்க்கட்சி என்று சொன்னால் நீங்கள் சொல்லியிருப்பதை நிறைவேற்றுங்கள் என்று கேட்பது எங்கள் கடமை.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-ல் தேர்தல் வாக்குறுதியாகச் சொன்னதுதான், விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்பது. ஐந்தாண்டுக் காலத்தில் அவர்களால் நிறைவேற்ற முடியாதது,



ஐந்து நாட்களுக்குள் நாங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமா? (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது எங்கள் தேர்தல் அறிக்கையில் இடம் பெறாத ஒன்று என்பதை நாங்கள் இங்கேயே சுட்டிக்காட்டியிருக்கிறோம். அது கட்சியினுடைய தீர்மானமாக இருந்ததே தவிர, தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட ஒன்றல்ல. நான்கூட உங்களை இங்கே கேட்பது, 1000 ரூபாய் கொடுங்கள் என்று இல்லை. ஆலைத் தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியை உடனடியாகக் கொடுப்போம் என்று தேர்தல் அறிக்கையில் இருக்கிற காரணத்தால், அதைப்பற்றி ஒரு வரிகூட இல்லையே என்றுதான் சொன்னேனே தவிர அதைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இங்கே சுட்டிக்காட்டினேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி அவர்கள் பேச்சை முடித்துக்கொள்ளலாம்.

**டாக்டர் க. பொன்முடி:** அனைவருக்கும் இலவச Gas வழங்கப்படும் என்பதையும் நான் நம்புகிறேன். இங்கே கவர்னர் அறிக்கையைப் பொறுத்தவரையில், சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் sweeping generalisations-ஆக இருக்கிறது. ஒரு ஆறாம் வகுப்பு மாணவனைப் பார்த்து, நீ முதலமைச்சரானால், நீ பிரதமரானால் என்ன செய்வாய் என்று கட்டுரை எழுதச் சொல்வது வழக்கம். அப்போது அந்த மாணவருக்கு இருக்கின்ற அனுபவத்தை வைத்துக்கொண்டு எப்படி இருப்பேன் என்று கட்டுரை எழுதுகிறவர்கள் உண்டு. அதுபோல, ஆறாம் வகுப்பு மாணவருடைய கட்டுரையைப் போல, விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கப்படும் என்று எல்லாமே பொதுவானதாக, sweeping generalisations-ஆக இருக்கிறதே தவிர, இந்தத் திட்டத்தை நிறைவேற்றப் போகிறோம் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையை எழுதியது நிதித் துறைச் செயலாளர் அவர்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிதித் துறைச் செயலாளராக இருந்தவர்தான் இப்போதும் நிதித் துறைச் செயலாளராக இருக்கிறார், அவர்களுடைய முதலமைச்சரே நியமித்த நிதித் துறைச் செயலாளரை ஆறாம் வகுப்பு மாணவர் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுவது வேடிக்கையாக உள்ளது.

[2001 மே 28

முற்பகல் 11—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி அவர்கள் பத்திரிகைக்குத் தலைப்புச் செய்தி தந்து விட்டீர்கள். பேச்சை இத்தோடு முடியுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கவர்னர் உரையை நிதித் துறைச் செயலாளர்தான் தயாரித்தார் என்று சொல்வதுகூட evading the responsibility. அதிகாரிகள் எழுதிக் கொடுத்தாலும்கூட அதற்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டியது மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான். இருந்தாலும்கூட, என்னைப் பொறுத்தவரையில் இந்த கவர்னர் உரையிலே இன்னும் நீங்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிற பல நல்ல விஷயங்களைச் சொல்லியிருக்கலாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல நிதிநிலை அறிக்கையிலே அவற்றையெல்லாம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். நாங்களும் எதிர்பார்க்கிறோம். ஐந்து ஆண்டுக் காலம் நாங்களும் மக்களுடைய எதிர்பார்ப்புகளை இங்கே உங்களுடைய அனுமதியோடு பிரதிபலிப்போம் என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகிற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கும், எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

3 முறை வேலூர் தொகுதியிலே தொடர்ந்து நிற்கக்கூடிய ஒரு வாய்ப்பினைத் தந்திருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்திற்குச் சென்று உரையாற்றுகின்ற ஒரு வாய்ப்பினைத் தந்த வேலூர் தொகுதி மக்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவாதத்திற்குப் போவதற்கு முன்னால் சில கோரிக்கைகளை வைப்பது என்னுடைய தலையாய கடமை என்கிற காரணத்தாலே, முதலிலே கோரிக்கையை வைத்துவிட்டு பிறகு நான் விவாதத்திற்கு வர



2001 மே 28] [திரு. சி. ஞானசேகரன்]

கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தேர்தல் முடிவு 13 ஆம் தேதி வெளியானவுடன் 14 ஆம் தேதி எங்களுடைய வேலூர் நகரத்தில் Old Town என்கிற இடத்தில் திட்டமிட்ட சதி காரணமாக 110 குடிசைகள் - பீடித் தொழிலாளர்களும், கூலித் தொழிலாளர்களும் வாழ்கிற பகுதியிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பீடத்திற்கு வந்ததையும், அதுபோல வேலூர் தொகுதியிலே மீண்டும் நான் வெற்றி பெற்றதையும் விரும்பாத சில சதிகாரர்கள் சதி செய்த காரணத்தினாலே 110 குடிசைகள்—14 ஆம் தேதி எரிந்தன. அடுத்து, 15 ஆம் தேதி 400 குடிசைகள் எரிந்தன. பிறகு அடுத்தடுத்து தினமும் இரண்டு, மூன்று குடிசைகள் எரிந்த வண்ணமாக இருந்து. இன்று ஓரளவிற்குக் கட்டுக்கடங்கி இருந்தாலும்கூட சுமார் 600 குடிசை வீட்டுக்காரர்களின் குடிசைகள் எல்லாம் தீக்கிரைக்கு ஆளாக்கப்பட்ட காரணத்தாலே, இன்று அவர்கள் வீடு வாசல்களை, உடைமைகளை இழந்து தவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கம் கொடுத்திருக்கிற ஒரு குடும்பத்திற்கு 1,000 ரூபாய் என்கிற அந்த நிதியுதவி போதாது என்கிற காரணத்தாலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் உடனடியாக பேக்ஸ் செய்தி தந்து, பிறகு நேரடியாகவும் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை அணுகி, எங்களுடைய வேலூர் தொகுதியிலே இன்று அல்லல்பட்டுக் கொண்டிருக்கிற அந்த பீடித் தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் 15,000 ரூபாய் தரவேண்டுமென்கிற வேண்டுகோளை நான் வைத்திருக்கிறேன். அந்தத் தொகை அதிகமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைத்தாலும்கூட, அவர்களாகப் பார்த்து, குறைத்து, குறைந்தபட்சம் ஒரு குடும்பத்திற்கு 5,000 ரூபாய் கொடுத்து அவர்கள் சிமெண்ட் ஷீட்டாலான தீப்பிடிக்காத வீடுகளை அமைக்கக்கூடிய வகையில் ஒரு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் இந்த அவையின் சார்பாக முதன்முதலில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியிலே நடந்த தீச்சம்பவத்தில் இரண்டு முகமதிய சமுதாயத்தைச் சேர்ந்த கணவரும், மனைவியும் இறந்து போனார்கள். அரசாங்கம் 15 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு நஷ்டஈடாகக் கொடுத்திருக்கிறது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து உடனடியாக இந்த இறந்த குடும்பத்திற்கு வழங்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. ஞானசேகரன்] [2001 மே 28

அதேபோல எங்களுக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய குடியாத்தம் தொகுதியிலே 10 பேர் சிலிண்டர் வெடித்து இறந்தார்கள் என்று சொல்கிறார்கள். அதிலே எங்களுக்கு நம்பிக்கையில்லை. ஏதோ வெடி விபத்து நடந்துதான் அங்கே 10 பேர் இறந்து போனார்கள். அவர்களுக்கும் இந்த 15 ஆயிரம் ரூபாய் என்றுதான் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாய் என்று வழங்கவேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கோரிக்கையாக வைக்கிறேன். இந்தத் தீச் சம்பவங்கள் எதனால் நடந்தன, யார் செய்த சதி என்பதைக் கண்டுபிடிப்பதற்காக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் C.B.I. விசாரணை இல்லாவிட்டாலும்கூட பரவாயில்லை, C.B.C.I.D. விசாரணையாவது உடனடியாக வைத்து இதுபோன்ற தீ வைப்புச் சம்பவங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11—30*

அடுத்து, எங்களுடைய வேலூரில் குடிநீர்ப் பிரச்சினை, மிகக் கடுமையாக இருந்துகொண்டிருக்கிற காரணத்தால், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே, அரசாணை வழங்கப்பட்டு, பணம் ஒதுக்கீடு செய்து, பொன்னையாற்றுத் திட்டம் re-tender stage-லே நின்று கொண்டிருக்கிறது; அதை உடனடியாக நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, டெண்டரைக் கோர வேண்டும். எங்களுடைய வேலூர் மக்களுக்கு 10 நாட்களுக்கு ஒருமுறைதான் குடிநீரே வருகிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், அரசாணை இருக்கிறது, பணம் ஒதுக்கீடு இருக்கிறது. ஏற்கெனவே re-tender stage-லே இருந்துகொண்டிருக்கிற காரணத்தாலே, பொன்னையாற்றுத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாதாள சாக்கடைத் திட்டம், பலமுறை கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதுவும் இப்போது நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது. வேலூருக்கு அதை நிறைவேற்றித்தர வேண்டும். எங்களுடைய மாவட்டமே - வேலூருக்கு மட்டும் நான் சொல்லவில்லை, வேலூர் மாவட்டம் - முழுக்க முழுக்க - தருமபுரி மாவட்டத்தையும் சேர்த்துக்கொள்ளலாம் - குடிநீர்ப் பஞ்சத்தால் இன்று மிகவும் அவதிக்கு உள்ளாகியிருக்கிறது. ஆகவே நீங்கள் காவிரியாற்று நீரை, ஒகேனக்கல்லிலிருந்தோ அல்லது மேட்டூரிலிருந்தோ [illegible]



2001 மே 28] [திரு. சி. ஞானசேகரன்]

திட்டத்தை - ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக அரசு கொள்கை அளவிலே ஒப்புக்கொண்டது. ஆனால் அதை நிறைவேற்றாமல் அவர்கள் விட்டுவிட்டார்கள். 500 கோடி ரூபாயிலே ஒகேனக்கல்லிலிருந்து தண்ணீரை எடுத்து, நீங்கள் தருமபுரி மாவட்டத்திற்கும், எங்களுடைய மாவட்டம் மாவட்டத்திற்கும் கொண்டுவந்தால்தான் எங்களுடைய மாவட்டம் எதிர்காலத்திலே பிழைக்கும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்பற்றிச் சொன்னார்கள். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், 1996-லே சமர்ப்பித்த அந்த பட்ஜெட்டிலே பேசும்போது, சுமார் 250, 300 கோடி ரூபாய்க்கு திட்டத்தை வகுத்து, அந்தத் அதைச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை விட்டது தி.மு.க. அரசுதான். அவர்கள் கொள்கை அடிப்படையில் அடிப்படையிலே எதுவும் செய்யவில்லை. கொள்கை அடிப்படையில் புரட்சித் தலைவி அவர்கள் என்னென்ன செய்தார்களோ அவற்றை விட்டுவிடுவது என்பதுதான் கொள்கையாக இருந்ததேயொழிய, அவர்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவருவதாக என்றைக்கும் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை; தெரிந்திருந்தால் செயல்படுத்தியிருப்பார்கள். ஐந்து ஆண்டுக் காலமாக இதனைச் செயல்படுத்த அவர்கள் எதுவும் செய்யாமல் இருந்துவிட்டு, இப்போது நீங்கள் சொல்வதுபோல அவர்கள் இன்னும் கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்தச் சட்டமன்றத்திலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்; அதைச் செயல்படுத்தி இருந்தாலே போதும்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது, ஒரு திட்டத்தை அறிவித்தது அல்லது ஒரு திட்டத்தைக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டிருப்பது என்ற அடிப்படையில் பேசிக்கொண்டிருக்கிறார். ஏற்கெனவே அறிவித்தது, 200 கோடி அல்ல 800 கோடியில். அதற்குப் பிறகு அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் மற்ற பகுதிகளுக்கும் போய் அடைவதற்கான வாய்ப்புகள், சாத்தியக்கூறுகள் அறியப்பட்டு, ஒரு வல்லுநர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் இரண்டையும் எடுத்து, ஒகேனக்கல்லிலிருந்து ஓசூர் வரையில் அதை நிறைவேற்றுவதற்கான தனித்தத் திட்டமாக ஏறத்தாழ ரூ.1,200 கோடிக்குத் திட்டம் தீட்டப்பட்டு, கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதை இந்த ஆண்டில்

[திரு. கோ.சி. மணி] [2001 மே 28

ஆய்வுக்கு எடுத்து முடிப்பதற்கான நடவடிக்கையிலே இருந்ததை, மாறாகச் சொல்வது தவறு.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு உறுப்பினர் தவறான செய்தியைத் தருகிறார். இந்தத் திட்டத்திற்கு முதன்முதலாக வித்திட்டவரே புரட்சித் தலைவர் அவர்கள்தான். அவர் தருமபுரி வந்தபோதுதான் இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வகுத்து, அதற்கான தனி வாரியத்தினை ஏற்படுத்தினார். உகம்சந்த் அவர்களை, உறுப்பினராக இருந்தவரை அழைத்து, எங்களையெல்லாம் அழைத்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று சொல்லி, அதற்கு வித்திட்டவர், கொள்கை வகுத்துத் தந்தவர் புரட்சித் தலைவர் அவர்கள். அந்த புரட்சித் தலைவர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் கொஞ்சம் அமர வேண்டுகிறேன். நான்தான் அப்போது அந்தத் துறையின் அமைச்சராக இருந்தேன். ஆகவே அப்போதுதான் திட்டம் போடப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** புரட்சித் தலைவர் அவர்கள் வகுத்த திட்டம். எனவே நீங்கள் அதை வந்து விரிவுபடுத்தி — எதையும் கமிட்டி போட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை ஒத்துக்கொள்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இந்தக் காலத்திலே செயல்படாமல் இருப்பதற்கு ஒரு Committee போடுவார்கள், ஒரு Commission போடுவார்கள். போட்டு, அதை இழுத்தடித்து, கடைசியில் ஏதோ காரணம் சொல்லி விட்டுவிடுவார்கள். அதைப்போல, தி.மு.க. ஆட்சியில், செய்கிறேன் என்று சொல்லிவிட்டு, முதலில் அறிவித்த திட்டங்களைச் செயல்படுத்தாமல், அதற்கு ஏதோ வல்லுநர் கொண்டு வந்தார்களாம். பிறகு ஓசூர் தண்ணீர் கொண்டுவரப் பார்த்தார்களாம். 1,200 கோடி ரூபாய் ஆகிவிட்டதாம். ஆகவே, செயல்படுத்த முடியாமல் இன்றைக்கு கொள்கை அளவிலே விட்டுவிட்டார்களாம். ஆகவே இந்தத் தவறான தகவலைத் தந்து மக்களை திசை திருப்புவதுதான் இவர்களுடைய எண்ணமேயொழிய, என்ன செய்தார்கள் என்பதைத்தான் கேட்கிறேன். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, நடந்ததா? அதைத்தான் நான் சொல்ல வந்தேனேயொழிய வேறொன்றும் கிடையாது. உங்களுக்கு எண்ணம் இருந்திருக்கலாம். எண்ணத்தைச்



2001 மே 28] [டாக்டர் மு. தம்பிதுரை]

செயல்படுத்தவில்லை. எங்கள் புரட்சித் தலைவி அவர்களிடம் எண்ணம் இருந்தது. அவர்கள் திட்டம் வகுத்தார்கள், அதைச் சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். எந்த அளவு, எவ்வளவு பணம் என்று விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைச் செய்யாமல் விட்டது தவறு. இதுபோன்ற கூட்டுக் குடிநீர்த் திட்டம்தான் தமிழகத்திலே குடிநீர்ப் பிரச்சினையை ஒழிப்பதற்கான நல்லதொரு திட்டமாக அமையுமேயொழிய ** ஆகவே குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்றால் - இது புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்த திட்டம். எம்.ஜி.ஆர். அவர்கள் வகுத்த கொள்கை அது. ஆகவே நீங்கள் செயல்படுத்தாமல் இருந்தீர்கள் என்பதைச் சொல்ல வந்தேனேயொழிய நீங்கள் ரூ.1,200 கோடிக்குத் திட்டம் போட்டிருக்கலாம், கிருஷ்ணா தண்ணீர் வந்தது என்று சொன்னீர்கள் பாருங்கள், திட்டம் போட்டு தண்ணீர் எங்கே வந்து நிற்கிறது? அதுமாதிரி ஒகேனக்கல் திட்டம் போட்டும் பிரயோஜனம் இல்லை.

முற்பகல் 11—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், உறுப்பினர் பேசட்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாதம் எங்கெங்கோ திசை திரும்பிப் போய்க்கொண்டிருக்கிறது. நான் கேட்பதெல்லாம், தருமபுரி மாவட்டமும், எங்களுடைய வேலூர் மாவட்டமும் பயன்பெறக்கூடிய வகையில் உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை ஏற்கெனவே 1995 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதே அவையிலே, அப்போது முதல்வராக இருந்தபோது, தருமபுரி மாவட்டம் வரை...

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது, ** அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொன்ன குறிப்பு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. பத்திரிகைகளும் வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, அமைச்சருடைய பேச்சின் சுருக்கம், நீங்கள் எதிர்பார்க்கிற திட்டம் நிறைவேற்றப்படும் என்பதுதான்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தண்ணீர் உடனடியாக வந்து எங்களுடைய தாகம் தீர்க்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். கவலை வேண்டாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் இப்போது இருக்கக்கூடிய Bus stand மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே ஏற்கெனவே ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னால் G.O. போடப்பட்டு, பிறகு அப்போதிருந்த ஆளுங்கட்சிக்காரர் ஏற்கெனவே உயர் நீதிமன்றத்திற்குச் சென்று Writ போட்டு விட்டார். நானே Court-ல் ஆஜராகி, வாதாடி, அந்த Writ மனுவெல்லாம் dispose செய்தாகிவிட்டது. பத்து வாரங்களுக்குள் அந்த Bus stand வேலை தொடங்கப்பட வேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. அதற்கு உடனடியாக 3 கோடி ரூபாய் தேவை என்கிற காரணத்தினாலே நம்முடைய நிதித் துறைச் செயலாளரையும் நான் கேட்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு 3 கோடி ரூபாயை உடனடியாக வழங்கி, அந்த Bus Stand-ஐ உயர் நீதிமன்ற ஆணைப்படி உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய வேலூர் மருத்துவக் கல்லூரி - அரசு மருத்துவக் கல்லூரி கனவாகவே இருந்துகொண்டிருக்கிறது. கடந்த ஆட்சியிலே மூன்று ஆண்டுகளாக, வேலூரிலே அரசு மருத்துவக் கல்லூரி தொடங்கப்படும், தொடங்கப்படும் என்று சொன்னார்களேயொழிய, ஆஸ்பத்திரியில் போர்டு மட்டும் இருக்கிறது. 'அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை' என்று இருக்கிறதேயொழிய கல்லூரி வந்தபாடில்லை. அது, மூன்று வருடமாக என்னுடைய ராசியோ என்னவோ தெரியவில்லை, வரவில்லை. இந்த ஆண்டாவது...

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மாண்புமிகு உறுப்பினருடைய ராசி அல்ல; அந்த அரசினுடைய, அந்த ஆட்சியினுடைய ராசி அது. (மேசையைத்





தட்டும் ஒலி) ஐந்தாண்டுக் காலமாக கிருஷ்ணா நதி நீர் வருகிறது, வருகிறது, வந்து விட்டது என்றார்கள். இன்று வரை வரவில்லை. அதுபோலவே, மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் மருத்துவக் கல்லூரி வருகிறது, வருகிறது என்று மூன்று முறை சொன்னார்கள், வரவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எப்படியாவது, இருக்கக்கூடிய சூழ்நிலைகளை எல்லாம் மாற்றி இந்த அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சென்ற ஆண்டு இதே அவையில் நீதித் துறை கொள்கைக் குறிப்பிலே சொன்னார்கள். சட்டக் கல்லூரி சென்ற ஆண்டே தொடங்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் அரசு சட்டக் கல்லூரி சென்ற ஆண்டு வரவில்லை. இந்த ஆண்டு சட்டக் கல்லூரியை வேலூரிலே தொடங்குவதற்கு உடனடியாக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இப்போது விவாதத்திற்கு வருகிறேன், மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் பொன்முடி அவர்கள் சொல்கிறபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன்னுரையே இவ்வளவு நீளமாக இருந்தால் பேச்சு சரியாக வராது. பேச்சை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர் பொன்முடி அவர்கள் சொல்கிறபோது, இங்கே சில வாரியங்களை எல்லாம் நீங்கள் உருவாக்கி தொழிலாளர்களுக்கு pension வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அவர் அமைச்சராக இருந்தபோது, இதே கோரிக்கையை நான் அவரிடமே வைத்தேன். வேலூரிலே அமைப்பு சாரா தொழிலாளர்களுடைய மாநாடு போட்டார்கள். வேலூரிலே கூட்டத்தைப் போட்டபோது, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி சொன்ன வார்த்தையை அப்படியே சொல்ல விரும்புகிறேன்.

"ஞானசேகரன் எப்போதுமே எதிர்க்கட்சியிலே இருக்கப் போகிறவர். அப்படித்தான் கேட்பார். அதைச் செய்ய முடியாது" என்று சொன்னார்கள். ஆனால், அவரும் என்னோடு சேர்ந்து இன்று எதிர்க்கட்சியிலே வந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அன்று நான் ஓய்வூதியம் கேட்டபோது, 'இப்படித்தான் பேசுவார், ஆளுங்கட்சி கொடுக்க முடியாது'

என்ற நிலையிலே பேசியவர், தாங்களும் எங்கள் பக்கம் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். அதனால், இப்போதாவது - அந்த ஓய்வூதியத்தை, ஞானசேகரன் கேட்டது spirit-டோடு கேட்டேன் என்பதை நீங்கள் இப்போது ஒத்துக்கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன். இப்போதாவது உணர்ந்திருக்கிறீர்கள் என்பதற்கு என்னுடைய நன்றியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—40

அதேபோல, நாங்கள் எல்லாம் 8.5% பிழிதிறனைக் கொண்ட கரும்புக்கு 1,000 ரூபாய் கேட்டோம். அப்போது சொன்னார்கள், தேர்தல் அறிக்கையிலே அது இல்லை என்று சொன்னார்கள் திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள். ஆனால் இந்த அவையிலே அப்போதைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஏற்கெனவே திருச்சி விவசாய மாநாட்டிலே தீர்மானம் போட்டார்கள். அதுவும் 1986-லே போட்டார்கள். பிறகு நாங்கள் 1996-லே அந்தப் பணத்தைக் கொடுங்கள் என்று கேட்டபோது எங்களை 5 ஆண்டுகள் ஆளவிடுங்கள், கொடுக்கிறேன் என்று சொன்னார். கடைசியிலே என்ன பண்ணினார்கள் என்று சொன்னால் 10% பிழிதிறன் என்று சொன்னார்கள். 10 சதவிகிதம் பிழிதிறன் கரும்பு எங்கோ வளமான மண் இருக்கக்கூடிய சில இடங்களில்தான் வருமே ஒழிய, காய்ந்த மண் இருக்கக்கூடிய பகுதிகளில் நிச்சயமாக வராது. ஆகவே இப்பொழுதாவது சில பிரச்சினைகளை, அவர்களால் தீர்க்கமுடியாத பிரச்சினைகளை, இப்பொழுது எதிர்க்கட்சிக்கு இருக்கக்கூடிய அந்த இடுக்கண்களை எல்லாம் ஓரளவிற்கு நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் புரிந்துகொண்டதற்காக நன்றி சொல்கிறேன். அப்போதெல்லாம் எங்களை எவ்வளவு திட்ட வேண்டுமோ அவ்வளவு திட்டிப் பார்த்தீர்கள். எங்களுடைய உணர்வுகளை அப்போது நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் இப்போது புரிந்துகொண்டதற்காக நான் நிச்சயமாக அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாங்கள் ஆளுங்கட்சியோடு சேர்ந்து தேர்தல் களத்தைச் சந்தித்தபோது சில சூழ்நிலைகள் இருந்தன. ஆனால் இப்போது நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்து,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்"

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தைவிட நாங்களும் நிச்சயமாக எதிர்க்கட்சி என்கிற வரிசையிலே



இருந்து இந்த ஆட்சியிலே இருக்கக்கூடிய சில குறைகளைச் சுட்டிக்காட்டுவது என்பது எங்களுடைய தலையாய கடமை.

அந்த வகையிலே இப்போதுகூட ஆளுநர் அறிக்கையைப்பற்றிச் சொல்கிறபோது-தேர்தல் முடிவுகளைப் பற்றி நம்முடைய பொன்முடி அவர்கள் ஒன்றை இங்கே குறிப்பிட்டார்கள் - அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்துள்ள தெளிவான, உறுதியான தீர்ப்பு மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குத் தற்போது நடைபெற்று முடிந்துள்ள தேர்தல், பல வகைகளில் வரலாறு படைத்துள்ளது. தமிழக மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்துள்ள தெளிவான, உறுதியான தீர்ப்பு, மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும் என்பதை அவர்கள் மாற்றாக சொல்லி, it is not an unique event என்று சொன்னார்கள். ஒன்றை மட்டும் நான் இங்கே தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தேர்தல் என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது, மறைக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) சாதிக் கட்சிகளையும், மதவாதக் கட்சிகளையும் தங்களோடு இணைத்துக்கொண்டு அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தில், விஷ வித்துக்களைத் தூவ நினைத்தவர்களுக்கு சரியான மரண அடி கொடுத்து ஓர் அற்புதமான தீர்ப்பை தமிழ்நாட்டு மக்கள் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்குக் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் நிச்சயமாக இது வரலாற்றில் அழியாப் புகழ்பெற்ற ஒரு தீர்ப்பு என்பதைத்தான் நீங்கள் ஒப்புக்கொண்டாக வேண்டும். ஆகவே இது unique event. ஏனென்றால் மற்ற நேரங்களில் அப்படி வரவில்லை. சாதிக் கட்சிகள் ஏதோ நேற்று பெய்த மழையிலே இன்று முளைத்த காளான்களைப் போல நிறைய சாதிக் கட்சிகளை உடன் சேர்த்துகொண்டு நீங்கள் தேர்தலைச் சந்தித்தபோது....

**திரு. மு.பெ. சாமிநாதன்:** Point of Order.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே....

**திரு. சி. ஞானசேகரன்:** I am not yielding. No Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் விரும்பவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் விரும்பவில்லை, உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்ப்பு என்பதை நிச்சயமாக நான் இந்த இடத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வதெல்லாம் இந்த மதச் சார்பற்றத் தன்மையை தமிழகத்திலே தொடர்ந்து நிலைநாட்டுவதற்காக நீங்கள் மாவட்டங்களுக்கோ அல்லது போக்குவரத்துக் கழகங்களுக்கோ தலைவர்களுடைய பெயர்களைச் சூட்டாமல் இந்த மதச்சார்பற்ற அல்லது சாதி சம்பந்தப்பட்ட விஷயங்களில் எதிலும் தலையிடாமல் தொடர்ந்து இந்த நிலையே நடைபெற மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு அமைதியான பூங்காவாகத் தமிழகத்தைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை நான் இந்த இடத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யூகத்தின் அடிப்படையில் பத்திரிகைகளில் சில தவறான செய்திகள் வெளியாகியிருக்கின்றன. மாவட்டங்களுக்கும், போக்குவரத்துக் கழகங்களுக்கும் முன்பிருந்தபடியே தலைவர்களின் பெயர்கள், சாதித் தலைவர்களின் பெயர்கள் சூட்டப்படும் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதுகுறித்து இந்த அரசு எந்த முடிவிற்கும் வரவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. சி. ஞானசேகரன்:** முதல்வருடைய விளக்கத்திற்கு நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளுடைய பிரச்சினையை கடந்த ஆட்சியிலே அவர்கள் முழுக்க முழுக்கப் புறக்கணித்ததினுடைய விளைவு தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் விரக்தியினுடைய விளிம்பில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன், ஒரு விவசாயியினுடைய மகன் என்ற காரணத்தினால் நான் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைத்தான் எங்களுடைய தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் கடந்த கால அரசு மக்கள் விரோத அரசு என்று மிகச் சுருக்கமான சொற்களைக் கொண்டு மிக அழகான, தெளிவான ஒரு விளக்கத்தை அன்று தந்தார்கள். அதை தமிழகத்து மக்கள் இப்போது நிரூபித்திருக்கிறார்கள். இது மக்கள் விரோத அரசு என்கிற காரணத்தால்தான் அவர்களை அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். பொதுவாக 8.5 சதவிகித பிழிதிறன் கொண்ட கரும்புக்கு விலை 1,000 ரூபாய் என்று இருந்தாலும்கூட,



அதுவும்கூட விவசாயிகளுக்குக் கட்டுப்படி ஆகாது. ஆகவே விவசாயிகளுடைய இந்தக் குறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாகத் தீர்த்துவைத்து 1,000 ரூபாய் 8.5 சதவிகிதம் பிழிதிறன் கொண்ட கரும்புக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—45

நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. தேங்காய்க்கு உரிய விலை கிடைக்கவில்லை.

அதேபோல, நீலகிரி மாவட்டத்திலே பச்சைத் தேயிலை 15 ரூபாய் விற்ற இடத்தில் இப்போது 6 ரூபாய், 5 ரூபாய் என்று விற்றுக்கொண்டிருக்கிறது. 19 ரூபாய்கூட -- நரசிம்மராவ் அவர்கள் பிரதமராக இருந்த காலத்திலேயும் அதற்குப் பின்னாலும்கூட 19 ரூபாய். பிறகு ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் 19 ரூபாய் வரை வந்தது. ஆனால் இப்போது 6 ரூபாய், 5 ரூபாய் கிலோ என்று தேயிலை விற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினாலே நீலகிரி மாவட்டத்தினுடைய அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், பாவம், அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மஞ்சளுக்கு உரிய விலை இல்லை. சுருங்கச் சொன்னால், விவசாயி அந்த உழவுகோல்கூட கொஞ்சம் மிஞ்சாமல் வேதனையினுடைய விளிம்பில் இருக்கின்ற காரணத்தினாலே இந்த விவசாயிகளுடைய குறைகளைக் கண்டறிவதற்கு உடனடியாக எல்லா கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியமித்து, இந்த விவசாயிகளுடைய பிரச்சினையைத் தீர்க்க, ஒரு மாத காலத்தில் அவர்களை அறிக்கை கொடுக்கச் சொல்லி, அதை தீர ஆலோசித்து அவர்களுடைய பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுடைய கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றுகூட இப்போது கோரிக்கை வைத்தார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1991-லிருந்து 1996 வரை நீங்கள் ஆட்சி புரிந்த காலத்தில் வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கு நபார்டு அன்று ஒத்துக்கொள்ளாத காரணத்தினாலே Bonus திட்டம் என்று ஒன்றைக் கண்டுபிடித்தீர்கள். அந்த Bonus திட்டத்தை, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, ஏற்கெனவே அந்த முதல்வர் செய்திருக்கிறார், நீங்கள் செய்யுங்கள் என்று நான் கேட்டபோது, இல்லை, நபார்டு ஒத்துக்கொள்ளவில்லை, நபார்டு ஒத்துக்கொள்ளவில்லை என்று அவர்கள்

சொல்லிச் சொல்லி எங்களை அப்படியே தட்டிக்கழித்துவிட்டார்கள். மீண்டும் அந்த போனஸ் திட்டத்தையாவது நீங்கள் உருவாக்கி - விவசாயிகளுடைய கடனை தள்ளுபடி செய்யாவிட்டாலும்கூட, வட்டியை, அபராத வட்டியை உடனடியாகத் தள்ளுபடி செய்வதற்கு உடனடியாக ஒரு தீர்வினைக் காண வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இது மக்களாட்சி, நபார்டு நம்மை ஆட்சி செய்ய விட்டுவிடக்கூடாது. ஆகவே மக்களுடைய பிரச்சினையை முழுக்க முழுக்க உணர்ந்திருக்கிற முதல்வர், நீங்கள் உடனடியாக அமைச்சரவையைக் கூட்டி விவசாயிகளுடைய பளுவைக் குறைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகள். மூடிய தொழிற்சாலைகளை எல்லாம் எப்படியாவது திறப்போம் என்று சொல்லி 1996-லே திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள். ஆனால் எங்களுடைய மாவட்டம்தான் முதல் பலியானது. திறந்திருந்த தொழிற்சாலையான அரக்கோணம் Steel Plant-ஐ முதன்முதலில் கையெழுத்துப்போட்டு அதை மூடிவிட்டது, அந்த அரசு. அந்த எஃகு ஆலையை மீண்டும் நீங்கள் அரக்கோணத்தில் - அந்த நிலங்கள் எல்லாம் விற்கப்படாமல், Writ போட்டு அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். - அந்த இடத்தில் மீண்டும் ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி, வேலைவாய்ப்பினை உருவாக்கித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்களுடைய வேலூரில் இருக்கக்கூடிய அரியூர் கூட்டுறவு நூற்பாலை நம்முடைய அமைச்சர் மாண்புமிகு பாண்டுரங்கனுடைய அணைக்கட்டுத் தொகுதியிலேதான் அந்தத் தொழிற்சாலை வருகிறது. ஆனால் நான் கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இழுத்து மூடப்பட்ட அரியூர் கூட்டுறவு நூற்பாலையை எத்தனையோ முறை இந்த அவையிலே எவ்வளவோ கோரிக்கைகளை வைத்துப் பார்த்துவிட்டேன். ஆனால் அப்போது வேலை நடக்காமல் தொடர்ந்து அந்த ஆலை மூடப்பட்டதுதான் மிச்சம். அந்த அரியூர் கூட்டுறவு நூற்பாலையை உடனடியாகத் திறப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு, இரண்டு மாத காலத்திற்குள் எப்படியாவது நீங்கள் அதற்குப் புனர்வாழ்வு கொடுத்து, அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நூற்பாலை அது ஒன்று மட்டுமல்ல, பல கூட்டுறவு நூற்பாலைகள் தமிழகத்திலே மூடப்பட்டிருக்கின்றன. அதேபோல தனியாருடைய நூற்பாலைகளும் மூடப்பட்டிருக்கின்றன.



அதேபோல எத்தனையோ தொழிற்சாலைகள், ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை, பின்னி தொழிற்சாலையிலிருந்து பல தொழிற்சாலைகள், தோல் தொழிற்சாலைகள் எங்களுடைய மாவட்டத்திலே பல மூடப்பட்டிருக்கின்றன. அதற்கெல்லாம் நீங்கள் ஒரு குழுவை நியமித்து ஒரு அறிக்கையைப் பெற்று மூடிய தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டும். ஏனென்றால் புதியதாக தொழிற்சாலை திறப்பது என்பது வேறு, அது ஒரு தனித் திட்டம். ஆனால் இருக்கின்ற தொழிற்சாலைகளைக் காப்பாற்றுவதும் இந்த அரசினுடைய கடமை என்கிற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்கெனவே மூடியிருக்கின்ற தொழிற்சாலைகளை ஒரு கணக்கெடுத்து அவற்றையெல்லாம் திறப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்து 6 மாத காலத்திற்குள் எல்லா ஆலைகளையும் திறப்பது என்கிற ஒரு முடிவை நீங்கள் எடுத்தீர்கள் என்று சொன்னால், தொழிலாளர் வர்க்கம் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவார்கள். அவர்கள் வயிற்றில் பால் ஊற்றியதுபோல் இருக்கும். ஆகவே நீங்கள் அந்தத் திட்டத்தை வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—50

சட்டம் - ஒழுங்கு. சட்டம் - ஒழுங்கு கடந்த கால ஆட்சியிலே ஒரு கேள்விக்குறியாகவே இருந்துவிட்டுப் போய்விட்டது. வீரப்பனை, சந்தன மரக் கடத்தல் வீரப்பனை பிடிப்போம், பிடிப்போம் என்று சொல்லி, பிடிக்காமல் தூது விட்டதுதான் மிச்சம். அப்போதுகூட நான் சொன்னேன். நக்கீரன் ஆசிரியர் கோபாலையே நீங்கள் D.G.P.-யாகவாவது நியமித்துவிட்டுப் போய் விடுங்கள். அவர்தான் அடிக்கடி அந்தக் காட்டுக்குள் (மேசையைத் தட்டும் ஒலி) Picnic போவதுபோல் போய்ப் போய் வந்துகொண்டிருக்கிறார் என்று. ஆனால் ஒரு I.G. இருந்த காலத்திலே ஒழுங்காக இருந்தது. நிறைய D.G.P -க்களைப் போட்டோம். இத்தனை D.G.P.-க்கள் இருந்தும்கூட யாரும் போய் அவர்களைப் பார்த்ததாகச் சொல்லவில்லை. கோபால் மட்டும் போகிறார். அந்த கோபாலிடம் நீங்கள் interrogate செய்து, அவரிடம் information பெற்றுக்கொள்ளுங்கள். அதேபோல, கர்நாடகத்தில் இருக்கக்கூடிய ஒரு பெண் டாக்டர் போய் பார்க்கிறார். எத்தனையோ பேர் மிக எளிதாகப் பார்க்கிறார்கள். Picnic போவதுபோல போய்ப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சர்வ வல்லமை பொருந்திய, Scotland Yard-க்கு இணையான காவல் துறையை வைத்துக்கொண்டிருக்கிற தமிழக போலீஸால் மட்டும் ஏன் வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை என்று

இந்த அவையிலே பல முறை கேட்டுப் பார்த்துவிட்டேன், நடக்கவில்லை. சாதாரண கொள்ளைக்காரனை, கொலைகாரனை, சந்தன மரக் கடத்தல்காரனைப் பிடிக்க முடியவில்லை என்பது தமிழ்நாட்டினுடைய காவல் துறைக்கு ஒரு பெருத்த அவமானத்தை ஏற்படுத்திவிட்டது. அதிலிருந்து மீண்டும் காவல் துறையை மீட்பது என்பது நம்முடைய தலையாய கடமை. ஒரு வீரப்பனை நம்மால் பிடிக்க முடியவில்லை. இதுபோன்ற சமூக விரோதிகள் எத்தனையோ சந்தன மரக் கடத்தல்காரர்கள் இதனால் ரொம்பத் தெளிவாகிவிட்டார்கள்; அவனையே பிடிக்க முடியவில்லை, நம்மை எப்படிப் பிடிக்கப்போகிறார்கள் என்று.

அதைப்போல, சென்னையை எடுத்துக்கொண்டால் ரௌடி சாம்ராஜ்யம். அதேபோல, மதுரை, நெல்லை, கோயம்புத்தூர் என்று எல்லா இடங்களிலும் ரௌடி சாம்ராஜ்யம்தான் பெருகியிருக்கிறதே ஒழிய, கட்டப் பஞ்சாயத்துக்கள்தான் ஆங்காங்கே பெருகிக் கொண்டிருக்கின்றனவேயொழிய இவற்றிற்கெல்லாம் நீங்கள் ஒரு முற்றுப்புள்ளி வைத்தால்தான் மக்களாட்சி இந்த இடங்களில் நடைபெறுவதாக அர்த்தம். ஆகவே இந்த ரௌடி சாம்ராஜ்யத்திற்கு, கட்டப் பஞ்சாயத்திற்கு நீங்கள் உடனடியாக ஒரு முற்றுப்புள்ளியை வைத்து, சட்டம்—ஒழுங்கை தமிழகத்திலே பேணிக் காப்பதற்காக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் ஒரு பெரிய சோதனை. 14-ஆம் தேதி எப்படி எங்களுடைய வேலூர் நகரத்திலே தீ விபத்து என்று நான் சொன்னேனோ, அந்தத் தீ விபத்து இருட்டிலே வேறு நடந்துவிட்டது. எங்களால் தீயை எப்படி அணைக்க முடியும்? தீயணைப்பு Engine எல்லாம் வந்து நிற்கிறது. அந்த நெருப்பை நாங்கள் வெளிச்சமாக வைத்துக்கொண்டு தீயை அணைக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு நாங்கள் ஆளாக்கப்பட்டோம். அப்போது பார்த்துத்தான் நெய்வேலியில் Strike என்கிறார்கள். நல்ல கத்திரி வெயில். Fan இல்லாமல் ஒருவரும் தூங்க முடியாத நேரம். நெய்வேலி என்று சொன்னவுடன் சில பேர் எழுந்து நின்றார்கள். உடனே அந்தப் பிரச்சினையைப் பேச வேண்டுமென்று சொன்னார்கள். தொமுச. அந்த யூனியனைச் சார்ந்தவர்கள்தான் பிரதானமாக இருந்துகொண்டு recognised union என்கிற காரணத்தினால் அவர்கள் ஒரு நல்ல நேரத்திலே இதுமாதிரி கோரிக்கையை வைக்கலாம். அப்போதுதான் ஆட்சி மாறியிருக்கிறது. கத்திரி வெயில்; சில நேரங்களில் current இல்லாத ஒரு





சூழ்நிலை, அந்த நேரமாகப் பார்த்து, பதம் பார்த்து, நீங்கள் வெட்டுகிற மாதிரி, தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தினாலே தமிழ்நாட்டிலே 10 மணி நேரம்...

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** அந்த நேரத்தில் ஏன் current cut செய்தார்கள் என்றால், புரட்சித் தலைவி அவர்கள் பதவியேற்கும் அந்த நிகழ்ச்சியை தமிழக மக்கள் பார்க்கக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இவர்களுடைய முதல் நடவடிக்கை அல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நீதிமன்றத்திற்கு வரும்போது, அங்கே Lift இயங்காத அளவுக்கு, முன்னாள் ஆட்சி நடந்து கொண்டிருந்தது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**திரு. சி. ஞானசேகரன்:** நாங்கள் சொல்வதெல்லாம், இப்போது மின்வெட்டு, தமிழகத்திலே அதிகமாக வந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே, தமிழகத்தில் மின்வெட்டு வராமல் பார்த்துக்கொண்டு, தொடர்ந்து மின்சாரம் கிடைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். யார் சதி செய்தாலும், அதற்கு நீங்கள் நிச்சயமாக முற்றுப்புள்ளி வைத்து தமிழக மக்களின் நலன்தான் முக்கியம் என்கிற வகையில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வை. பெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெருமாள் அவர்கள் விளக்கம் சொல்ல விரும்புகிறார்கள். நீங்கள் ஒப்புக்கொண்டால் அவர்கள் பேசுவார்கள்.

**THIRU. C. GNANASEKARAN:** It is not a Point of Order, I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,–

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஊழலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று

ஆளுநர் உரையிலே நீங்கள் கூறியிருக்கிறீர்கள். நான் சொல்ல விரும்புவது எல்லாம் எங்கு பார்த்தாலும் ஊழல் புழுத்து புரையோடி இருக்கிறது. எந்த அலுவலகத்திற்குப் போனாலும், காசு கொடுக்காமல் வேலை நடந்ததாக வரலாறு இல்லை. ஆகவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், எந்த அலுவலகத்திலாவது லஞ்சமோ, ஊழலோ நடந்துவிட்டால் உடனடியாக அவர்களை suspend செய்தோ அல்லது வேலை நீக்கம் செய்யக்கூடிய ஒரு கடுமையான உத்தரவை நீங்கள் போட்டால்தான் இதற்கு ஒரு முற்றுப்புள்ளியை நீங்கள் வைக்க முடியும்.

அதேபோல சொத்து. இப்போது வந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களாக இருக்கட்டும், சொத்துக் கணக்கை இப்போதேகூட தந்துவிட வேண்டும். கடந்த கால ஆட்சியிலே கூட, யாரெல்லாம் அளவுக்கு அதிகமாக சொத்து சேர்த்திருக்கிறார்களோ, நீங்கள் அதற்கெல்லாம் ஒரு குழுவைப் போட்டு, விசாரணைகூட போட்டு, கண்டுபிடித்து, தவறு செய்தவர்களை நீங்கள் உடனடியாக தண்டிக்கவில்லையென்றால் நாடு நம்மை மன்னிக்காது. ஏதோ அரசியல்வாதிகளாக வருகின்றவர்கள் எல்லாம் இதை மிக எளிதாக எடுத்துக்கொண்டு சொத்தை மிகவும் அதிகமாகச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரசியல்வாதி என்று சொல்வதற்கேகூட மிகவும் வெட்கமாக இருக்கிறது. எம்.எல்.ஏ. என்று சொன்னால் அப்படித்தான் இருப்பார். ஒரு மந்திரி என்று சொன்னால் அப்படித்தான் இருப்பார் என்ற தவறான தோற்றம் சமுதாயத்திற்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் ஒவ்வொரு துறையிலும் எப்படியாவது ஊழலை ஒழிப்பதற்கு முழு கவனத்தையும் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11—55*

அதேபோல, கூட்டுறவுத் துறை. தமிழ்நாட்டில் இப்போது அதையெல்லாம் கலைத்திருக்கிறீர்கள், அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதுமட்டும் போதாது. எங்களுடைய வேலூர் கற்பகம் சூப்பர் மார்க்கெட் இந்தியாவிலேயே நம்பர் ஒன் சூப்பர் மார்க்கெட்டாக இருந்தது. ஆனால் அங்கே 11 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் ஏற்பட்டு, அதுகுறித்து, சட்டமன்றத்தில் சொன்னபோது, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துவிட்டோம் என்று சொன்னார்கள். அங்கே தி.மு.க. சேர்மனாக இருந்தவர்மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால்



அவரைப் பதவி நீக்கம் செய்தார்களேயொழிய, இன்றுவரை அவர்மீது ஒரு கிரிமினல் வழக்குகூடப் போடவில்லை, அவர் கைது செய்யப்படவில்லை. வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த கற்பகம் சூப்பர் மார்க்கெட்டை யாரும் என்ன என்று கேட்காமல் மூடிவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நிதியைத் தந்து, அதைத் திறப்பதற்கு வழிசெய்துவிட்டு, தவறு செய்தவர்களை உடனடியாகத் தண்டிக்க வேண்டும். இல்லையென்றால், பயம் தெளிந்துவிடும். கூட்டுறவுத் துறையில் ஒவ்வொரு society-யும் திவால் ஆகியிருக்கிறது.

Gas Cylinder பற்றிச் சொன்னார்கள். எல்லோருக்கும் Gas கொடுப்பதாகச் சொன்னார்களே தேர்தல் அறிக்கையிலே என்று. *500* ரூபாய் *400* ரூபாய் என்று பெற்றுக்கொண்டு Gas-க்கான படிவங்களை விற்றார்கள். வேலூரிலே அவ்வளவு குடிசைகள் எரிந்ததற்கு இதுவும் ஒரு காரணம். குடிசைகளுக்கு எல்லாம் சிலிண்டர் கொடுத்துவிட்டார்கள். நெருப்பு பற்ற வைத்தவுடன் சிலிண்டர் வெடித்து, 10 வீடுகளைத் தாண்டி 'டான்' 'டான்' என்று எகிறி விழுகிறது. அப்படி எகிறி விழுந்தவுடன் தொடர்ந்து குடிசைகள் வரிசையாக பற்றிக்கொண்டுவிட்டது. 500 ரூபாய் Gas connection கொடுப்பதில் ஊழல் *500* ரூபாய் என்று வாங்கி என்ன நடந்திருக்கிறது. அதற்காகவும் நீங்கள் ஒரு குழுவைப் போட்டு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடித்து, யார் எல்லாம் திவால் ஆக்கினார்களோ, அவர்களைப் பிடித்து உள்ளே போட வேண்டும்.

கூட்டுறவுத் துறையில் ஊழல் செய்திருப்பவர்களைப் பிடித்து உள்ளே தள்ளி மூடவேண்டுமென்று சொன்னால் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஜெயில்கள் போதாது. (மேசையைத் தட்டும் ஒலி) சிறைச்சாலைகள் நிச்சயமாகப் போதாது. எனவே வெளி மாநிலங்களில் இருக்கக்கூடிய சிறைகளை நீங்கள் வாடகைக்கு எடுத்து அவர்களை உள்ளே தள்ளி மூடினால்தான், கூட்டுறவுச் சங்கங்களைக் காப்பாற்ற முடியும். ஒவ்வொரு டைரக்டரும் இலட்சாதிபதி, கோடீஸ்வரர் போலாகி அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களையே இல்லாமல் ஆக்கியிருக்கிறார்கள், திவால் ஆக்கியிருக்கிறார்கள். அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க நீங்கள் உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலைத்தால் மட்டும் போதாது. உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், கலைக்க முடியாது என்று சட்டத்தில் இடமில்லை, சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் கொஞ்சம் பரிசீலிக்கக்கூடிய

விஷயம்தான். உள்ளாட்சித் துறையில் வந்திருக்கக்கூடியவர்களால் பல இடங்களில் ஊழல் ஏற்பட்டு உள்ளாட்சி நிர்வாகமே ஸ்தம்பித்துப் போய் இருக்கிறது. மாநகராட்சியாக இருந்தாலும் சரி, நகராட்சிகளாக இருந்தாலும் சரி, பேரூராட்சிகளாக இருந்தாலும் சரி, ஊழலுடைய உறைவிடமாக, ஒவ்வொரு உள்ளாட்சி மன்றமும் இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தால், மக்களுடைய தேவைகளைப் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஆகவே, அவர்களையெல்லாம் பதவி இறக்கம் செய்வதற்கு, ஏதேனும் ஒரு ஆய்வினைச் செய்து உடனடியாக தேர்தலை வைத்து, முறையாக தேர்தலை நடத்தி, மீண்டும் எப்படியாவது மக்களுடைய குறைகளை உடனுக்குடன் தீர்க்கக்கூடிய மன்றங்களைக் கொண்டுவருவது நம்முடைய தலையாய கடமை.

வேலூர் நகராட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் பல போராட்டங்களைச் சந்தித்தோம். அந்தத் தலைவரும், மற்றவர்களும் சேர்ந்து, வேலூர் நகராட்சியை எவ்வளவு மோசமாக நடத்த முடியுமோ அவ்வளவு மோசமாக நடத்தினார்கள். இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. எங்களுடைய வேலூர் நகராட்சியில் எங்களுடைய கோரிக்கையை ஏற்று அந்த அரசு நகராட்சி மன்றத்தைக் கலைத்தது. ஆனால் அவர்கள்மீது இன்றுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அன்று கடனில் மூழ்கிய வேலூர் நகராட்சியில் எந்தவிதமான பணிகளும் நடைபெறுவதில்லை. எங்கு பார்த்தாலும் குப்பை மலை மலையாய் இருந்துகொண்டிருக்கிறது. 6 லாரிகள் பழுதாகி சரி செய்யப்படாமல் அப்படியே கிடக்கின்றன. ஒரே ஒரு லாரி மட்டும் ஓடிக்கொண்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற M.H.O. ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். எங்களுடைய நகராட்சியில் எதற்கும் பணம் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. தண்ணீர் 10 நாட்களுக்கு ஒரு முறை வருகிறது. அடிப்படை வசதிகளைக்கூட செய்து கொடுக்க முடியாமல் அந்த நகராட்சி திண்டாடிக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது.

அடுத்து, வரி மேல்முறையீட்டுக் குழு என்று வைத்தார்கள். முதலில் வரியை ஏற்றிவிட்டார்கள். பிறகு குறைக்கிறோம் என்று சொல்லி லட்சக்கணக்கில் பணத்தை வாங்கினார்கள். அதையெல்லாம் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட்டு, அதைக் குறைத்தபாடும் இல்லை, பிறகு வரியை நிறைய ஏற்றியிருக்கிற காரணத்தினால் எவரும் வரி கட்ட மறுக்கிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து, ஒரு அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி.....





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், 35 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். இது முக்கியமான விஷயம். இரண்டு, மூன்று மடங்கு 100-க்கு 100 சதவீதம் வரியை உயர்த்திவிட்ட காரணத்தால், வரி செலுத்துபவர்கள் செலுத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். Square feet கணக்கில் கணக்கிட்டால் கட்ட முடியாது. எனவே இதற்காக ஒரு Scheme-ஐ evolve செய்து, viable-ஆகச் செய்து, எப்படியாவது வரியைக் குறைத்து, வியாபாரிகளானாலும் சரி, வீட்டு உரிமையாளர்களானாலும் சரி, நீங்கள் சுமூகமான ஒரு தீர்வு கண்டு, வீட்டு உரிமையாளர்களுக்கும் கடைக்காரர்களுக்கும் ஒரு தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*நண்பகல் 12—00*

திருப்பத்தூரில் இருக்கக்கூடிய சந்தனக் கிடங்கு தீப்பற்றி எரிந்ததைப்பற்றி இதே அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து நான் நெடுநேரம் வாதித்திருக்கிறேன். அப்பொழுது பல சந்தேகங்களை நான் கிளப்பினேன். ஆனால், அதற்கெல்லாம் ஒரு விடை காண முடியவில்லை. மீண்டும் அதற்கு நீங்கள் ஓர் ஆய்வினை மேற்கொண்டு விசாரணைக் கமிஷன் போட்டு, அதற்குத் தீர்வு காண உடனடியாக அந்தக் கோப்புகளையெல்லாம் கண்டுபிடித்து, தவறு செய்தவர்களை நீங்கள் தண்டிக்க வேண்டும். ஏனென்றால், இப்பொழுது சந்தன மரமே இல்லாமல் போய்விட்டது. ஜவ்வாது மலை சந்தனம் என்பது உலகத்திலேயே தலைசிறந்த ஒரு சந்தனம். ஆனால் இன்று எங்களுடைய ஜவ்வாது மலையிலே சந்தன மரங்களே கிடையாது. சின்னச் சின்ன, கொஞ்சம் ஒரு விரலளவுக்கு தடிமம் வந்தால், அதையும் வெட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள். பிறகு உள்ளே கொண்டுபோய் சந்தனக் கிடங்கிலே வைத்தால், அங்கேயும் எல்லாவற்றையும் கடத்திவிட்டு, பிறகு நெருப்பு வைத்து - எதையோ நெருப்பு வைத்து அது பூராவும் எரிந்து போய்விட்டது என்று சொல்லி, மொத்த stock - க்கும் எரிந்துபோய்விட்டது என்று ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கெல்லாம் ஒரு தீர்வைக் காண நீங்கள் உடனடியாக இதற்கொரு மறு ஆய்வை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்தகால ஆட்சியிலே கஜானா காலி, கஜானா காலி என்பதுகூட இங்கே ஒரு பிரச்சினையாகப் பேசப்பட்டது. கஜானா காலி என்பது இன்றல்ல. அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேயே கஜானா காலியான காரணத்தினாலேதான் அவர்கள் transfer என்று போட்டால் அவர்களுக்கு T.A. எல்லாம் கொடுக்க வேண்டும் என்று அதையே ban செய்துவிட்டார்கள் கடந்த கால ஆட்சியிலே. அப்போதே நிதி நெருக்கடிக்கு அவர்கள் ஆளாகி, transfer கூடாது என்று எல்லா துறைகளுக்கும் P. & A. R. Department-லும் அவர்கள் ஒரு G.O. போட்டுவிட்டார்கள். இப்போது இந்தக் கிராம நிர்வாக அதிகாரிகள் அங்கே நிறைய ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மாற்றலாம் என்றால் அதற்கும் ban order இருக்கிறது சார், நாங்கள் மாற்ற முடியாது என்று சொல்கிறார்கள். 1,200 V.A.O.-க்கள் இன்று அவர்கள் சொந்த இடங்களுக்கும் போக முடியவில்லை, யாராவது தப்பு பண்ணுகிறவர்களை மாற்றலாம் என்றாலும் மாற்ற முடியவில்லை. எல்லா department-லும் இன்று transfer-ரே போட முடியாமல் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக ஒரு முடிவை எடுத்து P. & A. R. Department-ல் அதை clear செய்து இப்போது அவரவர் போகக் கூடிய இடத்திற்கு, அவர்கள் விருப்பப்பட்ட இடத்திற்குப் போகச் செய்து, தவறு செய்தவர்களை மாற்றக்கூடிய வகையில் நீங்கள் உடனடியாக அவர்களை மாற்றுவதற்கு, அவர்கள் போட்டிருக்கக்கூடிய ban order-ஐ உடனடியாகத் தளர்த்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய மற்ற கருத்துகளை மற்ற உறுப்பினர்கள் பேசும்போது சொல்லலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு point-தான், பேசி முடித்து விடுகிறேன். 10 ஆம் தேதி தேர்தல் முடிந்தது. 11 ஆம் தேதி வேலூரில் இருக்கக்கூடிய பட்டுக்கோட்டை போக்குவரத்துக் கழகத்திலே 24 பேர்களுக்கு Driver Appointment Order போடுகிறார்கள். ஆட்சி மாறியிருக்கிறது. அப்போது திடீரென்று அவர்கள் Posting Order கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை. 11 ஆம் தேதி 24 டிரைவர்களுக்கு அவர்கள் இப்படிப்பட்ட posting-ஐப் போடுகிறார்கள். அதேபோல் promotion list-லே யாராவது 2 அதிமுக.காரர்கள் panel கொடுக்கிறார்கள். அவர்களுக்கு டிஸ்மிஸ் ஆகிறது. Superintendent promotion-க்காக எங்கள் த.மா.கா.காரர் ராஜசேகரன் என்பவர் பேர் கொடுக்கிறார். அவருக்கு dismiss ஆகிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களுக்கு மட்டும் promotion கொடுத்து, அங்கே பட்டுக்கோட்டை போக்குவரத்துக் கழகத்திலே இருக்கக்கூடிய M.D. அப்படி ஓர் உத்தரவைப் போடுகிறார். ஒரு G.M. அப்படி ஓர் உத்தரவைப் போடுகிறார் என்று சொன்னால், இது மக்கள் ஆட்சியாக இல்லை. இது அதிகாரிகள் ஆட்சியாகவேகூட நடந்துகொண்டு போய்விடுமோ என்ற ஓர் அச்சம் இருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இனி மக்களுடைய அந்த ஆட்சிக்கு ஒரு மதிப்பை அளித்து, அதிகார வர்க்கம் இப்படியெல்லாம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.





அதேபோல், Forest Department—லேகூட Principal Chief Conservator என்பவர் உள்ளார். — அங்கே 15 தான் vacancy. ஆனால் 115 பேர்களுக்கு F.R.O. promotion கொடுத்து, அதிலும் ஊழல் நடத்தியிருக்கிறார்கள். இதற்கெல்லாம் நீங்கள் ஓர் ஆய்வை நடத்தி ஒரு சீரான நிர்வாகத்தைப் படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சிவசாமி அவர்கள் 10 மணித்துளிகள் பேசுவார்கள்.

* **திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடிகாத்த திருப்பூர் குமரன் பிறந்த மண்ணில் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் முதன் முதலாகச் சந்தித்து, திராவிட இயக்கத்தில் திருப்புமுனையை ஏற்படுத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க தொழில் நகரான திருப்பூர் மண்ணிலிருந்து, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாசறையிலே வளர்ந்து, திருப்பூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராய் என்னை உயர்த்திய எங்கள் இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்த விவாதத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், கடந்தகால அரசின் உண்மைக்குப் புறம்பான வழக்குகள், அதிகார சக்திகளின் ஆர்ப்பாட்டங்கள், அடக்குமுறைகள், அவதூறுப் பிரசாரங்கள், சிறைச்சாலைக் கொடுமைகள் போன்ற சோதனைகளை வென்று சாதனைகள் படைத்த, சிங்கத்தை அச்சுறுத்தும் துணிச்சல் மட்டுமல்ல, குள்ளநரிகளைச் சமாளிக்கும் ராஜதந்திரமும் கொண்ட புறநானூற்றுப் புதுக்கவிதை, இந்தப் பூமிக்கு வந்த புதுவசந்தம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், கொங்கு மண்டலமே புரட்சித் தலைவியின் கோட்டை, இங்கு மாற்று அணிக்கு இல்லை வேட்டை

[திரு. சி. சிவசாமி] [2001 மே 28

என்று நிரூபித்துக்காட்டி தமிழகத்திலேயே மூன்றாவது இடத்தில் அதிக வாக்கு வித்தியாசத்தைத் தந்து வாக்களித்த திருப்பூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்து எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

*பிற்பகல் 12—05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு தமிழகத்தின் ஆட்சிக் கட்டிலிலே டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அமர்ந்தபோது தமிழகம் விடுதலைப் புலிகளினுடைய வேட்டைக்காடாக இருந்தது. அந்த விடுதலைப் புலிகளுடைய கொட்டத்தை அடக்கி தமிழகத்தை ஓர் அமைதிப் பூங்காவாக உருவாக்கிக் காட்டியவர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். ஆனால், கடந்தகால ஆட்சியில் வெடிகுண்டு கலாசாரத்தால் கோவை மாவட்டத்தில் சட்டம்-ஒழுங்கு கெட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை ஒரு கேள்விக்குறியாக மாறிவிட்டது.

புரட்சித் தலைவி அவர்களால் அடக்கி வைக்கப்பட்ட வீரப்பன், கடந்த கால ஆட்சியில், அரசை ஆட்டிப்படைக்கின்ற அளவுக்கு சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டது. திறமைவாய்ந்த தமிழகக் காவல் துறையால் கண்டுபிடிக்க முடியாத வீரப்பனை, நக்கீரன் கோபாலும், நெடுமாறனும் சுலபமாகச் சந்தித்து பேட்டி கண்டது கடந்த கால ஆட்சியின் சட்டம்-ஒழுங்கு சாதனைகளாகும்.

மக்களுக்காக விட்ட ரயிலில் ரேஷன் அரிசி டிக்கெட் இல்லாமல் பயணம் செய்த காட்சிகள் எல்லாம் கடந்தகால ஆட்சியின் அவலநிலை. ரேஷன் அரிசி ஊழல் மற்றும் குடிநீர் பிரச்சினைபற்றி குரல் எழுப்பிய மார்க்சிஸ்ட் கட்சியின் பெண் கவுன்சிலர், மதுரை லீலாவதியை வன்முறையாளர்கள் வெட்டி படுகொலை செய்தனர்.

சிறுபான்மை மக்கள் பாதுகாப்பிற்கு எதிராக பாளையங்கோட்டை வழிபாட்டு ஸ்தலமான மசூதி மீது வெடிகுண்டு வீசிய கொடூரச் செயல்கள் நடைபெற்றன. கள்ளச் சாராயம்பற்றி புகார் செய்த செய்யாறு மோகன், மண்ணிவாக்கம் பொன்னுரங்கம், திருவள்ளூர் ரத்தினாம்பாள், இந்திராணி போன்றவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

மேலும், கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் பெண்களுக்கு எதிரான வன்முறைக் கொடுமைகளில் 445 கற்பழிப்பு வழக்குகளும், 1,614 பாலியல் பலாத்காரங்களும், 724 பெண் கடத்தல்களும், 146 வரதட்சிணை மரணங்களும், 2,422 பெண்களை ஆபாசமாகப் பேசி கேலி செய்த கொடுமைகளும், 758 வரதட்சிணைக் கொடுமைகளும் நடந்துள்ளன.



2001 மே 28] [திரு. சி. சிவசாமி]

சென்னை கல்லூரி மாணவி சரிகா ஷா, நாகர்கோவில் கல்லூரி மாணவி லட்சுமி பிரியா போன்ற மாணவிகளின் உயிர் பறிப்புக் கொடுமைகள் தமிழகத்தின் பண்பாட்டை தலைகுனியச் செய்துள்ளன. இப்படி கடந்தகால ஆட்சியில் நடைபெற்ற சட்டவிரோதச் செயல்களைத் தடுக்க புரட்சித் தலைவி அவர்கள், 'இவ்வரசு இரும்புக்கரம் கொண்டு அடக்கும்' என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன், போற்றுகிறேன், நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளம் பெருக ஆளுநர் உரையில் கூறியுள்ளதைப்போல, திருப்பூர் நகரில் தொழில் வளம் பெருக, தமிழகத்திலேயே பெரிய மாவட்டமாகத் திகழ்கிற கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கோவை மாநகருக்கு அடுத்தபடியான பெரிய தொழில் நகரமாகவும், மக்கள்தொகை எண்ணிக்கையில் அதிகமாகக் கொண்ட நகரமாகவும் உள்ள திருப்பூர் நகரை தலைமையகமாகக் கொண்டு அருகில் உள்ள பெரியார் மாவட்டத்தில் சில பகுதிகளை இணைத்து புதிய மாவட்டம் அமைக்க வேண்டும் என்ற இப்பகுதி மக்களின் கோரிக்கையை தாயுள்ளம் கொண்ட டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையில் கொங்கு மண்டலமே மொத்த வெற்றியை தங்கள் பாதங்களில் சமர்ப்பித்துள்ளது.

திருப்பூர் நகருக்கு கடந்தகால புரட்சித் தலைவி ஆட்சியில் இரண்டாம் குடிநீர்த் திட்டம், புறவழிச் சாலை, புதிய பேருந்து நிலையம், புதிய இரயில்வே மேம்பாலம், மகளிர் கல்லூரி, புதிய தொழிற்பேட்டைகள், புதிய துணை மின் நிலையங்கள், கிராமப்புறங்களுக்கு இரண்டாவது குடிநீர்த் திட்டத்தின் விரிவாக்கம் என்று பல்வேறு சாதனைகளை தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தொழில் வளர்ச்சிக்காக வாரி வழங்கியுள்ளார்கள்.

மேலும், திருப்பூர் நகரின் தொழில் வளர்ச்சிக்காக புரட்சித் தலைவி அவர்கள் தனது கடந்தகால ஆட்சியில் கொண்டுவந்த மூன்றாவது குடிநீர்த் திட்டம், பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற புதிய மேம்பாட்டுத் திட்டங்களை, பிறகு வந்த தி.மு.க. அரசு தனியாருக்கு தாரைவார்த்து குட்டிச்சுவராக்கி... 

பிற்பகல் 12—10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலமாம் கோவை, பெரியார் மாவட்டங்களிலே, மேட்டுப்பாளையம், அவிநாசி, திருப்பூர், பவானிசாகர், பெருந்துறை, கோபி போன்ற தொகுதிகளில் உள்ள 10 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 30 இலட்சம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினை மற்றும் அப்பகுதிகளைச் சேர்ந்த கால்நடைகளுக்குக் குடிநீர்ப் பிரச்சினை என தண்ணீர்ப் பிரச்சினை பெரும் கேள்விக்குறியாக உள்ளது. இப்பகுதி மக்கள் குடிநீருக்காக ஆழ்குழாய்க் கிணறுகள் 500 அடி முதல் 1,000 அடிவரை அமைத்து தண்ணீரை உறிஞ்சுவதால் நிலத்தடி நீர் 1,000 அடி ஆழத்திற்குச் சென்றுவிட்டது. எனவே, இந்தப் பகுதி இன்னும் 5 ஆண்டுக் காலத்தில் ஒரு பாலைவனமாக மாறும் சூழ்நிலை உருவாகி வருகிறது. இப்பகுதி மக்கள் கால்நடையை நம்பி தங்கள் வாழ்க்கையை நடத்தி வருவதால், இவர்களுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பவானி ஆற்றில் மழைக் காலங்களில் அளவுக்கு அதிகமாக வெளியேறுகின்ற உபரி நீரை இந்தப் பகுதிகளுக்கு உட்பட்ட குளம் குட்டைகளுக்கு மண் வாய்க்கால்கள் மூலம் நிரப்புவதால் இப்பகுதியின் நிலத்தடி நீர் மேம்பட்டு, குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற சூழ்நிலை ஏற்படும். அவ்வாறு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி நிலத்தடி நீர் மேம்படுகின்றபோது இப்பகுதியைச் சேர்ந்த 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிணறுகளிலும், ஆழ்குழாய்க் கிணறுகளிலும் தண்ணீர் மேல்மட்டத்திற்கு வருவதால் மின்சார மோட்டாரைக் கொண்டு தண்ணீரை வெளியே எடுப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

ஆண்டு ஒன்றுக்கு மின்சாரக் கட்டணமாகவும் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்காகவும், புதிய கம்ப்ரசர்கள், மோட்டார்கள் பொருத்துவதற்காகவும் அந்த ஏர் கம்ப்ரசர்கள், மோட்டார்களைப் பழுதுபார்ப்பதற்காவும் அரசாங்கத்தால் 50 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அவிநாசி-அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒட்டுமொத்தமாக 300 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இந்த அவிநாசி அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்ற குளம் குட்டைகளுக்குத் தண்ணீர் நிரப்பப்படுகின்றபோது, அந்த 300 கோடி ரூபாய் செலவை, ஆண்டு ஒன்றுக்கு குடிநீருக்காக அரசு செலவழித்துக்கொண்டிருக்கக்கூடிய அந்த 50 கோடி ரூபாயைத் திருப்பிச் செலுத்துகின்றபோது அந்தக் கடனை அடைப்பதற்கும் அது ஏதுவாக இருக்கும். கடந்த காலத்தில் நடைபெற்று முடிந்த 1999 ஆம் ஆண்டு





நாடாளுமன்றத் தேர்தலின்போது அப்போது ஆண்டுகொண்டிருந்த திமுக அரசு இந்தப் பகுதி மக்களிடத்திலே அவிநாசி-அத்திக்கடவு திட்டத்தை நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம், எங்களுக்கு வாக்களியுங்கள் என்று கூறினார்கள். ஆனால் வாக்களித்த மக்களுக்கு இந்த ஓராண்டுக் காலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தராமல் வஞ்சித்துவிட்டது. எனவே, தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி, கொங்கு மண்டலத்திலே தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகை தந்தபோது பாலைவனமாக மாறக்கூடிய இந்தப் பகுதியை ஒரு சோலைவனமாக மாற்றுவதற்கு நீங்கள் இந்த அவிநாசி-அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்றித் தருவதாகக் கூறினீர்கள். எனவே, தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி அவர்களே, 30 இலட்சம் மக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினையான இந்த அவிநாசி-அத்திக்கடவுத் திட்டத்தைத் தாங்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்தப் பகுதி மக்கள் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

"உலகம் பிறந்தது எனக்காக,
ஓடும் நதிகளும் எனக்காக"

என புரட்சித் தலைவர் பாடிய வரிகளுக்கு ஏற்ப மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் பெற்று 54 ஆண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையில் அனைத்துக் கிராமங்களுக்கும் இந்தியா முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும் வாய்ப்பை இன்னும் நாம் அளிக்கவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம், தேசிய நதிநீர்க் கொள்கையில் மைய அரசு சரியான முடிவு எடுக்காததுதான் என்பது என் கருத்தாகும். இந்திய நாட்டின் வடபுலத்தில் உற்பத்தியாகி ஓடும் நதிகளில் 10 சதவீதம் நீரைப் பயன்படுத்துகிறோம். மீதியுள்ள 90 சதவீத நீர் வீணாகக் கடலில் கலந்துவிடுகிறது. ஆனால் தென் மாநிலங்களில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க கடல் நீரைக் குடிநீராக்க யோசனை தெரிவிக்கப்படுகிறது. ஒரே நாட்டில் எஞ்சியுள்ள தண்ணீரைக் கடலில் விடுவதும், அதே நாட்டில் கடல் நீரைக் குடிநீராக்கத் திட்டம் தீட்டச் சொல்வதும் இந்த நாட்டில்தான். இந்திய நாடு முழுவதும், அனைத்து நதிகளும் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தால் அண்டை மாநிலமான ஆந்திர அரசிடமிருந்து கிருஷ்ணா நதி நீர் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது; தமிழகத்தையொட்டி இருக்கும் முல்லைப் பெரியாறு அணையை 152 அடியாக உயர்த்த கேரளா அரசோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியம் இருந்திருக்காது; காவேரி தண்ணீருக்காக உச்ச நீதிமன்றம் போக வேண்டிய சூழ்நிலை இருந்திருக்காது. இந்திய நாட்டில் அனைத்து நதிகளையும் இணைத்திருந்தால் உணவு உற்பத்தியிலே உலகத்துக்கே ஒரு படியாக,

உலகத்துக்கே படியளக்கும் பரமசிவனாக நாம் இருந்திருப்போம். ஆகவேதான் ஆளுநர் உரையில் நாட்டில் உள்ள அனைத்து ஆறுகளையும் தேசியமயமாக்கவும், தென்னிந்தியாவில் உள்ள பெரும் ஆறுகளை இணைக்கவும், தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் தரத்தை படிப்படியாகச் செயல்படுத்த மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதை நான் வரவேற்கிறேன். அதற்காக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரேஷன் கடை ஊழியர்களுக்கு ஞாயிற்றுக் கிழமைக்குப் பதிலாக வேறு ஒரு தினத்தை விடுமுறையாகக் கொடுத்துவிட்டு ஞாயிற்றுக் கிழமைகளிலே திறக்கின்ற சூழ்நிலையை உருவாக்கினால் அன்றைக்கு விடுமுறையிலே இருக்கக்கூடிய அனைத்து அரசு அலுவலர்களும், தொழிலாளர்களும் அந்த ரேஷன் கடைகளுக்குச் சென்று பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்குச் சுலபமாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சி. சிவசாமி:** உழவர் சந்தை பற்றி தி.மு.க. உறுப்பினர்கள் இங்கே விவாதம் செய்தார்கள். ஆடு, மாடு போன்றவற்றை விற்க ஊருக்கு ஊர் வாரச் சந்தை இருக்கும்போது, உழவர் சந்தை தேவைதானா? எங்கள் ஊரைச் சுற்றி சனிக்கிழமை பெருமாநல்லூர், ஞாயிற்றுக்கிழமை பெருந்துறை, திங்கட்கிழமை குன்னத்தூர், செவ்வாய்க்கிழமை திருப்பூர், புதன்கிழமை அவிநாசி என்று தினம் ஒரு சந்தை இருக்கின்றபோது உழவர் சந்தை தேவைதானா என்பதை ஒரு கணம் நான் சிந்தித்துப் பார்க்க விரும்புகிறேன். ஆடு வளர்க்கின்ற விவசாயி கசாப்பு கடை நடத்த முடியுமா? கொப்பரைத் தேங்காய் கொள்முதலிலே நியாயம் கிடைக்காத விவசாயி இளநீர் கடை வைத்து நடத்த முடியுமா என்பதை இந்த மன்றத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12—15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவருடைய கன்னிப் பேச்சு.

**திரு. சி. சிவசாமி:** இறுதியாக ஒன்றைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தாய்ப் பறவை குஞ்சுகளை அரவணைத்துச் செல்வதுபோல், தணல்வீசும் பாலை நிலத்து கங்காரு வயிற்றுப் பையிலே வைத்து தன்து குட்டியைப் பாதுகாத்து



வளர்ப்பதுபோல், வரிப்புலி தான் ஈன்ற குட்டிகளை தன் நெருப்பு விழிகளையே அகல அபாய விளக்காக உருட்டிக்காட்டி, எதிரிகளிடமிருந்து அதைக் காத்து வருவதுபோல், தமிழகத்து மக்களைப் பாதுகாத்து வருகின்ற கழகக் காவல் தெய்வம், தமிழகத்தின் ஒளி விளக்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனிதமான அரசின் எண்ண உணர்வு மலர்கள் இந்த ஆளுநரின் உரையில் மணம் வீசுகின்றது. தென்பொதிகைத் தவழ்ந்து வந்த தென்றல், தீங்கனியின் சுவை குழைத்த தேன் அகிலும் சந்தனமும் அரைத்தெடுத்த பிழம்பு, இத்தனைக்கும் மேலாக இந்த ஆளுநர் உரை அமைந்திருப்பதை மன நிறைவோடு வரவேற்று, பாராட்டி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. பாரிமோகன் அவர்கள்.

* **திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலிலே தருமபுரி சட்டமன்றத் தொகுதியிலே என்னை வேட்பாளராக அறிவித்து நான் வெற்றி பெறுகின்றவரை ஓயாது வெற்றிக்காகப் பாடுபட்ட எங்களுடைய இயக்கத்தின் நிறுவனத் தலைவர், திண்டிவனம் தந்த திருவிளக்கு, அவர் வாழ்கின்ற திசை நோக்கி அவருக்கு நன்றி தெரிவித்து, வணக்கம் தெரிவித்து, அதே நேரத்திலே எங்களுடைய வெற்றிக்காகவும், மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்காகவும் அல்லும் பகலும் அயராமல் உழைத்த நம்முடைய முதலமைச்சர் சோதனைகளை வென்று சாதனைகள் படைத்த சரித்திர நாயகி (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்களுக்கு தலை வணங்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல இன்றைக்குப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கும், எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவருக்கும் என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆளுநருடைய உரையிலே நல்ல பல அம்சங்கள் இந்த அரசின் சார்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. சேதுசமுத்திரத் திட்டம் அமலாக்கப்பட வேண்டும்; காவிரி பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்; 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு ஒரு சட்டபூர்வ அங்கீகாரத்தைக் கொடுக்க வேண்டும்; கச்சத் தீவை மீட்க வேண்டும் என்கிற மிக நீண்டகாலப் பிரச்சினைகளை இங்கே சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

[திரு. கி. பாரிமோகன்] [2001 மே 28

ஆக, இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். கடந்தகால ஆட்சியிலே தீர்க்கிறோம் என்று சொல்லி இன்றைக்கும் அது தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

69 சதவீத இட ஒதுக்கீடு பெற வேண்டுமென்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே அன்றைக்கு நாங்கள் தி.மு.க.வோடு, 1996-லே 7 கட்சிக் கூட்டணியிலே இருந்தபோது அந்த இறுதிக்கட்டத்திலே மிகப் பெரிய போராட்டத்தை 7 கட்சிக் கூட்டணி சார்பாக நாங்கள் நடத்தியபோது அன்றைக்குச் சிறைச்சாலைகள் எல்லாம் நிரம்பி வழிந்தன. அந்தப் போராட்ட நாளிலே கைது செய்யப்பட்டு, காவல் நிலையங்களிலே வைக்கப்பட்டு, எங்களை அடைப்பதற்கு இடமில்லாத காரணத்தால், அப்போது எல்லோரையும் விடுதலை செய்தார்கள். அப்படிப்பட்ட ஒரு போராட்டத்தை நடத்திய தி.மு.க. அதற்குப் பின்னால் ஆளுங்கட்சியாக 5 ஆண்டுக் காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, அந்த 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு சட்டபூர்வமான ஒரு அங்கீகாரத்தைப் பெறுவதற்கு, 5 ஆண்டுக் காலத்திலே எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, அதற்கு ஒரு தீர்வு காணவில்லை என்கின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது.

இங்கு சொல்லப்பட்ட மிகப் பெரிய திட்டங்கள் எல்லாம் 'தினத்தந்தி' பத்திரிகையிலே வருகின்ற 'சிந்துபாத்' கதைபோல தொடர்ந்து கொண்டிருக்கக்கூடாது. இவற்றிற்குப் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே ஒரு முடிவு ஏற்பட்டாக வேண்டும். புரட்சித் தலைவியால் அது முடியும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறத்திலே வாழ்கின்ற மாணவர்கள் தொழிற்கல்வியிலே சேருகின்றபோது அவர்களுக்கு உரிய இட ஒதுக்கீட்டினை 15 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக உயர்த்தித் தருவோம் என்று இந்த ஆளுநர் உரையிலே சொல்லியிருப்பதை பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலும், என்னுடைய சார்பிலும் நான் வரவேற்கின்றேன். ஆகவே, இட ஒதுக்கீட்டிற்காக இருக்கின்ற இயக்கத்தின் சார்பிலே, டாக்டர் ஐயாவின் சார்பிலே நாங்கள் வரவேற்கின்றோம்.

5 இலட்சம் மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி கொடுப்போம் என்று ஆளுநர் உரையிலே சொல்லியிருப்பது வரவேற்கக் கூடிய அம்சம். இன்றைக்கு மகளிர்தான் மிகப் பெரிய ஆதரவை இந்த மதச்சார்பற்ற கூட்டணிக்கு அளித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). புரட்சித் தலைவிக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மகளிர் இன்றைக்கு



2001 மே 28] [திரு. கி. பாரிமோகன்]

ஆதரவு கொடுத்திருக்கின்ற ஒரு நிலையை வாக்காளர்கள் வாக்களித்த பட்டியலிலிருந்து பார்க்கின்றோம்.

முற்பகல் 12—20

ஆக, புரட்சித் தலைவி அவர்களுக்கு வாக்களித்திருக்கின்ற அந்தப் பெண்களுக்கு என்று மட்டும் இல்லாமல், 33 சதவீதத்தை 50 சதவீதமாக பெண்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களும் இந்த 5 இலட்சம் மகளிருக்குத் தொழில் முனைவோர் பயிற்சி கொடுக்கிறோம் என்று சொல்கின்றபோது, அவர்களுடைய சார்பிலே நாங்கள் வரவேற்கின்றோம்.

அடுத்து, சென்னை நகருக்குக் குடிநீர் வசதிக்காகப் புதிதாக இரண்டு நீர்த்தேக்கங்களை உருவாக்குவோம் என்று சொல்லியிருக்கின்ற இந்த அரசினுடைய எண்ணத்தை எங்களுடைய சார்பிலே நாங்கள் வரவேற்கின்றோம்.

அடுத்து, இந்த ஆளுநர் உரையிலே ஆதிதிராவிடர் பெண்களுக்கு, +1, +2 படிக்கின்ற ஆதிதிராவிடப் பெண்களுக்கு சைக்கிள் வழங்கும் திட்டம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தன்னுடைய ஆட்சிக் காலத்திலே எந்த அளவிற்கு மனிதாபிமானத் திட்டங்களை நிறைவேற்றினாரோ, அதைப்போல மீண்டும் நாங்களெல்லாம் வாக்கு கேட்கின்றபோது புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே அமைகின்றபோது மீண்டும் மனிதாபிமானத் திட்டங்கள் தமிழ்நாட்டிலே அரங்கேறும் என்று சொல்லிக் கேட்டோம். தாய்மார்களும் அதற்கு வாக்களித்தார்கள். ஆக, இன்றைக்கு ஆதிதிராவிடப் பெண்களுக்கு, படிக்கக்கூடிய அந்தப் பெண்களுக்கு சைக்கிள் வழங்குகிறோம் என்று புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். அதே நேரத்திலே மற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவிலே இருக்கின்ற படிக்கக்கூடிய பெண்கள் நாங்கள் மட்டும் என்ன குறை செய்துவிட்டோம், புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கும் சைக்கிள் வழங்கக் கூடாதா என்று கேட்கின்ற நிலையை நாங்கள் பார்க்கின்றோம். ஆக, அந்த வகையிலே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அனைவருக்கும் என்று இல்லாவிட்டாலும்கூட, மிகவும் வசதி குறைந்த படிக்கின்ற அந்தப் பெண்களுக்கும் சைக்கிள் வழங்குகின்ற அந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் (மேசையைத் தட்டும் ஒலி) கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கி. பாரிமோகன்] [2001 மே 28

அடுத்து, இன்றைக்கு 100 பேர் வசிக்கின்ற இடத்திற்கு ஒரு கூட்டுக் குடிநீர் ஆதாரத்தை ஏற்படுத்தித் தருவோம் என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. நான் தேர்ந்தெடுக்கப்பட்ட தருமபுரி தொகுதிக்கு தருமபுரி மாவட்டத்திலே, இதற்கு முன்னால் பேசியவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒரு மிகப் பெரிய அரும்பெரும் வரப்பிரசாதத் திட்டம். தருமபுரி மாவட்டத்திலே flouride என்ற நச்சுப் பொருள் கலந்து, அந்த flouride நிலத்தடி நீரோடு கலந்திருக்கின்ற காரணத்தினால் அந்த மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அப்போது ஜப்பான் நாட்டினுடைய 85 சதவீத நிதியுதவியோடு 526 கோடி ரூபாயிலே உருவாக்கப்பட்ட அந்தத் திட்டம், 1998-லே நம்முடைய இந்திய அரசு பக்கத்து நாட்டிலேயிருந்து அச்சுறுத்தல் வந்தபோது, போக்ரானிலே அணுகுண்டு சோதனை செய்தபோது, ஏற்கெனவே அணுகுண்டால் பாதிக்கப்பட்ட அந்த ஜப்பான் நாடு, 85 சதவீத நிதியைத் தருவேன் என்று ஒத்துக்கொண்ட ஜப்பான் நாட்டிலிருந்து வரவேண்டிய அந்த நிதி நிறுத்தப்பட்டது. அதனால் அந்தத் திட்டம் இன்றுவரை நிலுவையிலே இருந்துகொண்டிருக்கின்றது. இப்போது 1,200 கோடி ரூபாய்க்குமேல் அந்தத் திட்டத்தினுடைய நிதிச் செலவு சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டால் அந்த மாவட்டத்திலேயுள்ள 4,000 கிராமங்கள், 2 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள், பகுதிகளிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு அருமையான நல்ல குடிதண்ணீர் கிடைக்கக்கூடிய, காவிரி தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. முன்னாள் ஆட்சியிலே நான் 1998-லே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஒரு மிகப்பெரிய அரசு விழாவிலே கலந்துகொண்டபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியிலே இந்தத் திட்டத்தைப்பற்றிப் பேசி அன்றைய முதலமைச்சரிடம் நாங்கள் அப்போது ஒரு வாக்குறுதியைப் பெற்றோம். வெளிநாட்டிலேயிருந்து நிதியுதவி வருகிறதோ இல்லையோ, மத்திய அரசு நிதி உதவி தருகிறதோ இல்லையோ, மாநில அரசினுடைய நிதியிலேயிருந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்று அன்றைய முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதியளித்தார்கள். ஆனால், அதற்குப் பின்னால் 6 மாதகாலம் அவர் முதல்வராக இருந்தபோது அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேகமான பணி நடைபெற்றதா என்று எங்களுக்குத் தெரியவில்லை. இதுகூட புரட்சித் தலைவி அவர்களால்தான் நிறைவேற்றப்பட வேண்டும். நிதி நெருக்கடி இருக்கிறது என்று இன்றைக்குச் சொல்லப்படுகிறது.



2001 மே 28] [திரு. கி. பாரிமோகன்]

இருந்தாலும்கூட ஜப்பானிலேயிருந்து மீண்டும் அந்த நிதியைப் பெறுவதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கோரிக்கையாக நான் வைக்கின்றேன்.

அதைப்போலவே, என்னுடைய தருமபுரி சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அதை நான் உங்களுக்குச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எங்கள் மாவட்டமும் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதுமட்டுமல்ல, என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே தீவிரவாதம் தலைதூக்கி, தலைவிரித்தாடுகின்ற தொகுதி, தலைவிரித்தாடுகின்ற மாவட்டம் என்பதும் உங்களுக்கு நான் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது.

அதைப்போல, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற 4 பஞ்சாயத்துகள் தருமபுரிக்கு கிழக்கே 4 பஞ்சாயத்துகள் - திப்பிரெட்டி அள்ளி, கொண்டகரள்ளி, வே.முத்தம்பட்டி, கோடுஹள்ளி ஆகிய 4 பஞ்சாயத்துகள் தனித் தீவாக இருந்து கொண்டிருக்கிறது. பொம்முடி வழியாக தருமபுரி தலைநகருக்கு வரவேண்டுமென்றால் 55 கிலோமீட்டர் சுற்றித்தான் வரவேண்டியுள்ளது. ஆனால், பாகல்பட்டி வழியாக ஒரு குறுக்கு வழியை உருவாக்கினால் 22 கிலோமீட்டரிலே வரமுடியும். 20,000 மக்கள் பயனடையக்கூடிய அந்தத் திட்டத்தையும் இந்த அரசு நிறைவேற்றித் தர வேண்டும்.

அடுத்து, 'அனைவருக்கும் நோயற்ற வாழ்வு' என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியிலே கடந்த ஆட்சியிலே தருமபுரி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் பஞ்சாயத்திலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிதியொதுக்கி பணி இன்னும் நிறைவேறாமல் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுத்து அந்தப் பணியை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—25

அதைப்போல, தருமபுரி ஒன்றியம், உங்கரா நல்லி பஞ்சாயத்திலே எட்டிமரத்துப்பட்டி என்ற கிராமத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டி கடந்த 10 ஆண்டுகளாக மக்கள் கோரிக்கை உள்ளது. கடந்த ஆட்சியிலே அதற்கு முயற்சி செய்து பார்த்து, மக்கள் தோல்வியுற்றுவிட்டார்கள். ஆகவே அங்கேயும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை உருவாக்க வேண்டும். அதற்கான நிபந்தனைகள் எல்லாம்

சரியாக உள்ளன என்று இந்த நேரத்திலே இந்த அரசுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோல, 1998-லே நாங்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் மாபெரும் வெற்றியைப் பெற்று நாடாளுமன்றத்திலே பணியாற்றிக்கொண்டிருக்கும்போது, இப்போது இங்கே அமைச்சராக இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு தம்பிதுரை அவர்கள் அப்போது தரைவழிப் போக்குவரத்து அமைச்சராக இருந்தபோது, தருமபுரி நகருக்கு நான்கு வழிப் பாதை அமைப்பதற்காக எட்டு கோடி ரூபாயை அவர் ஒதுக்கிக் கொடுத்தார். நாங்கள் அதற்கு அவரிடம் மன்றாடிக் கேட்டு அதற்கு ஒதுக்கிக் கொடுத்தபோது அந்த நிதியைக்கூட கடந்தகால அரசு சரியாகப் பயன்படுத்தி தருமபுரி நகருக்கு நான்கு வழிப் பாதை அமைப்பதற்குச் செலவிடவில்லை. அந்த நிதி வேறு பணிக்குத் திருப்பிவிடப்பட்டது. ஆகவே அதையும் ஆய்வு செய்து இந்த அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்ற கொண்டரஹள்ளி பஞ்சாயத்திலே வத்தல்மலை என்ற ஒன்று இருக்கின்றது. அங்கே 2,000 பேர் மலை மேல் வசித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதை வசதி கிடையாது. அவர்கள் சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுக் காலமாக, பாதை வசதி இல்லாமல் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதை வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று இந்த அரசுக்கு என்னுடைய கோரிக்கையை நான் வைக்கிறேன்.

கடந்தகால அரசு, கரும்புக்கு டன்னுக்கு 1,000 ரூபாய் தரவேண்டும் என்று சொல்லி, 8.5 சதவீதம் பிழிதிறன் இருந்தால் அதற்கு இல்லை என்று சொல்கின்ற சூழ்நிலை இப்போது இருக்கின்றது. ஆகவே விவசாயிகளுடைய விளைபொருள்களுக்குச் சரியான விலை நிர்ணயிக்க இந்த அரசு (மணியடிக்கப்பெற்றது) ஒரு கொள்கையை வகுக்க வேண்டும். அதேநேரத்தில், கரும்புக்கு டன்னுக்கு 1,000 ரூபாய் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே கடந்த 5 ஆண்டுக்கால ஆட்சியிலே கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடியது என்பது கண்கூடு. நான் இந்தத் தேர்தலிலே வெற்றி பெற்று பதவி ஏற்பதற்கு முன்னாலேகூட ஓர் அரசு விழாவில் நான் கலந்துகொள்கிற சூழ்நிலையிலே, அங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னால் பெண்கள் எல்லாம் வந்து எங்களுடைய கிராமத்திலே,



கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடுகிறது என்று சொல்லி அந்தப் பெண்கள் முறையிடுகின்றபோது, நான் சொன்னேன் அவர்களிடம், புரட்சித் தலைவியிடம் சொல்லி, கடந்த காலத்திலே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எப்படி ஒரு காவல் துறையினுடைய எல்லைக்கு உட்பட்ட இடத்திலே கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடினால், அந்தக் காவல் நிலையத்தின் S.I. பொறுப்பேற்று suspend செய்யப்படுவார் என்று புரட்சித் தலைவி அறிவித்தார்களோ, அதேபோல் மீண்டும் அந்த நிலையைக் கொண்டுவர முயற்சி செய்வதாகச் சொன்னேன். ஆக காவல் துறை எல்லைக்குள் கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடுமேயானால், அந்தக் காவல் துறையினுடைய அதிகாரிகள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலையை புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் கொண்டுவரவேண்டும்.

என்னுடைய மாவட்டத்திலே, ஓசூரிலே ஏராளமான தொழிற்சாலைகள் கடந்த ஆட்சியிலே மூடப்பட்டன. அவற்றையெல்லாம் ஆய்வு செய்து அவற்றிற்குத் தீர்வு காண்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே தீவிரவாதத்தை ஒழிப்போம், வீரப்பனைப் பிடிப்போம் என்று ஆளுநர் உரையில் சொல்லியிருக்கின்றார்கள். கடந்த காலத்திலே 120 பேர், 5, 6 ஆண்டுக்காலம் மைசூர் சிறைச்சாலையிலே கேள்வி இல்லாமல் தடா சட்டத்திலே அடைக்கப்பட்டார்கள். அப்பாவிகள் ஒருவர் பாதித்தால்கூட பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நாங்கள் அதை எதிர்ப்போம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். வீரப்பனைப் பிடித்துக்கொள்ளுங்கள்; தீவிரவாதிகளைப் பிடித்துக் கொள்ளுங்கள்; ஆனால் அப்பாவிகள் பாதிக்கப்படக் கூடாது. சொல்லொணா சிரமங்களை அந்தக் கிராமத்து மக்கள் அனுபவித்து இருக்கிறார்கள். கொளத்தூர் தொகுதியிலே மட்டும் ஒரு கிராமத்திலே 40 பெண்களுடைய தாலி அறுக்கப்பட்டது. இவை எல்லாம் காவல் துறையினால் அத்துமீறி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. ஜீவானந்தம்.

**திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடக்கினில் தமிழர் வாழ்வை வதக்கி, பின் தெற்கில் வந்து இலக்கினைச் செயலிழந்த எதிரியை அந்நாள் தொட்டே அடக்கடா என்றுரைத்த அறங்காக்கும் தமிழே வணங்குகிறேன். தடைகள் உண்டு என்று சொன்னாலும், தடந்தோள் உண்டென்று தெறித்த தாயே வணங்குகிறேன்.

[திரு. இரா. ஜீவானந்தம்] [2001 மே 28

வரலாற்றுச் சிறப்புமிக்க பேரவையின் மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற வாய்ப்பை நான் பெற்றதற்காக உண்மையிலேயே பெருமைப்படுகிறேன். நடந்து முடிந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தலிலே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக வர வேண்டும் என்கின்ற தீர்ப்பு எழுதினார்கள். இங்கே முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதுபோல சூது, பொய், வஞ்சனை, சூழ்ச்சியின் மூலமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களை தேர்தலில் நிற்கவிடாமல் தடுத்துப் பார்த்தார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்கள்,, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மாதான் என்ற தீர்ப்பை வழங்கிய காரணத்தால் இது வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12—30*

மேதகு ஆளுநருடைய உரை இந்த அரசினுடைய முற்போக்கு எண்ணங்களை பிரதிபலிப்பவையாகவும், சமுதாயத்தினுடைய அடித்தளத்திலே வீழ்ந்து கிடக்கின்ற மக்களுடைய உணர்வுகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் வடிவம் கொடுப்பதாகவும், அனைத்துத் தரப்பினரும் பாராட்டுகின்ற, போற்றுகின்ற பல்வேறு சிறப்பு அம்சங்களைப் பெற்றுள்ளதாகவும் உள்ளது. குறிப்பாக, நெடுந்தூரம் நடந்து, பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத, ஆதிதிராவிட, பழங்குடி மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம், கல்லூரி வரை இலவசக் கல்வி வழங்கும் திட்டம், ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு என்கிற திட்டம், 100 பேருக்கு மேல் வாழ்கின்ற குடியிருப்புகளுக்குக் குடிதண்ணீர் வழங்கும் திட்டம், உதவாத சந்தைகளையெல்லாம் களைந்துவிட்டு, மக்களுக்கு உதவுகின்ற உள்ளூர்ச் சந்தையை உருவாக்க முன்வந்துள்ள திட்டம், மக்களுக்கே அரசு என்ற அடிப்படையில் 90 நாட்களில் கோப்புகளை விரைந்து முடிக்கும் செயல்பாடு, இன்னும் தமிழகத்தினுடைய உரிமைக்காகக் குரல் கொடுத்து கச்சத் தீவை மீட்கவும், கிருஷ்ணா நதிநீர்த் திட்டம், சேதுசமுத்திரத் திட்டம் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக அம்மா அவர்கள் குரல் கொடுத்திருப்பதையும் நாம் உண்மையிலேயே பெரிதும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.



2001 மே 28] [திரு. இரா. ஜீவானந்தம்]

அது மட்டுமல்ல, ஒரு நேரத்திலே பேசினார்கள். Supreme Court தடை விதித்தபோது '69% இட ஒதுக்கீட்டுக்கு இப்படியொரு தடை, நான் முதலமைச்சராக இருக்கிறபோது வந்திருக்குமேயானால், சிரித்துக்கொண்டே சிறைக்குச் சென்றிருப்பேன்' என்று சொன்னார்கள். ஆனால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 69% இட ஒதுக்கீட்டிற்கு என்ன செய்தார்கள்? சிரித்துக்கொண்டே சிறைக்குச் சென்றார்களா? இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்களுக்கான 33% இட ஒதுக்கீட்டை எப்படியாவது பெற்றுத்தர வேண்டுமென்பதற்காக இன்றைக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, தமிழகம், இந்தியாவிலேயே இன்றைக்கு அமைதிப் பூங்காவாகும் நிலையை உருவாக்கவும், அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாகத் திகழ்ந்திடச் செய்யவும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. தமிழகத்திலே சாதி, மத பேதமற்ற நல்லிணக்கத்தை உருவாக்கவும் உறுதி பூண்டுள்ளதை இந்த நாட்டு மக்கள் போற்றி வரவேற்கிறார்கள். கஜானா காலியான நிலையிலும்கூட இதுபோன்ற முற்போக்குத் திட்டங்களைச் செயற்படுத்த முன்வந்துள்ளதை, இந்த ஆற்றலைத்தான் இந்த நாட்டு மக்கள் புரட்சித் தலைவி என்று புகழாரம் சூட்டி மகிழ்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையிலே, தொடங்கப்படுகிற இந்தக் கன்னிப் பேச்சிலே, நான் இந்த அவைக்கு, நாகப்பட்டினம் தொகுதியைச் சார்ந்த விவசாயிகள், ஏழை விவசாயக் கூலியின் பிரதிநிதியாகவும், உழைக்கும் வர்க்கத்தினுடைய பிரதிநிதியாகவும், சிங்கள ராணுவத்தால் நடுக்கடலில் சுட்டுக் கொல்லப்படுகின்ற மீனவ மக்களுடைய பிரதிநிதியாகவும், இந்த அவையிலே இவர்கள் அனைவருடைய எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், நியாயமான ஆசைகள் முதலியவற்றுக்குக் குரல் கொடுக்கவும் கிடைத்த வாய்ப்பாக இதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

அம்மா அவர்கள் தொட்டால் துலங்கும், பார்வை பட்டால் விளங்கும் என்ற வகையிலே அம்மா அவர்களால் நாகை-காயிதே மில்லத் மாவட்டம் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்டதற்குப் பின்னால், இன்றைக்கு அந்த மாவட்டம் தன்னுடைய பொலிவை இழந்து நிற்கிறது. அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது என்ற ஒரே காரணத்தினால் -

[திரு. இரா. ஜீவானந்தம்] [2001 மே 28

அம்மா அவர்கள் கடந்த காலத்தில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற திட்டத்தை உருவாக்கி அதில் நாகப்பட்டினத்தையும் சேர்த்திருந்தார்கள். ஆனால் கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே வேண்டுமென்றே அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினுடைய பெயரை மாற்றி, வேதாரண்யம்-கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று மாற்றி, அதிலே நாகப்பட்டினத்தை, நாகை தொகுதியை அதிலிருந்து எடுத்துவிட்டார்கள். இப்போது நாகை தொகுதியிலே கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவிக் கொண்டிருக்கிறது. ஆகவே புரட்சித் தலைவி, அம்மா அவர்கள், இந்தக் குடிநீர்த் திட்டத்தில் நாகப்பட்டினத்தைச் சேர்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—35*

அது மட்டுமல்ல, இதற்கு முன்னாலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, தங்களுடைய ஆட்சி தமிழ்நாட்டிலே பாலங்கள் கட்டித் தருகிற ஆட்சி, பாலங்கள் கட்டித் தருகிற ஆட்சி என்று பெருமையாகப் பேசினார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புதுவை மாநிலத்தையும், தமிழகத்தையும் இணைக்கிற நாகூர்-வெட்டாற்றுப் பாலம் இடிந்து விழுந்து நான்கு மாத காலமாகிவிட்டது. அந்தப் பாலத்தின் வழியாக இலட்சக்கணக்கான மக்கள் போய் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பேருந்துகள் அதன் வழியாகப் போய் வந்துகொண்டிருக்கின்றன. அங்கே படிக்கின்ற ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகள் அந்தப் பாலத்தின் வழியாகப் போய் வந்துகொண்டிருக்கிறார்கள், அங்கேதான், எம்.ஆர்.எல். இருக்கிறது. ஐ.பி.பி. இருக்கிறது. கோத்தாரி இருக்கிறது. ஸ்பிக் இருக்கிறது. தொழிற்சாலைகளிலே பணிபுரிகிற ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் அந்தப் பாலத்தின் வழியாக வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். ஆனால், கடந்த நான்கு மாதங்கள் ஆகியும்கூட அப்போது இருந்த அரசு, பாலங்கள் கட்டுகிற அரசு என்று சொன்ன அரசால் இதுவரை கட்டுமானப் பணிக்கான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்று கூறி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்கள், போர்க்கால அடிப்படையிலே அந்தப் பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2001 மே 28] [திரு. இரா. ஜீவானந்தம்]

அது மட்டுமல்ல, இப்போது நாகப்பட்டினம், விவசாயிகள் அதிகமாக வாழ்கின்ற ஒரு பகுதியாகும். கடைமடைப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள், விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கிற நிலையைப் போக்க, சிறுதொழில்களைத் தொடங்கி, அதன் மூலமாக அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்துகிற ஒரு நிலையை உருவாக்குவதற்கு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த கவர்னர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற கருத்துகளை உண்மையிலேயே நான் பெரிதும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். நாகப்பட்டினத்தில் மாவட்டத் தலைமை மருத்துவமனை இருக்கிறது. மருத்துவமனை இருக்கிறதே தவிர, அந்த மருத்துவமனைக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் மிகப்பெரியதொரு அவசர சிகிச்சைப் பிரிவுதான். ஆகவே முதலமைச்சர் அவர்கள் இந்தப் பணியைச் செய்து முடிக்க வேண்டுமென்று இந்தநேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள், ஒரேயொரு சொல்லுக்காகக் கட்டுப்பட்டு, நம்பிக்கை வைத்து, நாகை தொகுதியை அம்மா அவர்களின் தொகுதியாக ஆக்கித் தந்துள்ளார்கள். அவர்கள் இத்தொகுதியை..... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள். *(குறுக்கீடு)* இன்னும் பேசுவதற்கு 8 பேர் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பாரமலை அவர்கள்.

* **திரு. க. பாரமலை**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 12 வது சட்டமன்றப் பேரவைக்கு, என்னைத் தேர்தலுக்கு அறிமுகப்படுத்தி, வெற்றிபெறச் செய்த மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து, தேர்ந்தெடுத்த வாக்காளப் பெருமக்களுக்கும், என் வெற்றிக்காக உழைத்த மதச் சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கட்சிகளுடைய தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, குறிப்பாக சில விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதிலே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, கல்லூரி மேற்படிப்பு படிக்கின்ற மாணவிகளுக்கு இலவச கல்வித் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. க. பாரமலை] [2001 மே 28

பிற்பகல் 12—40

இந்த மேதகு ஆளுநர் உரையிலே பொதுவாக, பொது மக்களுடைய உணர்வுகள், அவர்களுடைய வேண்டுகோள், அவர்களுடைய தேவை இவற்றை அடிப்படையாகக் கொண்டு சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் குடிநீர் வழங்கல் 100 பேருக்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்ற ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு குடிநீர் ஆதாரத்தை உருவாக்குவது என்று தெரிவித்திருக்கிறார்கள். கிராமங்களில் இது மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இப்படிப்பட்ட சூழ்நிலையில், குடிநீரைப் பொறுத்தவரையில் எங்கு பார்த்தாலும் பற்றாக்குறையாக இருக்கிறது. என்னுடைய சிவகங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வைகை ஆற்றிலிருந்து, ஆழ்குழாய்க் கிணறு தோண்டி அதன் மூலம் வெளியிடங்களுக்கெல்லாம் தண்ணீரை எடுத்துக் கொள்கிறார்கள். வைகை ஆற்றில் தண்ணீர் குறைவாக இருக்கின்ற காரணத்தால் நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. ஆகவே போதுமான அளவு தண்ணீர் வழங்க இயலவில்லை. இதைக் கருத்திற்கொண்டு மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி, மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளிலிருந்து இரண்டு டி.எம்.சி. தண்ணீரை கேரள அரசுடன் பேசி நாம் வாங்கிக் கொடுத்தோம் என்று சொன்னால், அந்த வைகையிலே தண்ணீர் வருகிறபோது, இராமநாதபுரம் வரை, அந்த வைகை ஆற்றின் இருபக்கமும் இருக்கின்ற கிராமங்களுக்கு நிச்சயமாக போதுமான தண்ணீர் கிடைக்கும். எப்போதும் இந்தப் பிரச்சினை இருக்காது என்பதைச் சொல்லி, அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடும்ப அட்டைகளைப்பற்றி. குடும்ப அட்டைகள் வழங்குவதில் உள்ள குறைபாடுகளைச் சரி செய்து, தரமுள்ள அனைத்து வகையான இன்றியமையாத பொருட்கள் தடையின்றி கிடைக்க உரிய முயற்சிகள் எடுக்கப்படும் என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமங்களிலே நியாய விலைக் கடைகளில் தரமான பொருட்கள் கிடைப்பதில்லை. பல கிராமங்களிலே அந்த உணவுப் பொருட்கள்கூட போய்ச் சேருவது கிடையாது. ஆக, கிராமங்களிலே இருக்கின்ற உழைக்கும் மக்களுக்கு நியாய விலையில், தரமான பொருட்கள் வழங்குவது மிகவும் தலையாய தேவை என்பதை உணர்ந்து இதற்கான ஏற்பாட்டை விரைவாகச் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



2001 மே 28] [திரு. க. பாரமலை]

என் தொகுதியை எடுத்துக்கொண்டால் குறவக்குளம் என்ற ஒரு கிராமம் இருக்கின்றது. அந்தக் கிராமத்திலே இருக்கின்ற மக்கள், அழகாபுரி என்ற கிராமத்திற்குச் சென்றுதான் உணவுப் பொருட்களை வாங்க வேண்டும். ஏறக்குறைய 4 கிலோமீட்டர் தூரம் நடந்து சென்றுதான் உணவுப் பொருட்களை வாங்க வேண்டுமென்கின்ற ஓர் அவலநிலை இருக்கின்றது. அன்றாடம் கூலி வேலை செய்து பிழைக்கின்ற மக்கள், 4 கிலோமீட்டர், 5 கிலோமீட்டர் நடந்து சென்று பொருட்களை வாங்கக்கூடிய நிலையைத் தவிர்த்து, 200 அல்லது 250 குடும்ப கார்டுகள் இருக்கின்ற கிராமங்களுக்கு தனியாகவே அங்கே கடைகள் வைத்து அந்த உணவுப் பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு என்னுடைய பகுதியிலே விவசாயத்தையே நம்பி வாழ்கிற மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். முல்லை - பெரியாறு அணையை 136 அடிக்கு மேலே உயர்த்துவதற்கு கேரள அரசாங்கம் மறுக்கின்ற காரணத்தினாலே, போதிய தண்ணீரும் கிடைக்கவில்லை. ஆக, திருப்புவனம் வட்டாரத்திலே இருக்கின்ற எங்களுடைய மக்கள் எல்லாம் மதுரை மாநகருக்குச் சென்றுதான் கூலி வேலை செய்து பிழைக்கின்றார்கள். ஆயிரக்கணக்கிலே மக்கள் கூலி வேலை செய்து பிழைக்கிறார்கள். நான் இங்கு சட்டமன்ற உறுப்பினராக முன்பு இருந்த காலத்தில், அப்போதிருந்த முதலமைச்சர், மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்களுடன் கலந்துபேசி 15 கிராமங்களுக்கு, நகரப் பேருந்தை அனுமதித்தார்கள். ஆனால் அந்தப் பேருந்துகள் படிப்படியாக நின்றுபோய்விட்டன. வேலைக்குப் போகின்ற ஆட்களினுடைய எண்ணிக்கையும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, அந்தக் கிராமங்களிலிருந்து காலையிலே மதுரை போன்ற நகரங்களுக்குப் போகவும் மாலையிலே திரும்பிச் செல்லவும் போதிய நகரப் பேருந்து வசதிகளை செய்து தர வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நபார்டு திட்டங்கள் மூலமாக ரோடுகள் அமைக்கப் படுகின்றன. பல இடங்களிலே, ரோடுகள் தரமானவையாக இல்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், நான் தேர்தல் நேரத்திலே, அழகாபுரி என்ற கிராமத்திலேயிருந்து முக்குளத்திற்கு ரோடு வழியாகச் செல்ல வேண்டுமென்று விரும்பினேன். அது இரண்டு கிலோமீட்டர் தூரம்தான். அந்தச் சாலை வழியாக காரிலே போக முடியாது என்று சொல்லி, ஐந்து கிலோமீட்டர் தூரம் கிராமங்கள் வழியாகச் செல்ல

[திரு. க. பாரமலை] [2001 மே 28

வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டேன். ரோடு எப்போது போட்டார்கள் என்று கேட்டால், மூன்று மாதத்திற்கு முன்னால்தான் ரோடு போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த ரோடு இப்போது ரோடாக இல்லை. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலையில், தரமான ரோடுகளை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏரிகள் சீரமைப்புபற்றி ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பயன்படுத்துவோரின் தீவிர ஒத்துழைப்புடன் மாநிலத்தில் உள்ள அனைத்து ஏரிகள், பாசன வாய்க்கால்கள் ஆகியவற்றை நவீனப்படுத்தி, கொள்ளளவு திறனை மேம்படுத்தும் சிறப்புத் திட்டம். இது மிக முக்கியமான திட்டம். சென்ற ஆட்சியிலேகூட நிறைய வாய்க்கால்களில் தூர்வாரும் பணிதான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் வெறும் பாசனக் கால்வாய்களை மட்டும் தூர்வாரி பிரயோஜனமே இல்லை. மன்னர்கள் ஆண்ட காலத்தில், திருப்புவனத்தை எடுத்துக்கொண்டால், அங்கு 2 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி உண்டு. ஒரு தடவை அந்தக் கண்மாயைப் பெருக்கிவிட்டால், ஒரு போகம் முழுமையாக விளையக்கூடிய நிலை இருந்தது. ஆனால் இன்று கண்மாய்கள் மேடுபட்டு இருக்கின்ற காரணத்தால், 3 தடவை பெருக்கினால்தான் ஒரு போகம் விளைச்சலை எதிர்பார்க்க முடியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் வெறும் கால்வாய்களை மட்டும் தூர்வாரி விடுவதனாலேயே எந்தப் பிரயோஜனமும் இல்லை. அந்தக் கண்மாய்களைத் தூர்வாரி நவீனப்படுத்தி கொள்ளளவை அதிகப்படுத்துவதுதான் சிறப்பான முயற்சியாகும். அந்த முயற்சியை விரைவாகச் செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—45*

அடுத்து, சேதுசமுத்திரத் திட்டம்பற்றி இங்கே அறிவித்து இருக்கிறார்கள். சேதுசமுத்திரத் திட்டம் பற்றி, இப்போது அமைச்சராக இருக்கிற மாண்புமிகு திரு. செம்மலை அவர்கள் அரை மணிநேர விவாதம் என்ற முறையிலே — நான் சட்டமன்ற உறுப்பினராக 1986 ஆம் ஆண்டு இருந்த காலத்தில் -- இந்த அவையிலே சில கருத்துகளைச் சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு அமைச்சராக இருக்கிற சகோதரி மாண்புமிகு திருமதி வளர்மதி அவர்கள்கூட அதுபற்றி கருத்து சொல்லி இருக்கிறார்கள். இந்தத் திட்டம் மிகமிக முக்கியமான திட்டம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மரியாதைக்குரிய



2001 மே 28] [திரு. க. பாரமலை]

பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அடுத்த ஆண்டே, அன்றைய பிரதமர் திரு. ஜவஹர்லால் நேரு அவர்களுடன் கலந்துபேசி இந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி, 1955 ஆம் ஆண்டு டாக்டர் ந. ராமசாமி முதலியார் தலைமையிலே ஒரு குழு அமைத்து, அந்தக் குழு இந்தச் சேதுசமுத்திரத் திட்டம் எல்லா வகையிலேயும் பொருத்தமானது, அவசியமானது. ஆகையினால் இதை நிறைவேற்ற வேண்டும் என்று அறிக்கை கொடுத்தது. காலம் கடந்துகொண்டேயிருக்கிறது. இன்றுவரை அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை. ஆனால் இப்போது மேதகு ஆளுநர் உரையிலே சொல்லி இருக்கிறார்கள். இதற்கு நிதி ஆதாரம் இல்லை என்று சொன்னாலும், உலக வங்கி மற்றும் பிற வெளி நாடுகளிலிருந்தாவது நிதி பெற்று, இதை அமல்படுத்த முயற்சி எடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் மிக்க பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், இந்தத் திட்டம் பாதுகாப்பு என்ற வகையிலேயும் மிக முக்கியமான திட்டம்.

அதோடு இராமநாதபுரம் மாவட்டத்தைப்பற்றி ஒரு நிபுணர் ஓர் அறிக்கை கொடுத்து இருக்கிறார். அதாவது இராமநாதபுரம் மாவட்டம் — the mountain hid part of the country — என்று சொல்லப்படும் மலை மறைவுப் பகுதியாக உள்ளது. தென்மேற்குப் பருவக் காற்று வீசுகிறபோது, அதை மேற்குத் தொடர்ச்சி மலை தடுத்து விடுகிறது; வடகிழக்குப் பருவக் காற்று வீசுகிறபோது திரிகோணமலை தடுத்துவிடுகிறது. ஆகவே, இவற்றுக்கு இடைப்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, இது பாலைவனமாக மாறக்கூடிய அபாயம் இருக்கிறது என்ற சொல்லி, அந்த நிபுணர் அறிக்கை கொடுத்து இருக்கிறார். அப்படி பாலைவனமாக மாறக்கூடிய அந்த இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இந்த சேதுசமுத்திரத் திட்டம் என்பது ஒரு பெரிய வரப்பிரசாதம் போன்றது, வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய, மக்களுக்கு ஒரு நல்வாழ்வைத் தேடிக் கொடுக்கக்கூடிய ஒரு நல்ல திட்டமாகும். ஆகவே இந்தத் திட்டத்தை அவசியமாக நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை கொடுத்து முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, G.O.44 என்ற ஓர் அரசாணை ஆதிதிராவிடர் நலத் துறை சார்பிலே பிறப்பிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு நியமனங்கள் செய்யப்படுவதற்காக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காக

அந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையை காரணம் இல்லாமல் சென்ற அரசு வாபஸ் வாங்கிக் கொண்டுவிட்டது. அதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட கடுமையாகக் கண்டித்து பல அறிக்கைகள் கொடுத்து இருக்கிறார்கள். அந்த G. O. 44-ல் சொல்லப்பட்டிருப்பது என்னவென்று சொன்னால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாமல் இருக்கிற காலி இடங்களை— A, B, C, D என்ற category-களில் ஒவ்வொரு நிலையிலும், அந்த category-யில் உள்ள lowest post என்று சொல்கிறார்களே, அதற்கு நேரடியாக நியமனம் செய்யப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகிறது. ஆனால் நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள் சட்டமன்றத்திலே வைத்த வெள்ளை அறிக்கையிலே அதற்கு நேர்மாறாக, அந்தத் துறையினுடைய நுழைவு நிலையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். 'A' category என்பது, Revenue Administration-ஐப் பொறுத்தவரை Deputy Collector அந்தஸ்தாகும். அதுதான் lowest level. ஆனால் அந்தத் துறையினுடைய entry level என்று சொல்வது Revenue Inspector அல்லது Clerk-தான். ஆக அந்த category-யில் lowest என்று சொல்வதும், அந்தத் துறையில் நுழைவு level என்று சொல்வது என்பதும் நேர்மாறான விஷயம் என்பது மட்டுமல்ல, அப்படித் துறைகளில் நுழைவு நிலையில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தால், 'A' category-க்கு அவர் செல்ல 25 ஆண்டுகள் ஆகும். ஆகவே அது நிச்சயமாக தாழ்த்தப்பட்ட மக்களுடைய உரிமையைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய ஒன்று. ஆகவே மீண்டும் அந்த அரசாணை 44-ஐ அமல் நடத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—50*

முந்தைய அரசு வெள்ளை அறிக்கை கொடுத்திருக்கிறது. அந்த வெள்ளை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற A, B, C, D என்ற category-களில் A, B, C ஆகிய மூன்று category-களிலும் 27,000 இடங்கள் காலியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் 1-4-1989-லிருந்து உருவான காலிப் பணியிடங்கள் 6,000 என்று சொல்லப்பட்டிருக்கின்றன. அப்படியானால் .அந்த 21,000 இடங்கள் என்ன ஆயிற்று என்பதைத் தெளிவுபடுத்தவில்லை. நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், அந்த 1-4-1989 அன்று இருந்த அந்தக் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக...





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 13 நிமிடங்கள் பேசியிருக்கிறார்கள். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

**திரு. க. பாரமலை:** 1-1-1989 அன்று உள்ளபடி இருக்கிற அந்த நிலுவை காலிப் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டொரு விஷயங்களை இரண்டே நிமிடங்களில் 'சொல்லிவிட விரும்புகிறேன். அதாவது நலிந்து கிடக்கிற நூற்பாலைகளைக் கண்டறிந்து அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை மீண்டும் திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே சோமசுந்தரம் நூற்பாலை என்ற நூற்பாலை இருக்கிறது. நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த அந்த நேரத்தில் தமிழ்நாட்டில் ஐந்தாறு நூற்பாலைகளை மூடவேண்டிய கட்டாயம் வந்தது. அன்றைய முதலமைச்சர் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்களிடம் நான் பேசிய காரணத்தால், அந்த ஓர் ஆலையை மட்டும் அரசின் சார்பில் எடுத்து நடத்தும்படி ஆணை பிறப்பித்தார்கள். அது எடுத்து நடத்தப்பட்டு வந்தது. என்ன காரணத்தாலோ அது மீண்டும் மூடப்பட்டிருக்கிறது. அந்த ஆலையை மீண்டும் எடுத்து அரசு நடத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு விவசாயத்தைப் பொறுத்தவரையில், கரும்பு விவசாயிகளுக்குரிய பணத்தை, அவர்களுக்குச் சேரவேண்டிய பணத்தைத் துரிதமாகக் கொடுக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ராமச்சந்திரன்.

***திரு. கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, ஆரணி தொகுதி வேட்பாளராக நான் நிறுத்தப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆதரவோடு அந்தத் தொகுதியிலே வெற்றிபெற வாய்ப்புத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நான் கேள்விப்பட்டிருக்கின்றேன், தெய்வங்களிலே ஆயிரம் கண்ணுடையாள் என்றுதான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு கோடி கண்ணுடையாள் என்ற சக்தியை புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலேதான் நான் காண்கிறேன். ஏனென்று சொன்னால்,

[திரு. கே. ராமச்சந்திரன்] [2001 மே 28

எங்கேயோ இருக்கிற தொண்டனை, கோடிக்கணக்கான தொண்டர்களில் என்னைத் தேர்வு செய்து ஒரு ஏழைத் தொண்டனுக்கு வாய்ப்புத் தந்து சட்டமன்றத்திலே பேசுகின்ற அளவுக்கு அந்தஸ்தைக் கொடுத்த ஒரே தலைவி, ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி அம்மாதான். என்னை எதிர்த்துப் போட்டியிட்டவர், ஜாதிக் கட்சி என்று சொல்லிக் கொண்டு ஜாலம் காட்டிக் கொண்டிருந்தவர்களையெல்லாம் தவிடுபொடி ஆக்கி, இருக்கும் இடம் தெரியாமல் ஆக்கிய பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் உண்டு. அன்றைக்கு அவர்கள் எல்லாம் ஜாதி, நீதி என்று பேசிக்கொண்டு மக்களை ஏமாற்றி திசை திருப்பிக் கொண்டிருந்தார்கள். அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்த ஒரு தேவதை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தானே தவிர, வேறு யாரும் கிடையாது. ஆனால், இன்றைக்கு அதே ஜாதிக் கட்சியை வைத்துக்கொண்டு சங்கமமாக ஆகிக்கொண்டிருந்த தி.மு.க. கட்சியினர் ஏதோ அரிச்சந்திரர்களைப் போல இன்றைக்குக் காலையிலிருந்து பேசியபோது ஏதோ அவர்களுக்குத்தான் தெரியும் என்று பேசிக்கொண்டிருந்தார்கள். நான் ஒன்றைச் சொல்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார். யார் ஒருவர் தாக்குதலுக்கு ஆளாகிறாரோ முதல் தாக்குதலுக்குப் பிறகு அவர் மும்மடங்கு பலம் பெறுவார் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதேபோலத்தான், புரட்சித் தலைவியை இதே சட்டமன்றத்திலே 1989 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி அவமானப்படுத்தினார்கள். அதன்பிறகுதான் மக்கள் ஒரு தக்க தீர்ப்பு வழங்கி, புரட்சித் தலைவியை முதலமைச்சராக ஆக்கிக் காட்டினார்கள். அதன்பிறகு இரண்டாவது ஒரு சோதனையைத் தாண்டி வந்தார்கள். 1991-லேயிருந்து 1996 வரை ஆட்சியில் இருந்த பிறகு, புரட்சித் தலைவி தேர்தலில் தோற்றபோது, புரட்சித் தலைவிமீது வேண்டுமென்றே வழக்குகளைப் புனைந்து எத்தனையோ சித்திரவதைகளைச் செய்தார்கள். அவற்றையெல்லாம் முறியடித்து, இரண்டாவது கட்டமாக இன்றைக்கு முதலமைச்சராக வந்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12—55*

தேர்தல் நேரத்திலே தேர்தலில் அவரை நிற்க விடாமல் எத்தனையோ சக்திகள் தடுத்துப் பார்த்தன. தேர்தல் நேரத்திலே நான் ஊர் ஊராகச் சொன்னேன். ஒரு கல்யாணம் ஆகின்ற நேரத்திலே மணப்பெண்ணை அழைத்துவிட்டு, மாப்பிள்ளையை அழைத்துவிட்டு, மணப்பெண்ணுக்கு தாலி கட்டுகின்ற நேரத்திலே மாங்கல்யத்தை மறைத்துவிட்டால் இந்தக்



2001 மே 28] [திரு. கே. ராமச்சந்திரன்]

கல்யாணம் நின்றுபோகும் என்று சொல்லுகின்ற பைத்தியக்காரர்களுக்கு ஒன்றைச் சொல்கின்றேன். மாங்கல்யம் இல்லாவிட்டாலும் மஞ்சள் கொம்பைக் கட்டியாவது தாலி கட்டுவார்கள், இது தமிழகத்தினுடைய வரலாறு என்று தேர்தல் நேரத்திலே சொல்லியிருக்கிறோம்.

அதேபோலத்தான் புரட்சித் தலைவிதான் இந்த நாட்டினுடைய முதலமைச்சர் என்று சொன்னோம். அது எப்படி என்றெல்லாம் அவர்கள் மேடையிலே வியாக்கியானம் செய்தார்கள். நாங்கள் எல்லாம் வெற்றி பெற்றால், நாங்கள் ஒட்டுமொத்தமாக புரட்சித் தலைவியைதான் தலைவர் என்று ஏற்றுக்கொள்வோம் வேறு யாரையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்றும், அவர்தான் தலைவர் என்றும் அன்றைக்குச் சொன்னோம். அதே நிலைமைதான் இன்றைக்கு நடந்தது.

இன்றைக்கு இந்தச் சட்டமன்றத்திலே கவர்னர் உரையை விவரமாகப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் கவர்னர் உரையிலே சொல்லப்பட்டதையெல்லாம் முதலிலேயே நான் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். அது எப்படியோ அப்படி அப்படியே வந்துவிட்டது. ஆனால் கவர்னர் உரையிலே 21-வது பக்கம், பத்தி 23-லே கூறப்பட்டிருக்கிற ஒரு தகவல் என்ன என்று சொன்னால், தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களிலும், தொழிற்படிப்புக் கல்லூரிகளிலும் ஊரக மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு 15 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக புரட்சித் தலைவி உயர்த்தியிருக்கிறார் என்பதாகும். அவ்வாறு உயர்த்தியிருப்பதைப் பாராட்டிச் சொல்லி இருக்கிறவர் யார் என்று சொன்னால், எதையுமே பாராட்டாத முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களேதான். 15 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தியதை வரவேற்கிறேன் என்று அவரே சொல்லிவிட்டார். ஆகவே, புரட்சித் தலைவி கொண்டுவந்த தீர்மானம் அத்தனையும் வரவேற்கப்படுகிறது என்று அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்றுதான் பொருளே தவிர வேறு ஒன்றும் கிடையாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழைகளுக்காக மிதிவண்டி தருகிறார்கள். வேறு எந்த ஆட்சியிலாவது இப்படி ஆதிதிராவிடர் மக்களுக்கு 12 ஆம் வகுப்பு படிக்கின்ற வசதியில்லாதவர்களுக்கு சைக்கிள் கொடுக்கிற திட்டத்தை யாராவது கொண்டுவந்தார்களா? கிடையாது. புரட்சித் தலைவிதான் கொண்டுவந்தார்கள். இதேபோல குடிசைகளுக்கு மின் விளக்கு தந்த ஒரே தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

அவர்கள்தான். ஆகவே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. இதைப் பாராட்ட மனமில்லாத திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் அவர்கள் திசை திருப்பிப் பார்த்துக்கொண்டு, திசை திருப்பிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் உத்தமர்கள் போலவும், இவர்கள் எல்லாம் சத்தியசீலர்கள் போலவும் காலையிலிருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். முதன் முதலாக சட்டமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பு இன்றைக்குத்தான் எனக்குக் கிடைத்தது. நான் எத்தனையோ தடவை வந்திருக்கிறேன். மேலேயிருந்து கீழே பார்ப்பேன். இன்றைக்குக் கீழேயிருந்து மேலே பார்க்கிறேன். அந்த அளவிற்கு இன்றைக்கு உயர்த்திக் காட்டிய பெருமை ஒப்பற்ற தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். அந்தத் தலைவிமீது வேண்டுமென்றே, அவர்கள் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று வீம்புக்கு வேட்டையாடுகிறார்கள். தேவையில்லாததையெல்லாம் திசை திருப்பிச் சுற்றி வருகிறார்கள். நேராக ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா என்று சொன்னால், கடைசியிலே வருகிறார்கள். நீங்கள் எடுத்துக்கொண்ட முடிவு சரிதான், அதை ஒருவிதமாகக் கொண்டுவந்து விடுங்கள். நீங்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம், அதிலே கொஞ்சம் சேர்த்துக் கொள்ளுங்கள் என்கிறார்கள். அதை எப்படி சேர்த்துக்கொள்வது?

நாங்கள் சத்துணவுத் திட்டம் கொண்டுவந்தோம் புரட்சித் தலைவர் காலத்திலே. சத்துணவுத் திட்டம் சரியில்லை, நாங்கள் வந்தால் சத்தான திட்டம் கொண்டு வருவோம் என்று சொன்னீர்களே, சத்தான திட்டமாக நடத்தினீர்களா? சத்தும் கிடையாது, சத்தானதும் கிடையாது. அது நோய்வாய்ப்பட்டு, நொஞ்சிப்போய் - கிராமத்திலே சொல்வார்கள், கிராமத்திலே இருப்பதனால் நோய்வாய்ப்பட்டு நோஞ்சான் மாதிரி கிடக்கிறது என்று - சத்துணவுக் கூடங்கள் எல்லாம் இன்றைக்குப் பிரிந்து, இடிந்து விழுந்து கேட்பாரற்றுக் கிடக்கின்றன. ஏன் இந்த நிலைமை என்று சொன்னால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டுவந்த சத்துணவுத் திட்டம்; ஆகவே அதை தலைதூக்க விடக்கூடாது என்று திட்டம் கொண்டுவந்தார்கள்.

பிற்பகல் 1—00

புரட்சித் தலைவி தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டுவந்தார். அதையும் கிடப்பிலே போட்டார்கள் கடந்த ஆட்சியிலே. ஆகவேதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாகவே சொன்னார்கள். நான் எப்படிப்பட்ட திட்டங்களை எப்படி



அறிவித்திருக்கிறேன் என்று சீர்தூக்கிப் பார்க்காமல் பொன்முடி அவர்கள் பேசுகிறார் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். திரும்பத்திரும்ப அவர் அதையேதான் சொன்னாரே தவிர, வேறு எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் ஆரணி தொகுதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருமையெல்லாம் புரட்சித் தலைவியைச் சாரும். இன்றைக்கு ஜாதி, மதம், நீதி என்று சொல்லிக்கொண்டிருந்தவர்களை ஓட ஓட விரட்டியடித்த பெருமை டாக்டர் புரட்சித் தலைவி, அம்மா அவர்களைத்தான் சாரும். இன்றைக்கு அவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்று தேடிக்கொண்டிருக்கின்ற பரிதாப நிலை நாட்டிலே இருக்கிறது. ஆகவேதான் இனிமேலாவது இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படக் கூடாது என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்கள்பற்றி சொன்னார்கள். இதற்கு முன்பு நடந்த சட்டமன்றத்திலேகூட ஐசரிவேலன் அவர்கள், சட்டமன்றக் கேள்வி வரும்போது சொன்னார்கள். கலைஞர் கருணாநிதி அவர்களே நேராக எழுந்து கேட்டார் ஒரு திட்டத்தை. ஆட்சிக்கு வந்து ஆறு மாதத்தில் 16,000 ரேஷன் கடைகள் கொண்டுவருவதாகச் சொன்னீர்களே, என்ன ஆனது என்று கேட்டார். அதற்கு ஐசரிவேலன் எழுந்து சொன்னார், ஒரு பெண்ணிற்கு கல்யாணம் ஆகி 6 மாதம் ஆகிறது. பிள்ளை பிறக்கவில்லை என்று கேட்கிறார் என்று. உடனே கருணாநிதி எழுந்தார், பிள்ளை பிறக்கவில்லை என்று நான் கேட்கவில்லை, கருவாவது தரித்திருக்கிறதா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன் என்று சொன்னார். உடனே கருணாநிதியை எதிர்த்து ஐசரிவேலன் சொன்னார். கருத்தரிப்பதும், கருத்தரிக்காததும் கணவன், மனைவிக்குத்தான் தெரியுமே தவிர, கண்டவருக்கெல்லாம் தெரிய வேண்டிய அவசியம் இல்லை என்று அடித்துச் சொன்னார். ஆகவே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன திட்டத்தைத் தீட்டுகிறார்கள், என்ன பட்ஜெட்டைத் தாக்கல் செய்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்க்காமல் இவ்வளவு ஆவேசப்படுகிறார்கள், ஆத்திரப்படுகிறார்கள். இந்த வேகம் உங்கள் காலத்திலே இருந்ததா என்று கேட்டால் இல்லை. அந்த மாதிரிச் செய்தீர்களா என்று கேட்டால் இல்லை, செய்வதற்கு நாதி இல்லை, வக்கு இல்லை; அப்போது ஊழல், கொடுங்கோல், கொடுமையான காட்சிகள்தான் 5 ஆண்டுக் காலமாக நடத்திக் கொண்டிருந்தார்கள்.

கூட்டுறவுச் சங்கத்திலே கொள்ளை அடித்தது எவ்வளவு தெரியுமா? பல கோடி ரூபாய் கொள்ளை அடித்திருக்கிறார்கள். அதை ஆதாரத்தோடு அடுத்த பட்ஜெட் கூட்டத்தில் விவரமாக முதலமைச்சர் பார்வைக்குக்

கொண்டுவருவேன், கொண்டுவருவேன் என்று சொல்லி, இந்த கவர்னர் உரையிலே உள்ள அத்தனை சிறப்புக்களையும் வரவேற்கிறேன். எனது தொகுதியான ஆரணி தொகுதி மக்களும் வரவேற்கிறார்கள்.

ஆரணி தொகுதி, பட்டுக் கூட்டுறவு சொசைட்டிகள் அதிகமாக உள்ள பகுதி. ஆரணி பட்டுக்குப் புகழ் வாய்ந்த இடம். அந்த ஆரணி பட்டு இன்றைக்குப் பட்டுப்போய் கிடக்கிறது, கெட்டுப்போய் கிடக்கிறது, பட்டு நூல் சேலையை வாங்குவார் இல்லை. நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நெய்கின்ற பட்டுச் சேலைகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. அதைக் கொள்முதல் செய்ய அரசாங்கம் முன்வராமல் இருந்தது. அதைத்தான் புரட்சித் தலைவிகூட நெசவாளர்கள் பிரச்சினையையும் தீர்த்துவைப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே நெசவாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றித்தர வேண்டும்.

அதோடு சாலைகள். சில ஊர்களில் போய்ப் பார்த்தால் ஒரு தெருவில் 200 அடிக்கு சிமெண்ட் ரோடு போட்டிருப்பார்கள். அதோடு நின்று போய் இருக்கும். 'ஏம்பா, 200 அடி வரைக்கும் நின்று போய் இருக்கிறது சிமெண்ட் ரோடு என்று கேட்டால் அவ்வளவுதான் fund என்கிறார்கள். அது என்ன ஒரு தெருவிலே போய் 200 அடி சிமெண்ட் ரோடு போட்டு, மீதி எல்லாமே போடாமல் இப்படி நிறுத்துவது? இந்த நிலைமையை எல்லாம் அவர்கள் செய்தார்கள். அந்த நிலைமை நம்முடைய ஆட்சியிலே வரவே வராது. புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு இடம்தர மாட்டார்கள் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்,

இந்த கவர்னர் உரையிலே தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்கள் அத்தனையையும் வரவேற்கிறேன்; வாழ்த்துகிறேன். தாயே, நீங்கள் என்னை சட்டமன்ற உறுப்பினராக நியமிப்பீர்கள் என்று நான் எண்ணிக்கூட பார்க்கவில்லை. ஆனால் என்னை வெற்றி பெறச் செய்தமைக்கு வாழ்நாள் முழுவதும் நன்றி உடையவனாக, கொள்கை ரீதியாக, எப்போதும் உங்களோடு உறுதுணையாக இருப்பேன். நீங்கள் விழு என்று சொன்னால் விழுவோம். அதிலே மாற்றம் இடையாது. கோடானுகோடி தொண்டர்கள் உங்கள் பின்னாலே அணிவகுத்திருக்கிறார்கள். யாரும் உங்களை அசைத்துப் பார்க்க முடியாது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்க புரட்சித் தலைவியினுடைய ஆட்சி என்று சொல்லி, உரையை முடிக்கின்றேன், விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. திருக்கச்சூர் ஆறுமுகம்.

***திரு. கே. ஆறுமுகம்:** மரபு நிறைந்த மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே நான் நுழைவதற்கும், இங்கே பேசுவதற்கும் காரணகர்த்தாவாக விளங்கிய எங்களுடைய மக்கள் தலைவர் டாக்டர் ஐயா அவர்களை வணங்கி, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற கூட்டணியின் வேட்பாளராகப் போட்டியிட்டு, செங்கை சட்டமன்றத் தொகுதியிலே நான் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கு, எனக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்து, வெற்றி பெறச் செய்தமைக்கு நம்முடைய கூட்டணிக் கட்சியின் தலைவி அவர்களுக்கு, புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். என்னை ஈன்றெடுத்து, வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களுக்கு என்னுடைய வெற்றியைக் காணிக்கையாக்கி, என்னை வெற்றி பெறச் செய்த செங்கற்பட்டு தொகுதி மக்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் கூறி, என்னுடைய முதலாவது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

பிற்பகல் 1—05

எங்களின் சமூக நீதிக் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் பதவி ஆசை இல்லாமல் அனைத்துத் தரப்பு மக்களின் நலனுக்காகப் பாடுபட்டு வருகின்றார்கள். டாக்டர் ஐயா அவர்கள் பின்பற்றி வந்த நெறிகளுக்கொப்ப நானும் மக்களுக்கு உழைப்பதற்காக வாய்ப்பு கொடுத்த மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மக்கள் காவலர் டாக்டர் ஐயா அவர்கள் சட்டமன்றத்திற்கோ, நாடாளுமன்றத்திற்கோ செல்லவில்லை என்றாலும் எங்களைப் போன்றவர்களை எல்லாம் ஆளாக்கி இங்கே அனுப்பி வைத்திருப்பதற்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், விவசாயத்தையே நம்பியிருக்கிற தொகுதியாக செங்கற்பட்டு தொகுதி இருக்கிறது. தொழில் வளமே இல்லாத ஒரு தொகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிற முதல் திட்டத்திலேயே மகளிருக்கான வேலைவாய்ப்பை உருவாக்குவதற்குத் தனியாக தொழிற்பேட்டை அமைக்க இருக்கிறோம்

என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்பேட்டையை செங்கற்பட்டு தொகுதியிலே அமைக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று எங்களுடைய செங்கற்பட்டு சட்டமன்றத் தொகுதியிலே அடங்கிய முக்கிய சாலைகள் மிகவும் மோசமாக உள்ளன. குறிப்பாக, நெரும்பூர்-வாயலூர் சாலை, வீராணம் திட்டத்திலேயிருந்து நெரும்பூர்-விட்டலாபுரம் செல்லும் சாலை, திருக்கழுக்குன்றம் - பொன்விளைந்த களத்தூர் சாலை, திருக்கழுக்குன்றம் - வல்லிபுரம் - கருங்குழி சாலை, திருக்கழுக்குன்றம் - பெரும்பேடு - கிளாப்பாக்கம் - பாண்டூர் சாலைகள் எல்லாம் மோசமாக இருக்கின்றன. இவற்றையெல்லாம் நம்முடைய ஆட்சிக் காலத்திலே சீர்செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று கிராமப்புறச் சாலைகள் அபிவிருத்தித் திட்டத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்த அந்தச் சாலைகள் எல்லாம் அப்படியே இருக்கின்றனவே தவிர, இன்னும் சீர் செய்யப்படவில்லை. அவற்றையெல்லாம் சீர்செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு நகரத்திற்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் உடனடியாகத் தேவை. கழிவுநீர்ச் சாக்கடைகளால் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. இதை உடனடியாகச் செய்துகொடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பாலாற்றங்கரையில் தண்ணீர்ப் பஞ்சம் அதிகமாக உள்ளது. பாலாற்றை ஒட்டியுள்ள திருக்கழுக்குன்றம் ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் தண்ணீர்ப் பிரச்சினை தொடர்ந்து இருந்துவருகிறது. அதேபோன்று திருக்கழுக்குன்றம் பேரூராட்சி, மாமல்லபுரம் பேரூராட்சிகளில் தண்ணீர்ப்பஞ்சம் இருந்துகொண்டே இருக்கிறது. காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 10 ஊராட்சிகள் என்னுடைய தொகுதியிலே வருகின்றன. அதற்குத் தனியாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றும் தேவை என்று இந்தச் சமயத்திலே கூறிக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மழைக் காலங்களிலே அதிகமாக பாலாற்றிலே வரும் தண்ணீர் மழை வெள்ளத்திலே சென்றுவிடுகிறது. அதன் பிறகு அங்கே நீர் ஆதாரம் இல்லாமல் இருக்கிறது. அந்த நீர்





ஆதாரத்தைப் பெருக்குவதற்கு பாலாற்றின் குறுக்கே பல்வேறு இடங்களிலே சிறு சிறு அணைகளைக் கட்டி, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு நீர் ஆதாரத்தை அதிகமாக உண்டுபண்ணி, அங்கே இருக்கிற விவசாயிகள், கிராம மக்கள் இவர்களுடைய குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், உலகச் சிறப்பு வாய்ந்த சுற்றுலாத்தலமாக பிரசித்திபெற்று விளங்குகிற மாமல்லபுரத்தில் இப்போது சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், சுற்றுலாவிற்கு வருகின்றவர்களிடம் அங்கே இருக்கின்ற சிற்பக் கலைக் கூடங்களைக் காண்பதற்கு வரும் உள்ளூர்க்காரர்களிடம் 10 ரூபாயும், வெளிநாட்டிலிருந்து வருகின்ற பயணிகளிடம் 10 டாலரும் அனுமதிக்காகக் கேட்கிறார்கள். அதனால், அந்தப் பகுதியிலே சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்துகொண்டே இருக்கிறதென்று பலதரப்பட்ட மக்களால் அங்கே பேசப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே செவிமடுத்து, உடனடியாக அந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அந்தச் சுற்றுலாத் தலத்திலே புலிக் குகை, ஐந்து ரதம், கடற்கரைக் கோவில், கலங்கரை விளக்கம் என்று பல்வேறு பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகளையெல்லாம் இணைக்கின்ற வகையில் ஒரு சிறிய சுற்றுலா வாகனத்தை அந்தப் பகுதியிலே இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், செங்கற்பட்டு நகரத்திலே இருக்கிற குளவாய் ஏரியிலே படகு குழாம் அமைந்திருக்கிறது. அது இன்னும் சீரடையாமலே அப்படியே கிடப்பிலே இருக்கிறது. செங்கற்பட்டு - ஜி.எஸ்.டி சாலையிலிருந்து அதற்கு வழி அமைத்து ஆழமான பகுதிகள் நிறைந்த குளவாய் ஏரியிலே பல்வேறு தரப்பட்ட படகுகளை விடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு நகரத்திற்குள்ளே பெரும்பாலான பேருந்துகள் இரவு நேரங்களில் வருவதில்லை. அந்தப் பேருந்துகள் புறவழிச் சாலை வழியாகச் செல்கின்றன. அதனாலே, அந்தப் பகுதியிலேயிருந்து வேலைக்குச் செல்கின்றவர்கள், சென்னையிலிருந்து செங்கற்பட்டுக்கு வந்து இறங்குவதற்கு மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் பரிவோடு கேட்க

[திரு. கே. ஆறுமுகம்] [2001 மே 28

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே விடப்பட்ட நகரப் பேருந்துகள், அதேபோன்று புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே விடப்பட்ட நகரப் பேருந்துகள், என்னுடைய தொகுதியிலே அதிகமாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் மீண்டும் இயக்குவதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—10

குறிப்பாக, செங்கற்பட்டிலேயிருந்து பெருமாள் ஏரி, செங்கற்பட்டு - கிளாப்பாக்கம் போன்ற பகுதியிலிருந்து வருகின்ற பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் மீண்டும் இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்சித் தீர்த்தம் என்று வழங்கப்படுகிற திருக்கழுக்குன்றத்தில் உள்ள வேதபுரீஸ்வரர் ஆலயம் மிகவும் பழமைவாய்ந்த, தொன்மைவாய்ந்த ஆலயம். இந்த ஆலயத்திற்கு, மலையிலே இருக்கின்ற கோவிலுக்குச் செல்வதற்கு winch வசதி ஏற்படுத்த வேண்டும். சுற்றி கிரிவலம் வருவதற்கான பாதைகள் சரியில்லை. அதை தார்ச் சாலையாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு அரசு மருத்துவமனையைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் அது சென்னையிலிருந்து திருச்சி செல்கிற சாலையிலே அமைந்திருக்கிற பெரிய மருத்துவமனை. அந்த மருத்துவமனைக்கு அதிக நவீன வசதிகள் தேவை. அதுமட்டுமல்லாமல், விபத்துக்கள் அதிகமாக நடக்கின்றன அந்தப் பகுதியிலே. தினம், தினம் அதிகமாக விபத்துக்கள் நடக்கின்றன. பல நூற்றுக்கணக்கானவர்கள் தினம் தினம் அந்தப் பகுதியிலே பல்வேறு விபத்துக்களுக்கு ஆளாகிறார்கள். அவர்கள் எல்லாம் சரியாக மருத்துவம் பெற முடியாமல் தவிக்கிறார்கள். ஆகவே அந்த மருத்துவமனையை நவீனப்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல் திருவண்ணாமலை மாவட்டம், விழுப்புரம் மாவட்டத்தின் ஒரு பகுதி, காஞ்சிபுரம் மாவட்டத்தை உள்ளடக்கிய பகுதியில் இருக்கிற மக்கள் எல்லாம் அங்கே தினமும் ஆயிரக்கணக்கானவர்கள் புறநோயாளிகளாக வந்து செல்கிறார்கள். மருந்து வசதி மிகக் குறைவாக இருக்கிறது. அதேபோன்று பிரசவ வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.



2001 மே 28] [திரு. கே. ஆறுமுகம்]

அது மட்டுமல்லாமல், நம்முடைய கவர்னர் உரையிலே பல்வேறு பிரச்சினைகளைச் சொல்லியிருந்தாலும் அதிலே ஆதிதிராவிட பெண் குழந்தைகளுக்குத் தனியாக சைக்கிள் வசதி செய்து கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்திலே எவ்வளவு நெருக்கடி இருந்தாலும் ஆதிதிராவிட மாணவர்களுக்கும் அதை வழங்க வேண்டும். அதேபோன்று, படிப்படியாக பிற்படுத்தப்பட்ட மாணவி, மாணவர்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவி, மாணவர்களுக்கும் அந்த வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று அம்மையாரிடம் இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எங்களுடைய பகுதியில் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. ஓய்யாலிக்குப்பம் என்ற மீனவர் பகுதி. அங்கே நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்களின் குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் அந்தப் பகுதியிலே புயல் வருமேயானால் அந்தப் பகுதியில் 10 வீடுகள், 20 வீடுகள் என்று அடித்துச் செல்லப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு அமைச்சர், மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்கூட அந்தப் பகுதியில் 100 வீடுகளுக்கு மேலாகக் கொடுத்திருக்கிறார். அந்த வீடுகள் எல்லாம் இன்றைக்கு இல்லாமலே போய்விட்டன. இதையெல்லாம் தடுப்பதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது). ஒரு நிமிடத்தில் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

களத்தூரான் கால்வாய் என்று ஒரு கால்வாய் இருக்கிறது. அது செங்கற்பட்டிலிருந்து பொன்விளைந்தகளத்தூர் பகுதிக்குச் செல்கிறது. அந்தப் பகுதியிலே பம்பைக் கால்வாய் அடைபட்டுப் போயிருக்கிறது. ஐம்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கும் விவசாய நிலங்களுக்கும் அங்கே சரியாக நீர் வரத்து இல்லை. அதையெல்லாம் சரி செய்ய வேண்டும் என்று இந்தச் சமயத்திலே கேட்டுக்கொண்டு, இந்த ஆளுநர் உரையிலே விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே சொல்லியிருக்கிற அத்தனைப் பணிகளையும் துரிதமாகச் செயலாற்றி விவசாயிகளுடைய நலனிலே நம்முடைய அரசு முழுக் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக நாங்கள் எல்லாம் ஒத்துழைப்பு கொடுப்போம் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி வளர்மதி ஜெபராஜ்.

[2001 மே 28

* **திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூழ்ந்து வந்த சூழ்ச்சிகளைச் சுக்குநூறாக்கி, தாழ்ந்துபோன தமிழகத்தை இன்று தலைநிமிரச் செய்திட்ட வாழும் தெய்வமாம் எங்கள் அன்னையே, தங்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன். என் கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

கடந்த ஆட்சியிலே இருந்தவர்களின் அடாவடித்தனங்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் அத்தனையையும் தூள் தூளாக்கி, மதுரை மேற்குத் தொகுதியிலே, புரட்சித் தலைவி அவர்களை முதலமைச்சராக அமர வைப்பதற்காக எனக்கு வெற்றியைத் தேடித் தந்த எங்கள் மதுரை மேற்குத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே நான் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

கஷ்டத்தில் உழன்ற என்னைப் போன்ற கடைக்கோடிப் பெண்களுக்கும் கல்வி தந்த கருணைத் தாயே, சாலையிலே நடந்து சென்றால் மாணவிகளின் மலர்ப்பாதம் நோகும் என்று சைக்கிளில் போகச் செய்ய ஆளுநர் உரையிலே நீங்கள் திட்டம் தீட்டியிருக்கிறீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அந்தச் சரித்திர சாதனையை உலகத்திலுள்ள அத்தனைபேரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை என் தாயின் கவனத்திற்கு நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1—15*

அம்மா, கருவினிலே பெண் குலத்தைக் கருவறுத்தக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்கத்தான் நீங்கள் கொண்டுவந்த திட்டம் தொட்டில் குழந்தைகள் திட்டம் அம்மா. சாதி வேறுபாடுகளுக்கு அப்பால், மத வேறுபாடுகளுக்கு அப்பால் உலகத்திலுள்ள அத்தனை தலைவர்களாலும் பாராட்டப்பட்ட அன்னை தெரசா அவர்களே பாராட்டிய திட்டம் இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டம். மனிதாபிமானம் உள்ளவர்கள் அத்தனை பேரும் இந்தத் திட்டத்தைப் பாராட்டியபோது, இடையிலே வந்த சதிகாரர்கள், சண்டாளர்கள் சிலபேர் இந்தத் திட்டத்தை முடக்கி விட்டார்கள் அம்மா. சதியெல்லாம் முறியடித்து, சாதனையை மீண்டும் படைத்து பெண் குலத்தைக் காத்திடவே மீண்டும் தொட்டில் குழந்தைத் திட்டத்தைத் தொடங்கி வைத்த உங்கள் கருணை உள்ளத்தைப் பெண் குலம் பாராட்டுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'பிச்சைப் புகினும் கற்கை நன்றே' என்று முன்னோர்கள் சொன்னார்களே, அதை வாழ்க்கையிலே நடைமுறைப்படுத்தி வெற்றி



2001 மே 28] [திருமதி வளர்மதி ஜெபராஜ்]

பெற்ற பெண்மணிதான் நாகரத்தினா என்ற பெண்மணி. அந்தப் பெண்மணியின் வறுமையை ஒழிக்க நீங்கள் ஒரு இலட்சம் ரூபாய் நிதியாகக் கொடுத்திருக்கின்றீர்கள். இது உங்கள் கருணை உள்ளத்திற்கு எடுத்துக்காட்டு. அம்மா, வெளியே தெரிந்த நாகரத்தினா போன்றவர்கள் ஒன்றிரண்டு பேர்தான் இருக்கிறார்கள். ஆனால், நீங்கள் வெளியே தெரியாமல் ஆயிரக்கணக்கான பெண்களுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு இதோ உங்கள் முன்னாலே நின்றுகொண்டிருக்கின்ற இந்த வளர்மதி ஜெபராஜ்.

*1983*-லே என்னைத் தலைமைக் கழகப் பேச்சாளராக ஆக்கி, நீ கல்வி பயிலுவதற்கு நான் என்ன வேண்டுமானாலும் உதவி செய்கிறேன், உன் படிப்பைத் தொடரு என்று எனக்கு உதவி செய்து, *1988* ஆம் ஆண்டு தங்களுடைய சொந்தப் பணத்திலே எனக்குத் திருமணத்தையும் செய்து வைத்து, என்னைப் பெற்ற தாய் எனக்குச் செய்யாத பெருமையையெல்லாம் செய்து, என்னை வாழ வைத்துக்கொண்டிருக்கிற எங்கள் அன்னையே, என்னைப்போல் எத்தனையோ பேர்களுக்கு நீங்கள் கல்வியறிவு கொடுத்திருக்கிறீர்கள். படிப்பதற்கு உதவி செய்திருக்கிறீர்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதிலே பெருமைப்படுகிறேன்.

நீங்கள் உதவி செய்ததைப்போல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் சிலபேருக்கு உதவி செய்தார்கள், அவர்கள் கல்வியறிவு பெற வேண்டும் என்பதற்காக. எந்த எம்.ஜி.ஆர். அவர்கள் கல்வி உதவி செய்தார்களோ, கல்லூரியிலே பணம் கட்டுவதற்கு உதவி செய்தார்களோ, அந்த எம்.ஜி.ஆர். அவர்களையே எதிர்த்து, அந்த எம்.ஜி.ஆர். தொடங்கிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிக்க நினைத்த துரோகிகள் பலபேர் உண்டு அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி). கல்லூரியிலே பணம் கட்டுவதற்கு வக்கில்லாமல் திரிந்தவர்கள் எல்லாம் அன்றைக்கு மக்களுடைய ஆதரவு பெற்றவர்கள் என்று நாடகம் ஆடி, இந்தச் சட்டமன்றத்திலே அமர்ந்து சிலபேர் கடந்த ஆட்சிக் காலத்திலே கொள்ளையடித்து கோடீஸ்வரர்களாக காட்சி அளித்துக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள்மீது நீங்கள் வழக்கு தொடுத்து சிறைச்சாலையிலே அடைக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) என் தாயினுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

கடந்த ஐந்து ஆண்டுக்கால கொடுங்கோல் ஆட்சியில் நீங்கள் சந்தித்த தொல்லைகள், துன்பங்கள், பிரச்சினைகள் ஒன்றா இரண்டா அம்மா,

சொல்லி மாளாது. உலகத்தில் எத்தனையோ பெண்கள் அரசியலிலே இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் இந்த அளவிற்கு உங்களைப்போல் பிரச்சினையைச் சந்தித்தார்களா என்று கேட்டால் கிடையாது. எண்ணிப் பார்க்கிறேன். எதிரிகள் தங்களை நோக்கி அம்புகளை எய்கிறார்கள் என்றவுடன் எந்த எதிரி அம்புகளை எய்தானோ அந்த எதிரியின் காலடியிலே விழுந்து கிடந்து தங்கள் வாழ்க்கையைக் காப்பாற்றிக்கொண்ட துரோகிகள் பலபேர் உண்டு என்பதை எண்ணிப் பார்க்கிறேன். ஆனால் ஆயிரக்கணக்கான அம்புகள் தன்மீது பாய்ந்தபோதும் நெஞ்சுரம் கொண்டு, அதை எதிர்நோக்கி பிரச்சினைகளைச் சமாளித்து, சோதனைகளைச் சாதனைகளாக மாற்றியமைத்து, வேதனையை இதயத்திலே தாங்கிக்கொண்டு புன்னகையை முகத்திலே வரவழைத்துக்கொண்டு தேர்தல் களத்திலே நீங்கள் மக்களைச் சந்தித்தபோது இந்தத் தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் தமிழகத்தை ஆளக்கூடிய தகுதி படைத்த முதலமைச்சர் நீங்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்று உங்களுக்குத் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள்.

உங்களை முதலமைச்சராக அரியணையிலே அமர வைப்பதற்காக தாயே என்னை மதுரை மேற்குத் தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராக உங்கள் ஆசியோடு போட்டியிட்ட உங்கள் பிள்ளையை மக்கள் வெற்றி பெறச் செய்தார்கள். ஆனால் எனக்கு முன்னால் பேசிய மாற்று முகாமிலே இருக்கக்கூடிய ஒரு முன்னாள் அமைச்சர் இங்கே பேசுகின்றபோது சொன்னார். தோல்வி அடைந்தவுடன் அவரை சில I.A.S., I.P.S. அதிகாரிகள் எல்லாம் சந்தித்து வருத்தப்பட்டார்களாம். இருப்பார்கள். இவர்களாலே ஆதாயம் பெற்றவர்கள், கொள்ளை இலாபம் பெற்றவர்கள், சில பேர் இருக்கிறார்கள் அம்மா. உங்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மக்கள் மதுரை மேற்குத் தொகுதியிலே, உங்களை முதலமைச்சராக அமரவைப்பதற்கு வெற்றியை எனக்கு கொடுத்தவுடன் அம்மா, அந்த வெற்றிச் சான்றிதழைக்கூட கொடுக்க மறுத்ததோடு, எதிர் முகாமிலே இருப்பவரை 100 ஓட்டிலாவது வெற்றி பெறச் செய்ய முடியாதா என்று தவித்த சில அதிகாரிகள், புல்லுருவிகள் அங்கே அமர்ந்துகொண்டிருக்கிறார்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அதை அவரே ஒத்துக்கொண்டுவிட்டார். மாற்று முகாமிலே இருக்கக்கூடிய முன்னாள் அமைச்சர் அவர் வாயாலேயே சிலபேர் எங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டார். அம்மா, ஆட்சி மாறிவிட்டது. இன்னும் சில அதிகாரிகள் சில இடங்களிலே மாறவில்லை அம்மா. அதை நீங்கள்



இந்தச் சட்டமன்றத்திலே கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். அம்மா, அரசுப் பணத்திலே, சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, நமக்கு விசுவாசமாக இல்லாமல், எதிரிகளுக்கு விசுவாசமாக இருக்கக்கூடிய அப்பேர்ப்பட்ட புல்லுருவிகளை நீங்கள் தூக்கியெறிய வேண்டுமென்று உங்கள் பாதம் பணிந்து பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன், அம்மா.

*பிற்பகல் 1—20*

ஆளுநர் உரையிலே உள்ள ஒவ்வொரு வார்த்தைகளும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க வார்த்தைகள் என்பதை என் தாயுடைய பாதத்திலே நான் சமர்ப்பிக்கிறேன். இங்கே ஓர் உறுப்பினர் சொன்னார், மாற்று முகாமிலே இருந்தவர். உழவர் சந்தை உலகத்தாராலே பாராட்டப்பெற்ற சந்தை என்றார். மதுரை மேற்குத் தொகுதியிலே, நான் மக்களைச் சந்தித்து வாக்குகளைக் கேட்டபோது, ஒரு தாய், ஒரு வயதான முதியவர் என்னைப் பார்த்துச் சொன்னது என்ன தெரியுமா? நீ பெண்ணாக இருக்கிற காரணத்தாலே உன்னிடம் சொல்கிறேன் சகோதரி, என்றார். பழங்காநத்தம் என்ற பகுதியிலே ஒரு உழவர் சந்தை இருக்கிறது. அம்மா, கண்டிப்பாக முதலமைச்சராக வருவார்கள். வந்தவுடன், அந்தச் சந்தையை மூடச் சொல் என்று சொன்னார்கள். அது திருப்பரங்குன்றம் தொகுதியிலே இருக்கிறது. இருந்தாலும் அம்மாவிடம் சொல்கிறேன் என்றேன். என் மகளின் வீடு அங்கே இருக்கிறது, நான் என் மகளைப் பார்ப்பதற்கு மாலை நேரத்திலே செல்கிறபோது அங்கே தி.மு.க. கரைவேட்டி கட்டியவர்கள் சீட்டு ஆடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மூடச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அம்மா அவர்கள் செயல்படாத உழவர் சந்தையைத்தான் மூடச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட எங்கள் தாய் பெண்களுடைய உணர்வை உணர்ந்துகொண்டு, அந்த உழவர் சந்தையில் என்ன நடக்கிறது என்பதை சென்னையிலே அமர்ந்துகொண்டு, அதைத் தெரிந்துகொண்டு, மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிற வகையாக, மக்களுடைய பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக, அந்தச் செயல்படாத உழவர் சந்தைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என் தாயின் கருணை உள்ளத்திற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மனிதர்களின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, இருப்பிடம்தான். அவற்றை நிறைவேற்றுகிற வகையிலே எங்கள் அம்மா அவர்கள் ஆளுநர் உரையிலே தெரிவித்திருக்கிறார்கள். நோயற்ற வாழ்வைக்

கொடுப்பேன், ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு கொடுப்பேன் என்று அறிவித்திருக்கிறார்கள். இதற்கு எங்கள் தாயின் காலடியில் பணிந்து என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அம்மா, கடந்த ஆட்சியில், பண்பாளர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள், மக்களை எந்த அளவுக்கு ஏமாற்றினார்கள் என்பதற்குப் பல்வேறு எடுத்துக்காட்டுகள் உண்டு. இருந்தாலும், காலத்தின் அருமையினைக் கருதி, நான் ஒன்றிரண்டு கருத்துகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆட்சியில் மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தவர்கள், மக்களைச் சந்தித்து எங்களுடைய தொகுதியிலே வாக்குகளைக் கேட்டபோது, வைகை ஆற்றிலே தடுப்புச் சுவர் கட்டித் தருவோம் என்று சொல்லி ஓட்டுகளைக் கேட்டவர்கள், மக்கள் வாக்களித்தவுடன், வைகை ஆற்றிலே தடுப்புச் சுவற்றைக் கட்டுவதைப்போல நாடகமாடி, அங்கே தடுப்புச் சுவற்றைக் கட்டவில்லை. எனவே, அம்மா அவர்கள் வைகை ஆற்றிலே தடுப்புச் சுவற்றைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வதோடு, அங்கே சலவைத் தொழிலிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிற தொழிலாளர்கள், வைகை ஆற்றிலே கழிவு நீர் ஓடிக்கொண்டிருக்கிற காரணத்தினால், ஒரு மிகப் பெரிய நோய்க்கு ஆளாகி, தோலிலே கொப்பளங்கள் வந்து பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வைகை ஆற்றைச் சுத்தப்படுத்துவதற்கும், அந்த சலவைத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலை நன்றாகச் செய்வதற்கும் மாற்று ஏற்பாட்டை அம்மா செய்துதர வேண்டுமென்று நான் பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு பணிவான வேண்டுகோள். அம்மா, பல ஆண்டுகளாக அங்கே குடிசைகளில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு பட்டா வாங்கித் தருகிறேன் என்று சொல்லி கடந்த ஆட்சியிலே ஏமாற்றிவிட்டார்கள். சட்டத்திற்குட்பட்டு யார், யாருக்கு அங்கே பட்டா கொடுக்க முடியுமோ அவர்களுக்கு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு உதவி செய்ய வேண்டுமென்று தாயின் பாதம் பணிந்து நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அம்மா, உங்களுடைய ஆட்சி, தமிழக மக்களுக்குப் பொற்கால ஆட்சி என்றால், எங்களைப்போன்ற பெண்களுக்கு, தமிழகத் தாய்மார்களுக்கு இது வசந்த காலம் அம்மா. 5 இலட்சம் பெண்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இதை பெண் சமுதாயமே பாராட்டுகிறது. பாரதி சொன்னான்,



" பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி"

என்று பாடினானே புரட்சிக் கவிஞன் பாரதி. அந்த பாரதியினுடைய கனவை நிறைவேற்றும் வகையில் நீங்கள் ஆளுநர் உரையில் திட்டங்களைத் தீட்டியிருக்கிறீர்கள். பெண் சமுதாயமே உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறது.

அம்மா, மங்கையாகப் பிறந்ததற்கு நான் ஒரு காலம் அழுததுண்டு. ஆனால், என் தாய், நீங்கள் என்னை அரவணைத்த பின்புதான் மங்கையாகப் பிறந்ததற்கு மகிழ்ந்தேன் நான். பாவை என்றாலே பாவப்பட்ட ஜென்மம் என்று பேசிய நீசர்கள் வாயடைத்து, பெண் என்றால் பெருமை என்று மாற்றிய மங்கையர்க்கரசியே, அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால், அதிலும் நான் பெண்ணாகவே பிறக்க வேண்டும், அப்போதும் இந்த உன்னதத் தாய் உலகில் அவதாரம் எடுத்து, உலகைக் காக்க வேண்டும். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே பேசுகின்ற வாய்ப்பை உருவாக்கி, என்னுடைய வெற்றிக்குப் பாடுபட்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த செங்கம் வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பொன்முடி அவர்கள் 76 வயதிலேயும் 26 வயது இளைஞனாக கலைஞர் அவர்கள் தேர்தலின்போது தமிழகத்தைச் சுற்றிவந்தார்கள் என்று சொன்னார்கள். வரவேற்கிறேன். பல நீதிமன்றங்களிலே குடும்பங்கள் பிரிகின்றபோது, குழந்தைகள் தாயாரிடம் இருப்பதா, தந்தையிடம் இருப்பதா என்று பிரச்சினை வருகின்றபோது, நீதிபதிகள் Teen Age-ல் இருக்கின்ற குழந்தைகள் எல்லாம் தாயினுடைய பாசத்தில் இருந்தால்தான் பாதுகாப்பு என்று சொல்வார்கள். நான் டாக்டர் பொன்முடி

அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். உங்களுடைய 16 வயது இளைஞர் இந்த அவைக்கு வந்தால் நிச்சயமாக புரட்சித் தலைவி அவர்கள் பாதுகாப்பு அளிப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், 1989-லே இந்த அவையிலே நான் இல்லை. எஸ்.ஆர்.பி. அவர்கள் இருந்தார்கள். இந்த அவையிலே டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு உங்கள் ஆட்சிக் காலத்திலே கொடுத்த பாதுகாப்பை இன்று நீங்கள் நினைத்துப் பார்க்கிறீர்கள், வருவதற்கு அஞ்சுகிறீர்கள். அஞ்ச வேண்டாம். இதைச் சொல்வதற்குக் காரணம், கவர்னர் உரை என்று வருகின்றபோது 14 நாட்கள்தான் ஆகிறது அம்மா அவர்கள் Chief Minister-ஆகி. 5 ஆண்டுகளில் தமிழகத்தில் பொற்கால ஆட்சி என்று விளம்பரப்படுத்திக்கொண்டு தேர்தலுக்கு வந்தீர்கள். பொற்கால ஆட்சியை நீங்கள் நடத்தினீர்கள். என்ன பொற்காலம்? உழவர் சந்தையிலே பொற்காலம் என்று சொல்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கு free-ஆக bus service கொடுத்தோம் என்று சொன்னார்கள். கிராமத்திலே விவசாயம் செய்து, குவிந்த வயிறோடு. பார்க்க முடியாமல் கண்ணில்லாத அந்த ஏழை விவசாயி அந்த பஸ்ஸிலே வந்தாரா? பட்டைக் கரை வேட்டி போட்டு காய்கறிகளை எல்லாம் மொத்த wholesale-லே வாங்கி ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதை ஏற்றிக்கொண்டு போனார்களே உங்கள் கட்சிக்காரர்கள் அவர்களுக்குத்தானே கொடுத்தீர்கள் பாதுகாப்பு? அவர்களுக்குத்தானே free service? இது தேவையா? நான் கேட்கிறேன். அம்பத்தூரிலே எங்கே விவசாயம் நடக்கிறது? எங்கே காய்கறிகளை பயிரிடுகிறார்கள்? அவர்களும் கிராமத்துக்காரர்கள்தான், நானும் கிராமத்துக்காரன்தான். இங்கே இருப்பவர்கள் எல்லோரும் கிராமத்துக்காரர்கள்தான். அம்பத்தூரிலே தண்ணீர் ஏது, விவசாயம் செய்ய நிலம் ஏது? அங்கே ஒரு காய்கறிச் சந்தை என்று போட்டிருக்கிறீர்களே, எதற்காக? சாயந்திர நேரத்திலே ஆந்திராவிலிருந்து கடத்திவரப்பட்ட பாக்கெட் சாராயத்தை விற்பதற்குத்தானே அந்தச் சந்தையை வைத்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி எல்லைக்கு உட்பட்ட இடத்தில் உழவர் சந்தை வைப்பது சுற்றுப்புற கிராமங்களில் இருக்கிற விவசாயிகள் பயிரிடுகின்ற காய்கறிகளை இங்கே கொண்டு வந்து விற்பனை செய்வதற்குத்தானே தவிர, நகராட்சியிலேயே பயிரிட்டு, நகராட்சியிலேயே விற்பதற்கல்ல. அதன் கொள்கையும் அதுவல்ல. வெளியிலேயிருந்து உற்பத்தி செய்கின்ற



காய்கறிகளை பஸ்ஸிலே ஏற்றிக்கொண்டு வருவதற்குத்தான் அந்த வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் நன்றி. பல்லாவரத்திலே என்ன நடந்தது? அம்பத்தூரில் பல பகுதிகளிலிருந்து எடுத்து வருவதாகச் சொல்லியிருக்கிறார். கிருஷ்ணா தண்ணீர் வரவில்லை, ஊருக்கு. விவசாயமே அந்த மாவட்டத்தில் இல்லை என்பதுதான் உண்மை. அங்கு காய்கறி எங்கேயிருந்து வருகிறது?

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா தண்ணீர் வந்தது, தற்போது நின்றது என்பது பத்திரிகையில் வந்தது.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வந்துவிட்டது என்று கடந்த ஆட்சியாளர்கள் கூறுவது மாபெரும் மோசடியாகும். கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரவேயில்லை என்பதுதான் உண்மை. கிருஷ்ணா நதியை இணைக்கின்ற அந்தக் கால்வாய்ப் பணிகளே இன்னும் முடிவு பெறவில்லை என்பதுதான் உண்மை. கண்டலேறு என்று ஒரு நீர்த்தேக்கம் இருக்கிறது. அங்கே மழை நீர் தேங்குகிறது. பெண்ணாற்றிலிருந்து உபரி நீர் அங்கே வந்து சேருகிறது. எப்போதெல்லாம் இங்கே தண்ணீருக்கு மிகவும் தட்டுப்பாடாக இருக்கிறதோ, அப்போது அன்றைய முதல்வர் ஆந்திர முதல்வருக்கு ஒரு அவசர தூது அனுப்புகின்றபோது கண்டலேறுவிலிருந்து அந்த மழை நீரைத் திறந்து விடுவார்கள். அதை கிருஷ்ணா நீர் என்பார்கள். கிருஷ்ணா நீர் வரவே இல்லை. இந்த விவாதத்திற்கு நான் பதிலளிக்கும்போது விரிவாக இதைப்பற்றி கூற உள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 1—30*

**திரு. கோ.சி. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, கண்டலேறு விலாவது நீர் இருந்து, அந்தக் கால்வாயில் வந்து சேர்ந்து, அது இந்த சென்னை மாநகருக்கு உபயோகப்பட்டிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்வதற்கு—

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலுள்ள விஷயம் என்னவென்றால்,

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [2001 மே 28

கண்டலேறுவிலிருந்து வருகின்ற நீர் கிருஷ்ணா நதி நீரே அல்ல. கண்டலேறுவில் தேங்கி இருக்கின்ற நீர், கிருஷ்ணா நதி நீரே அல்ல. அது மழை நீர். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்ணாற்று நீர். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நீர் என்பது ஏதோ கங்கை நீர் போல, புண்ணிய நீர் போல, அந்தக் கிருஷ்ணா நீர் வரவில்லை என்பதை ஒரு குற்றச்சாட்டாக முதலமைச்சர் அவர்கள் சொல்வது எனக்கு சற்று வியப்பாக இருக்கிறது. ஒரு பெரிய முயற்சி. அதுவும் எம்.ஜி.ஆர். காலத்திலே தொடங்கப்பட்ட முயற்சி. இடைக்காலத்திலே அதற்கான வாய்க்கால் வெட்டுவது ஏறத்தாழ 3/4 பங்கு வெட்டப்பட்டு 1/4 பங்கு வெட்டப்பட முடியாத ஒரு வட்டாரத்தில் அது தொடர்ந்து செய்யப்பட வேண்டிய காரியமாக ஆந்திர மாநில அரசு, ஏற்றுக்கொண்ட பொறுப்பாக இருந்தது. கிருஷ்ணா நீர் தர வேண்டுமென்று நாம் ஆந்திர அரசை கேட்கின்றபோது, கிருஷ்ணாவோடு தொடர்புடைய கண்டலேறு ஏரியிலிருந்து அங்கே சேருகிற தண்ணீரைத்தான் தர முடிகிறது என்ற நிலையில் அந்தத் தண்ணீரைத் தந்தார்கள். அது கிருஷ்ணா நீர்த் திட்டம். அந்தத் திட்டத்தில் நமக்குக் கிடைத்த தண்ணீர் கண்டலேறு ஏரியிலிருந்து கிடைத்தாலும்கூட, ஆந்திர அரசு அவர்கள் வழங்கிய தண்ணீர் நமக்குக் கிடைத்தது என்பது உண்மை. வேண்டுமானால் கிருஷ்ணா நீர் என்று அந்த ஆற்றிலேயிருந்து நேராக தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்வதற்கு இடமுண்டு. ஆனால் நமக்குக் கிடைத்த நீர் ஆந்திர அரசு ஒப்புக்கொண்ட முறையிலே தரப்பட்ட தண்ணீர்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீசைலத்திலிருந்து சோமசிலா வரை கால்வாய்ப் பணி எப்போது முடிவடைகிறதோ, அப்போதுதான் கிருஷ்ணா நதி நீர் அந்தக் கால்வாய் வழியாக வரும். அந்தப் பணி இன்னும் முடிவு பெறவில்லை. ஆகவே, இதுவரை இங்கே வந்தது வட பெண்ணாற்று நதியிலிருந்தும், கண்டலேறுவில் தேங்கியிருந்த மழை நீரும்தானே தவிர, கிருஷ்ணா நதி நீர் அல்ல.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வந்தது நீர் என்றாவது ஒத்துக்கொண்டதற்காக நன்றி. (சிரிப்பு)



2001 மே 28]

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வந்தது கிருஷ்ணா நீர் அல்ல என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக்கொண்டதற்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாறி, மாறி இரண்டு பேரும் ஒரே கருத்தைத்தான் சொல்கிறீர்கள். முதலமைச்சர் அவர்கள் சொல்வது கண்டலேறு அணையிலிருந்து வரக் கூடியது கிருஷ்ணா நீர் அல்ல என்று அவர்கள் சொல்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏதோ தண்ணீர் வந்தது என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக இரண்டும் ஒன்றுதான். அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்க வேண்டிய ஒரு கட்டாய நிலையை எனக்கு ஏற்படுத்தியிருக்கிறீர்கள். ஆந்திர அரசுக்கும் நமக்கும் ஒப்பந்தம். கிருஷ்ணா நீர் தருவதற்காகத்தான் அந்த ஒப்பந்தம். கிருஷ்ணாவில் ஏராளமான நீர் கிடைக்கிறது என்ற காரணத்தினால், அந்த ஒப்பந்தம்; அது இந்திரா காந்தி அவர்கள் காலத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தம். என்னென்ன காரணத்தினாலோ இடைக்காலத்திலே அது வேகப்படுத்தப்படவில்லை. தி.மு.க. அரசு ஏற்பட்டு, அதை வேகப்படுத்துவதற்கு அந்த மாநில அமைச்சரிடத்திலே, முதலமைச்சரிடத்திலே பேசி, உரிய நிதி எல்லாம் வழங்கப்பட்டு, அவர்கள் செய்கிற அந்தப் பணி சில இடைக்கால சூழ்நிலையால் அங்கே தடைபட்டது. செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது. ஆனாலும்கூட, சென்னை மாநகர தண்ணீர் தர வேண்டுமென்று வலியுறுத்தியபோது, சென்னை மாநகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைக் கருதி கண்டலேறு அணையிலிருந்து வரக்கூடிய தண்ணீரைத் தருவதற்கு ஒப்புக்கொண்டு, அதுவும் ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு சென்னை மாநகர மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திருக்கிறது என்பதை எண்ணும்போது நான் ஆந்திர அரசுக்கு நன்றி சொல்ல வேண்டியவனாகத்தான் இங்கே கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைக் கொண்டுவந்தவரே இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியிருக்கின்றபோது, அந்தத் திட்டத்தை நிச்சயமாக நாங்கள் குறை கூற மாட்டோம். அந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவுபெற வேண்டும், செயல்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான், நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு

1991-லிருந்து 1996 வரை 4 முறை அல்லது 5 முறை ஹைதராபாத்திற்குச் சென்று மாறிக் கொண்டேயிருந்த ஆந்திர முதலமைச்சர்களைச் சந்தித்து, இந்தத் திட்டத்தை எப்படியாவது விரைவுபடுத்தி நிறைவுபெறச் செய்ய வேண்டுமென்று பகீரத முயற்சிகள் மேற்கொண்டேன். அப்போது அந்தத் திட்டத்தை வேகப்படுத்த வேகமாக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று கூறுவது உண்மையல்ல. அதன்பிறகு, ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அப்போது கடந்தகால ஆட்சியாளர்கள் வேகத்தைக் காண்பித்தார்கள். எதிலே? கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைச் செயல்படுத்துவதில் வேகத்தை காட்டவில்லை. முன்னாள் முதலமைச்சரின் மகனை சென்னை மேயராக ஆக்க வேண்டுமென்பதிலே வேகம் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், ஆட்சிக்கு வந்தவுடனேயே, 1996 ஆம் ஆண்டிலேயே அவசர கோலத்தில் கிருஷ்ணா நதி நீர் வந்துவிட்டது, வந்து விட்டது என்று ஒரு விழா நடத்தினார்கள். ஆந்திர முதலமைச்சரை அழைத்தார்கள். வெள்ளிக் குடத்திலே அவரும் நீர் வந்து விட்டது என்று கொடுத்தார். கிருஷ்ணா நதி நீர் வரவில்லை.

அதன்பிறகு, இரண்டாம் முறை, ஓர் ஆண்டு கழித்து இன்னொரு விழாவை நடத்தினார்கள். நிறைவேறிய திட்டத்திற்கு, எதற்கு மீண்டும் விழா? அப்போதும் கிருஷ்ணா நதி நீர் வரவில்லை. இன்று வரை கிருஷ்ணா நதி நீர் வரவில்லை. அவர்கள்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்த வேகமும் காட்டவில்லை. அவர்கள் காட்டிய வேகம் எல்லாம் முன்னாள் முதல்வரின் மகனை மேயர் ஆக்க வேண்டுமென்பதற்காக அவசரகோலத்தில் திட்டம் முடிந்துவிட்டதாக அறிவித்துவிட்டார்கள். அதை எப்படிச் சமாளிப்பது, எப்படிச் சமாளிப்பது என்று புரியாமல் இன்றைக்கு விழிக்கிறார்கள்.

*பிற்பகல் 1—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது காவல் துறையிலே கறுப்பு ஆடுகள் என்று சொல்லியிருந்தார்கள். அதற்குப் பின்னாலே வந்த முதலமைச்சர் காவல் துறையிலே ஈரலே இல்லையென்று சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் இங்கே பேசுகின்றபோது, காலையிலே, இன்னும் நிறைய அதிகாரிகள் என்னிடம் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். இதைப் பார்க்கின்றபோது அரசு அதிகாரிகள் ஜனநாயக மரபிலே தங்களுடைய பணியைச் செய்யவில்லை என்பதை எதிர்க்கட்சி



உறுப்பினர், முன்னாள் அமைச்சர் ஒத்துக்கொண்டார். நான் அம்மா அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், தேர்தல் காலங்களிலே எதிர் அணியிலே இருந்த கூட்டணி...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதிகாரிகளைச் சந்திப்பதையே ஒரு சட்டமன்ற உறுப்பினர் சந்திப்பது தவறு என்கிற அளவிற்கு ஜனநாயகத்தினுடைய பண்பை போளூர் வரதன் அவர்கள் புரிந்துவைத்திருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் அதிகாரிகளையே சந்திக்கக்கூடாது என்று ஏதாவது ஜனநாயகத்திலே இருக்கிறதா? சந்தித்ததே தவறு என்று ஆளுக்கு ஆள் வாதம் செய்தால் என்ன பொருள் அதிலே? சந்தித்ததைச் சொன்னால் என்ன தவறு இருக்க முடியும்?

**திரு. போளூர் வரதன்:** தலைவர் அவர்களே, அவருடைய தொகுதிக்குட்பட்ட அதிகாரிகளை மக்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்கின்ற அதிகாரிகளை ஒரு சட்டமன்ற உறுப்பினர் சென்று சந்திப்பதிலே தவறு இல்லை. அந்தத் தொகுதிக்குட்பட்டவர்கள் வந்து அந்தச் சட்டமன்ற உறுப்பினரைப் பார்ப்பது முறை. ஒரு D.G.P. போய் எதற்குச் சந்திக்க வேண்டும்? ஒரு I.A.S. Officer, Secretary போய் அவரை எதற்குச் சந்திக்க வேண்டும்? (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் Transport Commissioner போய் அவரை எதற்குச் சந்திக்க வேண்டும்? என்ன இருக்கிறது அங்கே?

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் அந்த அதிகாரிகள் எல்லாம் என்னைச் சந்திக்கக்கூடாது என்று ஏதாவது இருக்கிறதா? சாதாரண குடிமகன்கூட ஒரு துறையினுடைய அதிகாரியைச் சந்திக்கலாம் என்று இருக்கும்போது ஒரு சட்டமன்ற உறுப்பினர் சென்று சந்திப்பதிலே என்ன இருக்க முடியும்?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏதோ அதிகாரிகளை மிரட்டுவது போல் இருக்கிறது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

[2001 மே 28

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**டாக்டர் க. பொன்முடி:** இது ஆதாரமில்லாத ஒரு குற்றச்சாட்டு. இதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதிமுறைகளில், இந்தச் சட்டமன்றத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறையிலே, யார் மீதாவது குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் அந்தக் குற்றச்சாட்டுபற்றி முன்கூட்டியே பேரவைத் தலைவருக்குத் தெரிவித்து, அதற்கு ஆதாரம் காட்டிய பின்னரே அனுமதி பெற்று சொல்ல வேண்டும். மாண்புமிகு மணி அவர்கள் ** என்று சொல்வது இந்த அவைக் குறிப்பிலே இடம் பெறக்கூடாது என்பதைப் பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்கள், குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன்னால், ஆதாரத்தோடு சொல்ல வேண்டும்; அதை நிரூபிக்க வேண்டும். ஆகவே, தாங்கள் சொன்னது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. பத்திரிகைகள் வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. வரதன் அவர்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தோடு சொல்கிறேன். **

*பிற்பகல் 1—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி அவர்களே, தாங்கள் விவாதத்திலே கலந்துகொள்வதற்கு முன்னரே உரிய ஆதாரத்தை என்னிடத்திலே கொடுத்துவிட்டு, நீங்கள் பேசலாம். இப்போது இந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலே இடம் பெறாது. பத்திரிகைகள் வெளியிட வேண்டாம். வரதன் அவர்கள் பேசி முடியுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் பிரச்சினை எதுவாக இருந்தாலும் ஒன்றை மட்டும் நான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2001 மே 28] [திரு. போளூர் வரதன்]

தெளிவாகச் சொல்கின்றேன். எதிரணியிலே நிறுத்தப்பட்ட வேட்பாளர்களுக்கு இந்த நாட்டினுடைய பிரதமர் வந்து ஓட்டு கேட்டார்கள். இந்திய நாட்டிலே மிகச் சக்தியுள்ள தலைவர்கள் எல்லாம் வந்து ஓட்டு கேட்டார்கள். இங்கே பெரும்பான்மையாக வீற்றிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் அத்தனை பேருக்குமே மக்கள் சக்தி படைத்த டாக்டர் புரட்சித் தலைவி தவிர வேறு யாரும் மக்களிடத்திலே வாக்குகள் கேட்கவில்லை. தமிழகத்திலே இருக்கின்ற ஒட்டுமொத்தமான மக்கள், வாக்காளர்கள் அம்மா உங்கள் தலைமையை நம்புகிறார்கள். துணிந்து நடவடிக்கை எடுங்கள். ஈரல் போனவர்களையும், இதயம் இல்லாதவர்களையும் இந்த ஆட்சியில் வைத்துக்கொண்டு, உங்களை நம்பி வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு நாம் சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது. காரணம், ஈரலும் இதயமும் இல்லாத அதிகாரிகள் எப்படியிருப்பார்கள் என்பதை கடந்தகால ஆட்சியிலே நாம் பார்த்தோம்.

இன்றைக்குப் பேசுகிறார்கள். ஒரு பெண் என்றுகூடப் பார்க்கவில்லை. என்ன செய்தார்கள் ஆட்சியில் இருக்கும்போது? நம்முடைய வீட்டிலும் அக்கா இருக்கிறார்கள், அம்மா இருக்கிறார்கள். சகோதரிகள் இருக்கிறார்கள். அணிகின்ற உடையைக்கூட படம் பிடித்து, டி.வி.யில் காண்பித்தார்களே! தருமமா! காலில் அணிகிற செருப்பு, டி.வி.யில் விளம்பரப்படுத்தினார்களே! இதுதான் பொற்கால ஆட்சியா? உத்தமர்களைப் போன்று பேசுகின்றீர்களே? எத்தனை நாட்கள் ஆகின்றன அம்மா முதலமைச்சராகி? 14 days. 14 நாட்களில் குற்றச்சாட்டு என்று வருகிறீர்கள். நீங்கள் எத்தனை முறை முதலமைச்சர் இந்த மண்ணிலே, இந்த அவையிலே? நீங்கள் செய்த ஊழல்கள், அவற்றுக்கு Records இருக்கின்றன. சர்க்காரியா Commission எங்கே போயிற்று? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியேதான் இருக்கிறது. நான் கேட்கிறேன், ஊழல், ஊழல், ஊழல் என்று ஊர்பூராச் சொன்னீர்கள். ஊழல் செய்யவில்லை, அம்மா நிரபராதி என்று தமிழகத்து மக்கள் இன்றைக்குத் தீர்ப்பளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா சொன்னார். "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்று. உங்கள் தலைவர்தானே அவர்? இல்லையென்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரதன், அவர் எங்களுக்கும் தலைவர்தான். (சிரிப்பு)

**திரு. போளூர் வரதன்:** நான் பேரறிஞர் அண்ணாமீது மிக்க மரியாதை உள்ளவன். பள்ளியிலே ஒன்பதாவது வகுப்பு படிக்கும்போது பேச்சுப் போட்டியிலே அவர் எனக்குக் கொடுத்த திருக்குறள் புத்தகத்தை

இன்றைக்கும் வைத்திருக்கிறேன். அவர்மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. மரியாதை இருக்கிறது.

புரட்சித் தலைவர் சொன்னார். 1980-லே மக்கள் தீர்ப்பை தலை வணங்கி ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார். 1967-லே பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மக்கள் தீர்ப்பிற்கு மதிப்பளிக்கிறேன் என்று சொன்னார்கள். 14 நாட்கள்கூட ஆகவில்லை. மக்கள் சக்திக்கு மதிப்பளிக்காமல் அரிப்பு உங்களுக்கு. எங்கே அரிக்கிறது இப்போது? என்ன நடந்து போயிற்று இப்போது? இன்னும் அந்த அதிகாரிகள் எல்லாம் உங்களை வந்து பார்ப்பதற்கு என்ன காரணம்? நீங்கள் அதிகாரிகளைத் தேடுவதற்கு என்ன காரணம்? செய்த ஊழல் ஒன்றைத் தவிர, வேறு என்ன உண்மை இருக்க முடியும்? (மணியடிக்கப்பெற்றது)

இரண்டு நிமிடங்களில் பேசி முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் நேரத்தின் தன்மை கருதி சொல்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அம்மா, என்னுடைய தொகுதி பின்தங்கிய தொகுதி. அங்கே மத்திய மாநில விவசாயப் பண்ணை இருந்தது மூடப்பட்டிருக்கிறது. 30 வருடங்களுக்கு அதை மத்திய சர்க்காருக்கு lease-க்கு விட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மிகப் பின்தங்கிய பகுதி. அதை மீண்டும் தமிழக அரசு எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்ப் பிரச்சினை என்பது அந்தத் தொகுதியிலே மோசமாக இருக்கிறது. 6 ஆண்டுகள்கூட குடிநீரே இல்லாத கிராமங்கள் இப்போதும் அந்தப் பகுதியிலே உள்ளன. குடிநீர்ப் பஞ்சம் இன்றைக்கு அங்கே தலைவிரித்து ஆடுகிறது. கூட்டுக் குடிநீர்த் திட்டம் அருகில் இருக்கின்ற திருவண்ணாமலை போன்ற பகுதிகளிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. பக்கத்திலே சாத்தனூர் அணை இருக்கிறது. அந்த அணையிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செங்கம் தொகுதிக்குக் கொடுத்து அந்த மக்களுக்குக் குடிநீர் வழங்க உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியிலே கல்லூரி என்றால் திருவண்ணாமலைக்கு வர வேண்டும். அல்லது வேலூருக்குப் போக வேண்டும். போளூர், கலசப்பாக்கம், செங்கம் போன்ற பகுதிகளில் இருக்கின்ற மாணவர்கள் கல்லூரிக்குச் செல்வதற்கு சிரமமாக இருக்கிறது. ஆகவே, என்னுடைய தொகுதியிலே ஒரு அரசுக் கல்லூரியை நீங்கள் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





பூக்கள் அந்தப் பகுதியிலே அதிகமாக விளைகின்றன. அந்தப் பகுதியிலே Scent தயாரிக்கின்ற தொழிற்சாலையைக் கொண்டுவந்தால் பெண்கள் முன்னேற்றத்திற்கு சரியாக இருக்கும்.

பாய் நன்கு முடையக்கூடியவர்கள் இருக்கிறார்கள். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியைத் தேடித் தருகின்ற வாய்ப்பான பகுதி. ஆகவே இந்தத் தொழிலை இந்த இடங்களிலே தொடங்குவதற்கு ஒரு தொழிற்சாலை அமைத்து அந்தப் பகுதி மக்களுடைய வளர்ச்சிக்கு உங்களுடைய ஆட்சி, அம்மாவினுடைய ஆட்சி உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பினை நல்கிய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1—45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நாளைக்குப் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்கள்.

* **திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு வருவதற்காக 5 முறை ஒரே தொகுதியில் போட்டியிடுகிற வாய்ப்பினைத் தந்த நான் சார்ந்திருக்கிற பெருமைபடத்தக்க திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவர் கலைஞர் அவர்களுக்கும் மூன்றாவது முறையாக இந்த மன்றத்திலே என்னுடைய கருத்துகளை எடுத்துரைப்பதற்கு வாக்களித்திருக்கிற என்னுடைய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

"யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்பது போல ஒரு அரசு கொண்டுவரவிருக்கிற சிறந்த திட்டங்களைக் கோடிட்டுக் காட்டுவதாகவும், சிறந்த இலட்சியங்களை கோடிட்டுக் காட்டுவதாகவும் அமையப் பெறுவதுதான் ஆளுநர் உரை. ஆளுநர் உரை என்பது ஆளுகின்ற கட்சி, அரசு தயாரித்து தருகிற உரையே தவிர, ஆளுநர் தயாரிக்கிற உரையல்ல. ஆளுநர் மூலமாக அரசு கொண்டுவர

இருக்கின்ற திட்டங்களை விளக்குவதுதான் ஆளுநர் உரை. அந்த வகையில் இந்த ஆளுநர் உரையில் சில திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களெல்லாம் எதிர்காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில் ஏற்கெனவே இந்த அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்த திட்டங்களை, செயல்வடிவம் தருவதற்காக முயற்சித்துக் கொண்டிருந்த திட்டங்களையெல்லாம் சொல்லியிருப்பதற்காக உள்ளபடியே நான் பாராட்டுகிறேன்.

கிருஷ்ணா நதி நீர்த் திட்டமாக இருந்தாலும் அல்லது முல்லை-பெரியார் அணை உயரத்தை 152 அடியாக உயர்த்துவதாக இருந்தாலும், காவிரி நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக நடுவண் அரசு சொல்லியிருக்கிற அந்தத் தீர்ப்பை அமல்படுத்துவதாக இருந்தாலும் அல்லது பயன்படுத்தப்படாமல் இருக்கிற நிலத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்காக தரிசு நில மேம்பாட்டுத் திட்டமாக இருந்தாலும், புன்செய் பயிர்கள் மேம்பாடு திட்டமாக இருந்தாலும், இந்த அரசு ஏற்கெனவே முன்னாள் அரசு அதற்காகச் செய்திருந்த காரியங்களைத் தொடர்ந்து நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருக்கிற அறிவிப்பு கண்டு உள்ளபடியே நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள்கூட இங்கே பேசும்போது சொன்னார்கள். புதிய வீராணம் திட்டத்தினைக் கொண்டு வரவிருக்கிறோம், இந்தத் திட்டத்தை கடந்த கால ஆட்சி, நாங்கள் கொண்டு வந்த திட்டம் என்கிற காரணத்தினாலே மறைத்துவிட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். புதிய வீராணம் திட்டம் வந்தால் மகிழ்ச்சி யடைகிற முதல் ஆளாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கடைசி தொண்டன் இருப்பான். ஏனென்றால் அந்தத் திட்டத்தினைக் கொண்டு வந்ததே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாடு அறியும், நாட்டு மக்கள் அறிவார்கள். அதை யார் தடுத்து விட்டார்கள், யார் மறைத்து விட்டார்கள் என்பதை இந்த நாடு அறியும். எனவே, மீண்டும் வீராணம் திட்டம் வருவதிலே எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. அது வந்தால் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான்.

இன்றைக்கு இருக்கின்ற நிலையில், குடிநீர்ப் பிரச்சினையை எந்த அளவுக்குச் சமாளிக்கப் போகிறோம் என்பது குறித்து ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். 100 பேர் இருக்கிற கிராமங்களில், 100 பேருக்கு



மேல் இருக்கிற கிராமங்களில் குடிநீர் ஆதாரம் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக காலவரையறைக்குட்பட்ட திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அது பாராட்டுக்குரியது. ஆனால், இன்றைக்கு இருக்கிற நிலை, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக, சென்னை மாநகரத்திலே மட்டுமல்ல, தாம்பரம் தொகுதியிலே இருக்கிற பல்வேறு பகுதிகளில் - பம்மல், அனகாபுத்தூர், சிட்லபாக்கம் மற்றும் துரைப்பாக்கம் போன்ற பகுதிகளில் கடுமையான கோடை வெயிலின் காரணமாக தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டால், எங்களுக்கு லாரிகளிலே தண்ணீர் வழங்குவதற்கு அதிகாரம் தரப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதைக்கூட நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் அவர்கள், அதிகாரிகளை சட்டமன்ற உறுப்பினர் சந்தித்ததிலிருந்து அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை என்றுகூட அடுத்த முறை பேசும்போது சொல்லிவிடுவார்.

*பிற்பகல் 1—50*

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும், விட்டு விடுங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும்.

(திரு. போளூர் வரதன் நின்றுகொண்டேயிருந்தார்)

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** தொகுதியிலே இருக்கிற பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு போகிறபோது, என்னுடைய தொகுதியிலேயிருக்கிற பம்மல், அனகாபுத்தூர், சிட்லப்பாக்கம், அதைப்போல துரைப்பாக்கம் ஆகிய பகுதிகளில் இன்றைக்குக் குடிநீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இங்கே அமர்ந்திருக்கிற செய்தித் துறையைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்களே, பத்திரிகையாளர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், நீங்கள் போளூர் வரதன் அவர்களை வம்புக்கிழுத்த காரணத்தால் அவர் நிற்கிறார்.

**திரு. போளூர் வரதன்:** உண்மையைச் சொல்லட்டும். அதிகாரிகளைச் சந்திப்பதை நான் குறையாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) நான் சட்டமன்ற உறுப்பினராக ஆகி ஒரு வாரம் ஆகிவிட்டது. என்னுடைய தொகுதியினுடைய B.D.O.-வை பல முறை கூப்பிட்டுக்கூட வரவில்லை. ஆனால் அந்தத் தொகுதி B.D.O.-வினுடைய ஜீப் நேற்று

[திரு. போளூர் வரதன்] [2001 மே 28

திருவண்ணாமலையிலே பிராந்திக் கடைக்கு முன்னால் நின்று கொண்டிருக்கிறது என்றால் அதற்கு என்ன அர்த்தம்? அது தவறு என்று சொல்கிறாரா அவர்? நேற்று திருவண்ணாமலையிலே மாலை 3 மணிக்கு பிராந்திக் கடைக்கு முன்னாலே புதுப்பாளையம் ஒன்றியத்தினுடைய B.D.O.-வினுடைய ஜீப்பிலே போய் பிராந்தி வாங்குகிறார்கள் என்றால் (குறுக்கீடு) அந்த அதிகாரியை நாம் என்ன சொல்வது? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய, அதிகாரிகளுடைய ஜீப் பிராந்திக் கடைக்குப் போய் நிற்கிறது என்றால் அதைக் கொண்டு போய் மேலிடத்திலே தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்கட்டும். அதற்கு நான் தலையிட முடியாது. எனக்குச் சம்பந்தம் இல்லாத விஷயம். நான் பேசுகிற விஷயம், என்னுடைய தொகுதிக்குட்பட்ட இடத்தில் - (குறுக்கீடு) அங்கே இருக்கிற B.D.O. தவறு செய்தால் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் போய் அதற்காக நடவடிக்கை எடுத்துக்கொள்ளட்டும், அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை.

நான் சொல்வது என்னுடைய தொகுதியிலே ஏற்பட்டிருக்கிற பிரச்சினை. இங்கே அமர்ந்திருக்கிறார்களே பத்திரிகையாளர்கள், அவர்களுடைய குடியிருப்பில் கடந்த ஒரு வார காலமாகத் தண்ணீர் கிடையாது. அது கொட்டிவாக்கம் பகுதியிலே அடங்கிய ஒரு குடியிருப்பு. ஒரு வார காலமாக அங்கே தண்ணீர் கிடையாது. அங்கே இருக்கிற அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவரை அல்லது ஒன்றியத்தினுடைய அதிகாரிகளை அழைத்துக் கேட்கிறபோது எங்களுக்கு லாரியிலே தண்ணீர் வழங்க அனுமதி தரப்படவில்லை. எனவே எங்களால் வழங்க முடியாது என்று சொல்கிறார்கள். மாவட்ட ஆட்சியரைக் கேட்கிறபோது அவர், நான் விசாரித்துச் சொல்கிறேன் என்று சொல்கிறார். இந்த நிலைமைக்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதனைத் தெரியப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உள்ளாட்சிகளுக்கு 2 அடுக்கு முறையினைக் கொண்டு வருவதற்கும், அதைப்போலவே ஒன்றியத்தினுடைய தலைவர்கள் நேர்முகமாகத் தேர்ந்தெடுப்பதற்கான முறைகள் அமல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது பாராட்டுக்குரிய விஷயம். அவர்களை நான் பாராட்டுகிறேன்.



2001 மே 28] [திரு. மீ.அ. வைதியலிங்கம்]

அடுத்து, கூட்டுறவுக் கடனை, வட்டியையும் கூட்டு வட்டியையும் தள்ளிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அமைச்சரவை முடிவெடுக்கும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது பாராட்டுக்குரியது. ஆனால் ஒன்று எனக்குத் தெரிய வேண்டும். இந்த அவையிலே பேசியவர்கள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் உள்ளிட்டு, முன்னாள் எதிர்க்கட்சியிலே தலைவராக இருந்த நம்முடைய மரியாதைக்குரிய சோ.பா. உள்ளிட்ட அனைவரும் சாலையிலே போய் மறியல் செய்தார்கள். எதற்கு என்று கேட்டால் விவசாயிகளுடைய கூட்டு வட்டியைத் தள்ளுபடி செய்து விடுகிறோம், வட்டியைத் தள்ளுபடி செய்வதற்குப் பதிலாக அவர்களுக்கு ஒரு ஊக்கத் தொகையாக அளிக்கிறோம். அவர்கள் குறித்த காலத்திலே கடனைச் செலுத்திவிட்டால் 7 சதவீதம் தள்ளுபடி செய்வதன் மூலம் கூட்டு வட்டி சரி செய்யப்படும் என்று சொன்னபோது, இல்லை, இல்லை அசலையே தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சாலை மறியல் செய்தார்களே, அவர்களுடைய நிலை இப்போது என்ன என்பதனை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலையே தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்கவே இல்லை. அதாவது வட்டியையும், தண்ட வட்டியையும்தான் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டோமே தவிர, அசலைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்கவே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) C.M.-கிட்டே நாங்கள் petition கொடுத்தோம், எல்லா கட்சிகளும் சேர்ந்து, வட்டி, அபராத வட்டியை மட்டும் நீக்க வேண்டுமென்று கேட்டோமே தவிர, அசலைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்கவே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய சோ.பா. அவர்கள் சொல்லியிருப்பதைப்போல இருந்தால் நான் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அவைக் குறிப்பிலே இருக்கிறது. அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அசலை எங்கேயாவது தள்ள முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அவர்களோடு அன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் இரண்டு பேரும் கூடச் சேர்ந்து அந்த மறியலிலே ஈடுபட்டார்கள். இல்லை என்றால் நான் பொறுப்பேற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

[2001 மே 28

*பிற்பகல் 1—55*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே விவசாய கூட்டுறவுக் கடன் தள்ளுபடி சம்பந்தமாகச் சாலை மறியல் செய்ததாகவும், போராட்டம் நடத்தியதாகவும், இன்றைக்கு அவர்களெல்லாம் வாயை மூடி மௌனமாக இந்த அவையிலே உட்கார்ந்திருக்கிறார்களே, என்ன சொல்கிறார்கள் என்றெல்லாம் கேட்டார்கள். 5 ஆண்டுக் காலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி புரிந்தது. இந்த அவையிலே இருக்கிற அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சோ.பா. வாக இருந்தாலும், நானாக இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே பல்வேறு நிலைமைகளை, விவசாயிகளுடைய நிலைமைகளையெல்லாம் எடுத்துச் சொன்னோம். வட்டியையாவது தள்ளுபடி செய்யுங்கள் என்று சொன்னோம். ஒவ்வொரு தடவையும் நாடாளுமன்ற விவாதத்தையெல்லாம் எடுத்துக்கூட கோடிட்டுக் காண்பித்தோம். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொன்னதெல்லாம் இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு நபார்டு வங்கியிலேயே கூட்டுறவுச் சங்கக் கடனைத் தள்ளுபடி செய்யோம் என்று அவர் எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். அவரிடத்தில் போய்க் கேளுங்கள். ஆக என்னிடத்தில் கேட்க வேண்டாம் என்றுதான் பதில் அளித்தாரே தவிர வேறு ஒன்றுமில்லை. அந்த விவசாயிகள் கஷ்டத்தைப்பற்றி கண்ணீர் வடிக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்துக் கேட்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்கு மனசாட்சி இருந்திருந்தால் நீங்களாவது செய்திருக்கலாம் அல்லவா! உங்களிடத்தில் எவ்வளவு மன்றாடி இருப்போம்? ஒவ்வொரு அவையிலும் அவைக் குறிப்பை எடுத்துப் படித்துப் பாருங்கள். விவசாயிகள்மீது ஏதாவது அக்கறை உண்டா? வட்டியினுடைய வட்டி, வட்டி மீது போடப்படுகின்ற அபராத வட்டி 7 சதவீதம் தள்ளுபடி, அதுவும் முழுமையாகக் கட்டினால்தான். எந்த ஒரு விவசாயியாவது கட்ட முடியுமா? அதற்கு மேலாக உங்களுடைய தேர்தல் அறிக்கை இருக்கிறதே, அது எவ்வளவு மோசமான அறிக்கை? தமிழகத்திலே ஒரு விவசாயி பெற்று இருக்கிற கடனை, அவன் இறந்துபோன பின்னால்தான் தள்ளுபடி செய்யப்படும் என்று உங்கள் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறதே! தமிழ்நாட்டு விவசாயிகள் எல்லாம் சாக வேண்டும் என்று நினைக்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட எண்ணம் உங்களுக்கு உருவானால், நீங்கள் தமிழ்நாட்டு விவசாயிகளைப்பற்றிப் பேசலாமா? நான் விவாதத்திற்காகச்



2001 மே 28] [திரு. ஜி. பழனிசாமி]

சொல்லவில்லை. உங்கள் தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. நேரடியாக நாம் கேட்டவர்கள். பேச்சிலே வருகிறது. ஆக நான் விவாதத்திற்குப் போகவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நண்பர்கள், விவசாயிகளைப்பற்றி நீங்கள் கண்ணீர் வடிக்க வேண்டாம்.

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டில் நாம் திரும்ப கடனைக் கேட்பதில்லை அல்லது எதையும் தள்ளுபடி செய்யப்போவதில்லை என்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அப்போது கையெழுத்திட்டார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பது உண்மை. முன்னாள் முதலமைச்சர் அவர்கள், என்னைக் கேட்கக்கூடாது; அவர்களையே கேளுங்கள், நான் பதில் சொல்லத் தயாரில்லை என்று சொன்னதாக இப்போது மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொல்கிறார்கள். குறிப்பேட்டில் இருந்தால் அது தவறுதான், அதை நிரூபிப்பாரா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தின் அருமையைக் கருதி, குறுக்கிட வேண்டாமென்று எவ்வளவோ என்னை நானே கட்டுப்படுத்திக் கொண்டாலும் (மேசையைத் தட்டும் ஒலி) குறுக்கிட வேண்டிய அவசியத்தை திரும்பத் திரும்ப மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்படுத்திவிடுகிறார்கள். இப்போது பேசிக்கொண்டிருந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதிய வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் யார், அதைத் தடை செய்தது யார் என்றெல்லாம் பேசினார். அதற்கு இப்போது பதில் சொல்லத் தொடங்கினால் நீண்ட நேரம் ஆகிவிடும் என்பதால் என்னுடைய பதில் உரையில் அதற்குப் பதில் சொல்கிறேன். குறுக்கிடுவதற்குக் காரணம், இப்போது அமைதியாக இருந்துவிட்டால் அதை நான் ஏற்றுக்கொண்டதாக பத்திரிகைகளில் எழுதிவிடுவார்கள். அதனால்தான் அதை நான் குறிப்பிடுகிறேன்.

இப்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நபார்டுக்கு ஏதோ நான் எழுதிக் கொடுத்துவிட்டதாக இங்கே குறிப்பிட்டார். அது தவறான தகவல். என்னுடைய பதில் உரையை இங்கே ஆற்றும்போது அதற்கான முழு விளக்கத்தையும் நான் அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம் சிக்கலில் மாட்டாமல் கொஞ்சம் உரைக்கு வாருங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எப்போதும் சிக்கலில் மாட்டிக்கொள்ள மாட்டேன். சிலபேர் சிக்கலை உருவாக்குகிறார்கள். அதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது. நான் சிக்கலில் மாட்டிக்கொள்ள மாட்டேன்.

சத்துணவு மையங்கள் அத்தனையும் படிப்படியாக சீர்கேடு அடைந்துவிட்டன. அவற்றையெல்லாம் புதுப்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். ஆளுநர் உரையிலும்கூட சுட்டிக் காட்டப்பட்டு இருக்கிறது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலே ஒரு சத்துணவுக்கூடம் தவறாது, புதிதாக கட்டடம் கட்டிக் கொடுத்தேன். அங்கே சத்தான உணவு அளிப்பதற்காக ஒரு மாதத்திற்கு இரண்டு முறை முட்டை கொடுத்தேன். சிறந்த முறையிலே சத்துணவுக்கூடங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வதிலே பெருமை அடைகிறேன்.

அதைப் போலவே உழவர் சந்தையைப்பற்றிச் சொல்கின்றபோது, செயல்படாத உழவர் சந்தைகள் மூடப்பட வேண்டும் என்பதிலே இரு வேறுபட்ட கருத்திற்கு இடமில்லை. ஆனால் அதற்கு ஆதாரம் என்ன என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஒரு பத்திரிகையைச் சுட்டிக்காட்டினார்கள். அந்த நேரம் எந்த நேரம் என்பதைச் சொல்ல வேண்டும். காலையில் 5 மணிக்கு வந்தால் 8 மணி வரையில் இருக்கும். அதற்கு மேல் இருக்காது. 10 மணிக்கு மேல் வந்தால் உழவர் சந்தை வெறிச்சோடித்தான் கிடக்கும். ஏதோ விற்காத ஒன்றிரண்டு பேர்தான் உட்கார்ந்துகொண்டிருப்பார்கள். மற்ற கடைகள் எல்லாம் மூடித்தான் இருக்கும்.

அடுத்த வரியிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம், அங்கே எல்லாம் மாடு மேய்கிறது என்று சொன்னார்கள். உழவர் சந்தை எல்லாம், கான்கிரீட் போட்டிருக்கிற இடத்தில் மாடு மேய முடியாது. ஏற்கெனவே 5 மணியிலிருந்து 8 மணி வரைக்கும் காய்கறி விற்று சிதறியதைத்தான் மேய்வதற்கு மாடு 9 மணிக்கு, 10 மணிக்கு வரும். அந்த நேரத்தில் எடுத்திருக்கிற ஒரு புகைப்படத்தை வைத்துக்கொண்டு அதை ஆதாரமாக வைத்து, அந்தக் காரியத்தை ஆற்றிவிடக்கூடாது என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் 2 நிமிட நேரம்தான் இருக்கிறது. இடையில் குறுக்கிட்டால் நீங்கள் அவகாசம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் கூடச் சொன்னார்கள், சீக்கிரமாக நீங்கள் நடவடிக்கை எடுங்கள். தமிழ்நாட்டு ஜெயிலில் எல்லோரையும் நீங்கள் போட்டால் இடம் போதாது. தமிழ்நாட்டு ஜெயிலிலிருந்து வெளிநாட்டு ஜெயிலுக்குக் கொண்டுபோக வேண்டும் என்றெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. ஏனென்றால் அவர் எப்போதும் அப்படித்தான் பேசுவார். ஏற்கெனவே இந்த அவையிலே அப்படியெல்லாம் பேசினார். ஏன் நீங்கள் இன்னும் முன்னாள் முதல்வர், முன்னாள் அமைச்சர்மீது நடவடிக்கை எடுக்கவில்லை; உங்களுக்கும் அவருக்கும் ஏதாவது உடன்பாடா என்று சந்தேகிக்கிறேன் என்று இந்த அவையிலே பேசிய பேச்சு நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கிறது. ஆகையினால் அவை எல்லாம் ஒன்றும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் புதிய பேச்சுகள் இல்லை. அதிலும், மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் பேசுவது ஒன்றும் புதிய பேச்சு அல்ல. நாங்களும் சொல்கிறோம், குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் உண்மையாகவே குற்றவாளியாக இருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது.

*பிற்பகல் 2—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. வைதியலிங்கம், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** அதேநேரத்தில் உண்மைக்கு மாறாக நம்முடைய உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக, பொய் வழக்கு புனையப்படுமேயானால், அதையும் ஜனநாயக நாட்டில் மக்கள் பார்த்துக்கொண்டுதானிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, When allegations have come up, I have to rebut it. மாண்புமிகு உறுப்பினர் திரு. வைதியலிங்கம் அவர்கள் பேசுகிறபோது, பொய் வழக்கு, பொய் வழக்கு என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் சில உதாரணங்களை இங்கே ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். வேலூர் தொகுதியில் கற்பகம் சூப்பர் மார்க்கெட்டில் 11 கோடி ரூபாய் ஊழல்.

[திரு. சி. ஞானசேகரன்] [2001 மே 28

அன்றைய அமைச்சரே அதை ஒத்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் அன்றைய தி.மு.க. தலைவரை மட்டும் பதவி நீக்கம் செய்தீர்களே தவிர, ஒரு Criminal case-கூட இதுவரை வரவில்லை. Why he has not been arrested so far? Therefore, what I want is, immediate action should be taken and he should be booked immediately. அதை விட்டுவிட்டு இவர் ஆதாரம் இல்லாமல் பேசியதாகச் சொல்லிக்கொண்டே போவது தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அவர் ஆதாரம் இருந்தால் உள்ளே தள்ளுங்கள் என்கிறார். (சிரிப்பு)

**திரு. கோ.சி.மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நகராட்சி மன்றத்தைக் கலைப்பது வேறு. Criminal நடவடிக்கை எடுப்பது வேறு. Criminal நடவடிக்கைக்கு உகந்ததாக இருந்தால் நடவடிக்கை எடுப்பதில் ஆட்சேபணை இல்லை. நாளைக்கே உங்கள் ஆட்சி கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கலாம். அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. கலைப்பதற்குத் தகுதி இருந்தது. கலைத்திருக்கிறோம், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், பேசி முடியுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, —

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது நகராட்சி மன்றத்தைக் கலைப்பதுபற்றி. இப்போது நான் இங்கே பேசுவது, கற்பகம் சூப்பர் மார்க்கெட் கூட்டுறவுத் துறை ஊழலைப்பற்றி. நகராட்சி மன்றத்தைக் கலைப்பது அடுத்தது. அதை நான் mean பண்ணவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டுக்கும் பொருந்தும் என்கிறார். (சிரிப்பு)

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஏன் ஆத்திரப்படுகிறார் என்று தெரியவில்லை. நான் சாதாரணமாகத்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். அவர் சொன்ன வார்த்தையைச் சொல்லியிருக்கிறேன். அவர் இந்த அவையில் பேசிய வார்த்தையைச் சொன்னேன். அவர் எதற்கு உணர்ச்சி வசப்படுகிறார் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பலவீனமாக இருந்தால்தான் உணர்ச்சிவசப்படுவார்.



2001 மே 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உணர்ச்சிவசப்படவில்லை. சுட்டிக் காட்டுகிறார்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** நான் பலவீனமாக இல்லாமல் பேசிக்கொண்டிருப்பதால் சொல்கிறேன். அவர் சுட்டிக்காட்டியதைப் போல, இந்த அவையில் பேசிய பேச்சைத்தான் சொன்னேன். அதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் எந்த வழக்குக்கும் பயந்தது இல்லை. அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறது. அது வேறு விஷயம். திராவிட முன்னேற்றக் கழகம் எந்த இயக்கத்திற்கும் சளைத்த இயக்கம் அல்ல. அதைச் சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இன்னும்கூட ஒன்றைச் சொல்கிறேன். ஊளையிடுவதன் மூலமாக உண்மைகள் மறைந்துவிடாது என்பதற்காகச் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஓர் அமைச்சரையே தவறு என்று தெரிந்து கிரிமினல் வழக்கு போட்ட ஆட்சி, அந்த ஆட்சி என்பதையும், எந்தவொரு ஆட்சியும் அவர்களுடைய ஆட்சியில் இருக்கிற கட்சித் தொண்டர்கள் தவறு செய்தால் தண்டித்ததில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுந்த கிரிமினல் குற்றச்சாட்டைச் சந்திக்க தி.மு.க.வில் யாருமே தயங்கியது இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார். அவருடைய தலைவர், முன்னாள் முதலமைச்சர்மீது சர்க்காரியா கமிஷன் போடப்பட்டு, அவர் குற்றவாளி என்று சந்தேகம் வர, நீதிபதி சர்க்காரியா அவர்கள் கூறினாரே, அப்போது C.B.I. தனி நீதிமன்றத்தை இதே சென்னையில் அமைத்ததே, அந்த வழக்கைச் சந்திக்காமல், Criminal குற்றச்சாட்டைச் சந்திக்காமல், அவர் ஏன் போய் அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களிடம் சரணாகதி அடைந்தார் என்று விளக்கம் கூற முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த சர்க்காரியா கமிஷனில் ஏதாவது ஆதாரம் இருக்குமானால் இப்போதுகூட வழக்கு தொடரலாம். காலம் கடந்துவிடவில்லை. மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் ... (குறுக்கீடுகள்)

[2001 மே 28

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கு தொடர வேண்டியது C.B.I., அவர்கள் அங்கம் வகிக்கிற மத்திய அரசு. செய்யச் சொல்லுங்கள். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷன் ஒரு தீர்ப்பு தந்தது. அதன்மீது தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டியது மாநில அரசு. (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அவர் Advocate General -இடம் opinion-ஐக் கேட்டார். இரண்டு முறை கேட்டார். இரண்டு முறையும் வழக்கு தொடருவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று குறிப்புக் கோப்பு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரும், சட்ட அமைச்சரும் எடுத்துப் பார்க்கலாம்.

*பிற்பகல் 2—05*

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி மீது அப்போது ஊழல் குற்றச்சாட்டு கூறப்பட்டபோது, அன்றைய மத்திய அரசு ஒரு விசாரணைக் கமிஷன் போட்டது. அந்த விசாரணை கமிஷனுக்கு உதவுவதற்காக C.B.I. விசாரணை நடத்தியது. இந்த ஊழல் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் உண்மை என்று C.B.I கண்டறிந்து கொடுத்த தகவல்களின் அடிப்படையில்தான் சர்க்காரியா கமிஷன் அறிக்கை வெளியிடப்பட்டது. அப்போது C.B.I ஒரு தனி நீதிமன்றத்தை சென்னையிலேயே அமைத்தது. வழக்கு தொடரப்பட்டபோது, அந்த Criminal வழக்கை, அன்றைய முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் சந்திக்கவில்லை. அவர், தான் Public Servant-டே அல்ல என்று சொல்லி, அந்தத் தனி நீதிமன்றத்திலேயே தன்னை வழக்கிலிருந்து discharge செய்ய வேண்டுமென்று மனு போட்டார். அது தள்ளுபடி ஆனது.

அதன்பிறகு, வழக்கைச் சந்தித்தாரா என்றால் இல்லை. அதன் பிறகு உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார். உயர் நீதிமன்றமும் அவருடைய வழக்கைத் தள்ளுபடி செய்தது. அதன்பிறகு அவர் உயர் நீதிமன்றத்தின் Division Bench-ற்குச் சென்றார். அந்த உயர் நீதிமன்றத்தின் Division Bench-ம் திரு. கருணாநிதி அவர்களின் மனுவைத் தள்ளுபடி செய்தது. அதோடு நீதிக்குத் தலை வணங்கினாரா, வழக்கைச் சந்தித்தாரா என்றால், இல்லை.



2001 மே 28] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

அதன்பிறகு அவர் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார். உச்ச நீதிமன்றமும் திரு. கருணாநிதியின் மனுவைத் தள்ளுபடி செய்தது. அதன்பிறகு உச்ச நீதிமன்றத்தின் Constitution Bench வரை திரு. கருணாநிதி அவர்களின் மேல்முறையீடு சென்று, அவர் வழக்கைச் சந்தித்தே ஆகவேண்டும் என்று தீர்ப்பு கூறப்பட்டு, அவருடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பிறகு, வழக்கைச் சந்திப்பதைத் தவிர, தண்டனையைப் பெறுவதைத் தவிர, தனக்கு வேறு வழியில்லை என்று தெரிந்த பிறகு, அன்னை இந்திரா காந்தி அவர்களிடம் சென்று அவர் சரணடைந்தார். அரசியல் காரணங்களுக்காக அன்னை இந்திரா காந்தி அவர்கள் C.B.I. போட்ட வழக்கை வாபஸ் பெறும்படி உத்தரவிட்டார். இப்பொழுதும் சொல்கிறேன்; நான் பலமுறை இதைப்பற்றித் தீர விசாரித்துவிட்டேன். நடவடிக்கை மீண்டும் எடுக்க வேண்டுமானால், மத்திய அரசுதான் எடுக்க முடியும். இது C.B.I. போட்ட வழக்கு என்பதால் மாநில அரசுக்கு அந்த அதிகாரம் கிடையாது. அது புரட்சித் தலைவர் காலத்திலும் சரி, என்னுடைய இந்தக் காலத்திலும் சரி, இந்த வழக்கில், சர்க்காரியா கமிஷன் வழக்கில் மத்திய அரசாங்கம்தான் நடவடிக்கை எடுக்க முடியும். மத்திய அரசாங்கம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநில அரசு விரும்பினாலும் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கிடையாது. இன்று, திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய ஆட்சியில் அங்கம் வகிக்கிறது. அவர்கள் நீதிமான்கள் என்றால் சட்டத்தைச் சந்திக்கப் பயப்படாதவர்கள், அஞ்சாதவர்கள் என்றால், எந்த Criminal குற்றச்சாட்டானாலும் அதைச் சந்திக்கத் தயார் என்று இப்போது மாண்புமிகு முன்னாள் அமைச்சர் இங்கே கூறினாரே, அது உண்மையானால், இப்போது அவர்கள் மத்திய அரசிடம் சொல்லி, C.B.I.—இடம் மீண்டும் அந்த வழக்கைத் திறக்கச் சொல்லி, தனி நீதிமன்றத்தை அமைக்கச் சொல்லி, திரு. கருணாநிதியைக் கொண்டுபோய், அந்த நீதிமன்றத்திற்கு முன் நிறுத்தட்டும் பார்க்கலாம். செய்வார்களா?

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நான் ஒரு உறுதியை நிச்சயமாகச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமருக்கு அப்படி ஒரு கடிதம் எழுதி, அவர்கள் நடவடிக்கை எடுத்தால், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற யாரும் நிச்சயமாக அதில் தலையிட மாட்டோம் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 மே 28

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998 ஆம் ஆண்டில் எங்கள் கட்சி இப்போது இருக்கிற அதே B.J.P. தலைமையிலான கூட்டணி ஆட்சியில் அங்கம் வகித்தது. அப்போது எங்கள் கட்சி M.P.-க்கள், இதுசம்பந்தமாக ஒரு மனுவைப் பிரதமரிடம் கொடுத்தார்கள். C.B.I. Director-இடமும் கொடுத்தார்கள். ஆனால் அரசியல் காரணங்களுக்காக, எங்களைக் கூட்டணியிலேயிருந்து கழற்றிவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்துக்கொள்ள வேண்டுமென்று அப்போதே B.J.P.-க்குத் திட்டம் இருந்ததால், அவர்கள் அந்த மனுவை கிடப்பிலே போட்டுவிட்டார்கள். இன்றுவரை அதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் நடவடிக்கை எடுக்க விரும்பினால், எங்கள் மனு அங்கேயே இருக்கிறது. அதற்கு இன்னும் உயிர் இருக்கிறது, யாரும் உங்களைத் தடுக்கவில்லை. தாராளமாக நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், பேசி முடியுங்கள்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தலைவராக இருந்தாலும், பல ஆண்டுகளுக்கு முன்பு, முடிந்த வழக்கை நீங்களே போய் இப்போது எடுங்கள் என்று சொல்லமாட்டார்கள். இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரும்பினால், அதை வற்புறுத்தி, அந்த வழக்கைக் கொண்டுவந்தால், உள்ளபடியே அதில் குற்றம் செய்ததாக அந்தத் தீர்ப்பிலே இருக்குமானால் அதை ஏற்றுக்கொள்வதற்கு, திராவிட முன்னேற்றக் கழகம் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத்தான் நான் முதலிலேயும் சுட்டிக்காட்டினேன்; இப்போதும் சுட்டிக்காட்டுகிறேன். எனவே இப்போது வந்திருக்கிற இந்த ஆளுநர் உரை என்பது...

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் வைதியலிங்கம் அவர்கள் பேசுகிறபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரும், தமிழகத்தினுடைய முதல்வருமாகிய புரட்சித் தலைவி அவர்கள், பாரதப் பிரதமரிடம் சென்று தன் கோரிக்கையை வைத்து, அதன் மூலமாக வழக்கைக் கொண்டுவந்தால், சந்திக்கத் தயார் என்று சொல்கின்றார். ஆனால் அதற்கு வழிவிட வேண்டுமென்றால், அவர்கள் முதலில் அந்தக் கூட்டணியிலேயிருந்து



2001 மே 28] [டாக்டர் மு. தம்பிதுரை]

வெளியே வர வேண்டும். வெளியே வந்தால்தான் அதை நேர்மையாக நடத்த முடியும். அங்கே இரண்டு, மூன்று அமைச்சர்களை வைத்துக்கொண்டு, அந்த ஆட்சி இருக்குமா, இருக்காதா என்ற கேள்வி இருக்கும் நேரத்திலே, நாங்கள் கோரிக்கை வைத்தால்கூட அதை ஏற்றுக்கொள்வதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். ஏற்கெனவே என்ன ஆனது என்று உங்களுக்குத் தெரியும். நானும் மத்திய அமைச்சராக இருந்தவன்தான். பல கேபினெட்டுகளிலும் கலந்துகொண்டு இருக்கிறேன். அங்கே எப்படி முடிவுகள் எடுக்கப்படும் என்பது எங்களுக்குத் தெரியும். ஆகவே முதலில் அந்தக் கட்சியானது, தி.மு.க. கட்சியானது, அந்த அங்கத்திலிருந்து வெளியே வரட்டும். வெளிவரும்போது, அதுவும் நியாயமாக வெளிவரும். எனவே அதை ஏற்றுக்கொள்ளத் தயாரா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2—10*

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் தம்பிதுரை அவர்கள் கூறியதுபோல் நாங்கள் சொன்னாலும் மத்திய அரசில் நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை. விரைவிலேயே, நான் டெல்லிக்குச் சென்று, பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களைச் சந்திக்க உள்ளேன். அப்போது, அவர்கள் விரும்பினால் இந்தக் கோரிக்கையை நான் வலியுறுத்துகிறேன். அதற்கு அவர்கள் ஒத்துழைத்து வழிவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராளமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை வற்புறுத்தி அந்த வழக்கைக் கொண்டு வர வேண்டும். அப்போது மக்களுக்கு உண்மை தெரியும். கொண்டுவருவதிலே திரா்விட முன்னேற்றக் கழகம் குறுக்கிடாது என்பதிலே எங்களுடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் ஏற்கெனவே அதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். நாங்கள் அதிலே குறுக்கிடமாட்டோம் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த ஆளுநர் உரையிலே எதிர்கால திட்டங்கள்பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை, ஏழையெளிய மக்களுக்கு

என்னென்ன சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்பதைப் பற்றியெல்லாம் இதிலே ஒன்றும் சுட்டிக்காட்டப்படவில்லை. மாண்புமிகு முதல்வரவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, இது அவசரமாக தயாரிக்கப்பட்டிருந்தால், பிறகு வருகிற நிதிநிலை அறிக்கையிலாவது அப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். இந்த ஆளுநர் உரையிலே ஒன்றுமேயில்லை என்று சொல்லி, வாய்ப்பிற்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(29-5-2001)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

— ஏதுமில்லை —



## இணைப்பு

*(67 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**Vanakkam.**

**Honourable Members of the Legislative Assembly,**

It gives me great pleasure to address the first session of the newly constituted Twelfth Legislative Assembly of the State. I congratulate all the newly elected members of this august Assembly and wish them all well in their services for the welfare of the people. I must place on record my sincere compliments to the people of Tamilnadu, who have kept up the healthy democratic traditions of the State by exercising their franchise in a free and fair manner.

2. The recent elections to the State Legislative Assembly have been historic in more than one sense. The decisive mandate given by the people of Tamilnadu to the All India Anna Dravida Munnetra Kazhagam is most spectacular and without a parallel in the history of the State. These elections demonstrated the unshakeable faith of the people of Tamilnadu in the AIADMK and particularly its leader, the Honourable Chief Minister. (Thumping of Desks)

3. The elections to the Legislative Assembly witnessed the use of Electronic Voting Machines (EVMs) for the first time throughout the State. There were many cases of delay in commencement of polling due to malfunctioning of machines. Many developed countries like the United States of America and Japan have earlier experimented using EVMs but have now reverted back to the paper ballot. This Government opposes the use of EVMs and would take up this matter with the Election Commission of India. More than one crore eligible voters were prevented from exercising their franchise despite having valid photo-identity cards due to the deletion of their names from the voter lists. This Government will also take up this issue with the Election Commission and arrange to rectify the anomalies before the ensuing polls to local bodies.

4. This Government is conscious of the fact that the state bureaucracy and police stand demoralized. This Government is committed to restoring the morale and pride of the Indian Administrative Service, the Indian Police Service and other services of the State.

5. This Government recognizes that maintenance of law and order is the *sine qua non* for social and economic development of the State. It shall be the endeavour of this Government to put down all extremist and secessionist elements and all forms of terrorism with a heavy hand. In the last five years, steps taken to nab Veerappan and his gang did not succeed and of late, militant, anti-national and secessionist groups like TNLA and TNRT have forged links with Veerappan. This Government will take all action to capture this notorious criminal with the co-operation of the Government of India and the Government of Karnataka. There has also been proliferation of extra-legal and extra-constitutional forces enjoying the patronage of the powers that were, who have been indulging in unlawful activities and intimidating law abiding citizens. This Government would put down such elements with an iron hand.

6. A great thrust was given to modernisation of the police force between 1991 and 1996. However, stagnation set in thereafter due to inadequate attention to this important subject. This Government will accord high priority to transforming the police force into a highly professional and competent law enforcement agency comparable to the best in the world.

7. This Government shall work for amiable Centre-State and inter-State relations based on goodwill and co-operation. State Governments are closer to the people than the Central Government. When decisions on major economic issues affecting the poor such as raising the issue prices of essential commodities supplied through the Public Distribution System are taken, prior consultation with State Governments will be in order. The Central Government will also be urged to take up large projects that would usher in economic development in the backward districts of Tamilnadu. It is hoped that the Central Government will take up implementation of the Sethu Samudram project early. In order to improve the shipping transport, the Central Government will also be urged to provide funds for the development of the Chennai, Cuddalore, Nagapattinam, Tuticorin and Colachel harbours. This Government will urge the Government of Andhra Pradesh to take immediate steps to complete the "Krishna Water Scheme". A dialogue will also be initiated with the Government of Kerala for raising the height of the Mullai Periyar Dam to 152 feet. This Government will also seek the co-operation of the Government of Karnataka in resolving the long pending Cauvery water dispute.



8. Members of this august Assembly are aware that Tamilnadu has been denied its due share in devolution of funds by successive Finance Commissions. This Government will urge the Government of India that it should not abdicate its vital role in augmenting the financial resources of progressive States.

9. Agriculture being the mainstay of the rural economy, special emphasis will be given towards popularizing modern irrigation systems, scientific water management methods and agricultural practices for increasing production and productivity. A new State Agriculture Policy aimed at achieving optimal land use, reclamation of wastelands for agricultural purposes, improvement of soil health, development of dry land agriculture, horticulture, floriculture, pisciculture, post-harvest management, strengthening of research and extension etc. will be formulated. A comprehensive programme for training farmers and others in rainwater harvesting methods will be implemented to deal with the near-perpetual scarcity of water for irrigation purposes.

10. The concept of Uzhavar Sandhai has proved to be a failure because the intended benefits are neither reaching the farmers nor the consumers. This Government proposes to close down the non-functional Uzhavar Sandhais and take steps to give an impetus to the local fairs functioning in Tamilnadu for ages (Thumping of Desks) through a "Village Fairs Development Scheme" and develop them as agricultural produce marketing centres.

11. Livestock plays an important role in influencing the rural household income. This Government proposes to implement a plan based on recommendations of experts for improving the population mix of our milch cattle. A special plan will be prepared for encouraging farmers to run hybrid sheep farms, aquaculture farms and poultry units as additional avocations for generating supplementary income.

12. This Government will strive to meet the increasing demand for housing in the State. "A house for each family" is an important aim of the Government and to achieve this objective, an "Expeditious House-site Allotment Scheme" will be formulated.

13. Tamilnadu is reeling under severe heat wave conditions and water scarcity is posing insurmountable problems for the people. This Government

will take urgent measures to ensure that long-term and sustained supply of water is made available for irrigation and domestic consumption to the people of the State. This will be done by:

- Implementing a time-bound scheme for providing at least one drinking water source in every habitation with a population of 100 and above.

- Government of Andhra Pradesh will be urged to complete the remaining portion of the Srisailam – Somasila canal of the Krishna water project immediately. Steps will also be taken to construct two new water-storage reservoirs for meeting the requirements of people of the metropolis.

- The new Veeranam Project will be implemented with assistance from international and national financial institutions after reworking the estimates.

- A special project will be prepared for modernizing and improving the water-holding capacity of all lakes, irrigation channels etc. through active participation of users.

- The Central Government will be urged to nationalize all the rivers in the country and take up phased implementation of the "Peninsular River Water Grid Scheme" connecting major rivers in Central and South India.

14. The institutions of local self-government in Tamilnadu have witnessed a steady degeneration in terms of finances and management. This Government proposes to hold elections to all local bodies at the earliest. It shall strive for improving financial resources of the local bodies without any discrimination. This will enable them to develop sustainable rural and urban civic infrastructure. The Central Government would be urged to take constitutional action to provide for a two-tier system of local administration and also facilitate direct election of chairpersons of Panchayat Unions. (Thumping of Desks)

15. This Government has taken action to dissolve all primary co-operative societies as they have already completed their term. Instances of malpractices in co-operative societies will be thoroughly investigated and those involved in corrupt practices brought to book. This Government will seek to infuse real democratic spirit in the co-operative institutions of the State through elections to be conducted in September 2001. (Thumping of Desks)



16. The State Government has been incurring a huge food subsidy bill for the public distribution system which is plagued with corruption and other malpractices. This Government will accord high priority to revamping and restructuring the public distribution system for making it beneficiary-oriented and devoid of leakages. Smuggling of PDS commodities will be put down with an iron hand. Defects noticed in distribution of family cards will be rectified. This Government will strive to ensure that the quality and supply of all essential commodities are maintained. The Civil Supplies Corporation and cooperative institutions engaged in distribution of essential commodities will be computerized enabling e-governance in procurement, marketing and financial management.

17. This Government will take steps to ensure that Tamilnadu becomes the most industrialized State in the country. An expert committee will be constituted to undertake a study for setting up new industries. A new industrial policy with the aim of attracting investments and generating employment will be formulated. Steps will be taken to promote a "Tamil N.R.I Consortium" comprising Tamils living all over the world, for promoting foreign investments and technology transfers to the State.

18. Adequate infrastructure is an important pre-requisite for sustaining the pace of industrialization. This Government will urge the Central Government for providing more funds for the maintenance of national highways. The State Government will also explore the possibilities of funding upgradation and maintenance of state highways, rural roads and bridges through international agencies. Similarly, the state of the transport sector will be reviewed with a view to providing affordable and better facilities for movement of people and goods.

19. This Government recognizes the imperative of spearheading an IT-revolution for increasing employment opportunities, enhancing the earning capacity of the people and transforming governance in the State. Steps will be taken for improving the IT networking infrastructure by employing fibre-optic technology. This Government envisions an important role to be played by private entrepreneurs in linking the rural and urban areas through the Internet. Satellite Earth Stations will be set up in different districts for providing access to export markets to entrepreneurs engaged in computer software production.

[2001 மே 28

20. The Small Industries sector in Tamilnadu is in a pitiable state. This Government will restore the patronage given to Small-Scale Industries by withdrawing the Government Order No.75, Finance Department, dated 19-2-1997 that had done away with the special preference given to them in Government procurements. A 1000 acre Small Scale Industrial Estate at Thirumullaivayal and a Women's Industrial Estate at a suitable place will be established in right earnest. Immediate action will be taken to revive the construction industry and real estate business, which had been a source of employment for lakhs of people. The Central Government will be urged to take effective action to prevent unfair trade practices in the cement industry and to put in place a regulatory mechanism to tackle price fluctuations of cement.

21. Availability of adequate and uninterrupted power is the key to economic and industrial growth. During its tenure in 1991-96, this Government had increased the power generation capacity of the State by 968 MW. However during the last five years, only 458 MW has been added. Those thermal power projects that were conceived during 1991-96 and abandoned by the previous Government will be taken up for reconsideration in the context of overall power requirement of the State. 'Energy Audit System' and 'Energy Budget System' at the levels of generation, transmission and distribution will be introduced. Special attention will be paid to augmenting the non-conventional sources of energy such as windmill and solar energy, power generation through industrial alcohol, molasses, municipal wastes etc.

22. "Health for All" and easy access to quality medical facilities will be among the cherished goals of this Government. Besides taking steps to augment the existing hospital and domiciliary infrastructure, facilities for enabling state-of-the-art and quality treatment will be provided. Availability of medicines in hospitals will be ensured. All district, municipal and taluk hospitals will be provided with generators.

23. This Government will strive to provide quality education to all children below the age of 14 years. Non-enrolled and drop-out children will be identified during the current year and a massive movement will be organised to bring all of them to school with a special focus on girls belonging to Scheduled Castes, Scheduled Tribes, Denotified Tribes, Most Backward Classes and Backward Classes. In order to make the classroom conducive and attractive for children,



2001 மே 28]

an appropriate educational methodology of teaching which will promote self-learning will be evolved and all the primary school teachers will be trained within a period of three years. It is proposed to allow parents of children to play a major role in construction, maintenance and running of schools through Empowered Peoples' Committees. The student-teacher ratio in schools will be rationalized and efforts made to provide one teacher for every class. All High schools in rural areas will be upgraded into Higher Secondary schools in a phased manner. Reservation for rural students in technical institutions and professional colleges will be enhanced from 15 percent to 25 percent. (Thumping of Desks) This Government will also provide a free bicycle to all girl students (Thumping of Desks) belonging to the Adi-Dravidar and the Scheduled Tribe communities studying in classes eleven and twelve. A scheme for providing free education upto post graduate level in Government colleges for Adi-Dravidar and Scheduled Tribe girl students will be implemented. (Thumping of Desks) All engineering colleges in Tamilnadu will be affiliated to a Technology University proposed to be set up. Transparent and clear transfer guidelines will be evolved for the benefit of the teaching community. For our academic institutions to become centres of excellence facilitating all round development of our children, it is necessary that the schools, colleges and universities have adequate resources. This Government will explore the possibilities of internal generation of resources for improving educational infrastructure.

24. Women, children, disabled and the aged constitute the most vulnerable sections of our society. The problems of these sections will merit special attention of the Government. Measures will be undertaken to enact a law enabling 33 percent reservation for women in employment opportunities and in Parliament and State Legislatures. Development councils for upliftment of economically weaker women will be constituted in villages for mobilizing credit facilities and enabling financial empowerment. A massive scheme for training five lakh women in entrepreneurial skills for self-employment will be launched. (Thumping of Desks) The number of All Women Police Stations will be increased in order to instill a sense of security amongst women. This Government will come down heavily on illicit liquor trafficking, which contributes to the miseries of poor households and particularly women.

25. The last five years have witnessed a steady degeneration of nutritious noon-meal centres. The Puratchi Thalaivar M.G.R Nutritious Meal Programme

will be reorganised and restructured to ensure proper targeting and to improve the quality of service. The "Cradle Baby Scheme" and other schemes for child welfare launched during 1991-1996 will be revived. This Government will encourage setting up of old age homes by non-government organisations to enable our elders to live in dignity and comfort. Laws providing special facilities like ramps, special toilets etc. in public places for the disabled will be strictly enforced.

26. Thanthai Periyar, Perarignar Anna and Puratchi Thalaivar M.G.R. cherished the cause and ideology of uplifting the Adi-Dravidars, Tribals, Backward and Most Backward classes in education, employment and economic status in order to establish an egalitarian society. The Honourable Chief Minister, Selvi J.Jayalalithaa (Thumping of Desks) in her last tenure had enacted the historic legislation providing 69 percent reservation in education and employment for the depressed sections of the society and enabled its inclusion in the IX schedule of the Constitution. Though the Supreme Court has not yet taken cognisance of this historic legislation, the Central Government will be urged to bring in a constitutional amendment to protect the statute. The Central Government will also be moved for increasing reservation for Backward Communities from 27 percent to 50 percent and for implementing the same in recruitment to the All India Services and the Central Services. This Government will revitalize the TAHDCO for extension of liberal credit facilities.

27. This Government is committed to the protection and welfare of the minorities. Inter-religious Harmony Committees comprising religious elders and youth from all sections will be set up to promote communal amity.

28. This Government recognizes the imperative of having a targeted and effective social security net for the people living below the poverty line. Training in multiple trades will be provided to workers deprived of their jobs so as to enable early rehabilitation. Speedy action will be taken to re-examine and codify the labour laws. Special attention will be paid to problems of the unorganized sector labourers so as to ensure fair wages and dignified working conditions.

29. This Government is concerned about the welfare of the fisherfolk of Tamilnadu. Emphasis will be placed on providing IT-based modern communication facilities so that meteorological information, information on fish density in areas etc. are easily available to fishermen. This Government



will also urge the Central Government to redeem the Kacha Theevu island and restore the fishing rights of our people. (Thumping of Desks)

30. The handloom industry in Tamilnadu is in a bad shape and the Government will examine the causes of sickness in spinning mills and take appropriate remedial measures. (Thumping of Desks)

31. This Government proposes to give a fillip to the tourism industry in the State. A comprehensive tourism development plan will be prepared aimed at increasing opportunities for employment, development of local handicrafts and increasing revenues to the State.

32. An independent and autonomous judiciary is the cornerstone of our democratic polity. Suitable action for speedy disposal of pending cases will be taken after identifying the administrative and other needs of the judiciary in consultation with the Honourable Chief Justice of the Madras High Court.

33. Temples in Tamilnadu reflect the ancient culture, civilization, art and life style of the people. This Government proposes to take effective steps to ensure proper administration of temples. (Thumping of Desks)

34. This Government will implement the two-language policy of Tamil and English formulated and implemented by Perarignar Anna. Action will be taken to increase the use of Tamil in administration. Steps will be taken to protect and develop the artistic ethos of Tamilnadu. (Thumping of Desks)

35. Government employees constitute the bedrock of any administrative set up. This Government will be sympathetic to the genuine grievances of its employees and take steps to examine issues relating to their welfare and conditions of service. To facilitate this, a scheme will be implemented to enable the representatives of Government employees, teachers and employees in other sectors to meet the Heads of Departments in districts and at State level to periodically represent and find solutions to their problems. Action will be taken to improve avenues for training, sensitization and the working environment of employees so as to usher in an era of quality governance.

36. The Media play an important role in linking Government and people. This Government will be alive to the problems faced by media persons and take necessary steps for their welfare.

37. Sales tax administration will be streamlined so that traders are not subjected to harassment. The possibility of providing assistance and help to indigent traders will be explored.

38. This Government pledges to adopt all means necessary to provide a transparent, clean and efficient administration in the State. The concept of "file closing week" will be implemented to ensure expeditious clearing of files within 90 days. E-governance will be employed to facilitate citizen-government interface.

39. Honourable members of this august Assembly are well aware that the people of this State have a lot of expectations from this Government. But the new Government has assumed charge at a time when the State is in a severe financial crisis. When this Government demitted office in 1996, it left behind a healthy state of economy with a large cash surplus of Rs.874 crores. However, over the last five years, not only have these reserves been depleted completely, but there were unpaid cash liabilities of about Rs.700 crores as on 31st March 2001. The State Government is now forced to depend on borrowings from the Reserve Bank of India even to meet its day-to-day cash requirements. There has also been an uncontrolled growth in revenue deficit in the last five years. This Government proposes to place in this House a "White Paper on the State of Finances of Tamilnadu" for public knowledge. The expectations of the people can only be fulfilled when the State is financially healthy. It is proposed to undertake a fiscal course-correction exercise to bring the State finances back on the rails. This will take time to have an impact and I am sure that the people of Tamilnadu will support the measures to be taken by this Government for restoring the financial health of the State.

40. This Government would like to give a firm assurance to the people of Tamilnadu that all efforts will be taken to eradicate poverty and want. Conditions will be created for total elimination of poverty. Firm steps will be taken to fulfill this pledge in its entirety by ensuring the economic development of the State with iron will and determination.

41. I have briefly touched upon some of the policy issues, which indicate the general direction and vision of this Government. I am confident that through



vigorous implementation of policies, we shall be able to transform Tamilnadu into the most dynamic and prosperous State in the country. (Thumping of Desks) I trust that the debate that will follow will enhance the vision of this Government for ensuring the prosperity of the people.

42. I convey my best wishes for achieving the challenging tasks ahead.

**Vanakkam** (Thumping of Desks)

**Jai Hind.**

## இணைப்பு

**மதிப்பிற்குரிய சட்டப் பேரவை உறுப்பினர்களே,**

தமிழ்நாட்டில், புதிதாக அமைக்கப்பட்ட பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத்தொடரில் உரையாற்றுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். பெருமைக்குரிய இந்த சட்டமன்றப் பேரவைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவிப்பதுடன், மக்களின் முன்னேற்றத்திற்காக அவர்கள் ஆற்றும் பணிகளைச் செவ்வனே செய்ய நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். விருப்பு வெறுப்பின்றியும், சுதந்திரமாகவும் வாக்களித்து இம்மாநிலத்தின் ஆரோக்கியமான ஜனநாயக மரபைக் கட்டிக்காத்த, தமிழ்நாட்டு மக்களுக்கு நான் என்னுடைய உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குத் தற்போது நடைபெற்று முடிந்துள்ள தேர்தல், பலவகையில் வரலாறு படைத்துள்ளது. தமிழக மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அளித்துள்ள தெளிவான, உறுதியான தீர்ப்பு, மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இம்மாநில வரலாற்றில் இதற்கு ஈடு இணையே இல்லை. இத்தேர்தல் முடிவு, தமிழ்நாட்டு மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் குறிப்பாக, அக்கட்சியின் தலைவி மாண்புமிகு முதலமைச்சர் மீது வைத்துள்ள அசைக்க முடியாத நம்பிக்கையையே காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

3. இத்தேர்தலில், மாநிலம் முழுவதும் முதன் முறையாக, மின்னணு வாக்குப் பதிவு சாதனம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சாதனங்களில் கோளாறு ஏற்பட்டதால், பல இடங்களில் வாக்குப் பதிவு தொடங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் மற்றும் ஜப்பான் போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகள் பல, மின்னணு வாக்குப் பதிவு சாதனங்களைப் பயன்படுத்திப் பார்த்த பிறகு, தற்போது, வாக்குச்சீட்டு முறைக்கு மீண்டும் மாறியுள்ளன. இவ்வரசு, மின்னணு வாக்குப் பதிவு சாதனங்களைப் பயன்படுத்துவதை எதிர்க்கிறது; இதனை இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லும். தகுதிவாய்ந்த ஒரு கோடிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் புகைப்பட அடையாள அட்டைகள் இருந்தும், அவர்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டிருந்ததால், வாக்களிக்க முடியாமல்

தடுக்கப்பட்டனர். இவ்வரசு, இதனையும் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன்பாக, இந்த முரண்பாடுகளை நீக்க ஏற்பாடு செய்யும்.

4. மாநில அரசின் உயர் அலுவலர்களும், காவல் துறையினரும் மன உறுதியும் ஊக்கமும் குன்றியிருப்பது இவ்வரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் இம்மாநிலத்தின் பிற பணிகளைச் சார்ந்த பணியாளர்களின் மன உறுதியையும், பெருமையையும் மீட்க இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

5. இம்மாநிலத்தின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க வேண்டியது இன்றியமையாதது என்பதை இவ்வரசு உணர்ந்துள்ளது. தீவிரவாதம், பிரிவினைவாதம் மற்றும் அனைத்து வகையிலான பயங்கரவாதத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்க இவ்வரசு முயற்சிகள் மேற்கொள்ளும். கடந்த ஐந்தாண்டுகளில் வீரப்பனையும், அவனுடைய கூட்டாளிகளையும் பிடிக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. சமீபகாலத்தில் தமிழ்நாடு விடுதலைப் படை (TNLA) மற்றும் தமிழ்நாடு மீட்புப் படை (TNRT) போன்ற தீவிரவாத, தேசவிரோத மற்றும் பிரிவினை சக்திகள் வீரப்பனோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளன. இவ்வரசு, மத்திய அரசு மற்றும் கர்நாடக அரசின் ஒத்துழைப்புடன் பயங்கர குற்றவாளியான வீரப்பனைப் பிடிக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற மக்களை அச்சுறுத்தியும், சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டும் வந்துள்ள, அரசியலமைப்பு மற்றும் சட்டங்களுக்கு உட்படாத, சக்திகளின் எண்ணிக்கை ஆட்சியில் இருந்தவர்களின் ஆதரவால் பெருகியுள்ளது. அத்தகைய சட்டவிரோத சக்திகளை இவ்வரசு இரும்புக்கரம் கொண்டு அடக்கும்.

6. 1991 முதல் 1996 வரையில் காவல் படையை நவீனமாக்க பெருமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு இம்முக்கியமான பணியில் போதிய கவனம் செலுத்தப்படாததால் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. காவல் படையை உலக அளவில், தலைசிறந்த படைகளுக்கு ஈடாக, சட்டத்தைச் செயலாக்கும் தகுதிவாய்ந்த திறமையான அமைப்பாக மாற்ற இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கும்.

7. கூட்டுறவு மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அமைந்த சுமுகமான மத்திய-மாநில மற்றும் பன்மாநில நல்லுறவுகளுக்கு இவ்வரசு



பாடுபடும். மத்திய அரசைக் காட்டிலும் மாநில அரசுகளே மக்களுக்கு நெருக்கமானவை. பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படுகின்ற இன்றியமையாப் பொருட்களின் வழங்கல் விலையை அதிகரித்தல் போன்ற வறியவர்களைப் பாதிக்கின்ற முக்கிய பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து முடிவெடுக்கும் முன்னர் மத்திய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாலோசிப்பது முறையாக இருக்கும். தமிழ்நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களில் பொருளாதார மேம்பாட்டைப் பறைசாற்றும் வகையில், பெருந்திட்டங்களை மேற்கொள்ளும்படி மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும். சேது சமுத்திரம் திட்டத்தை மத்திய அரசு விரைந்து செயல்படுத்தும் என்று இவ்வரசு நம்புகிறது. கப்பல் போக்குவரத்தை மேம்படுத்தும்பொருட்டு, சென்னை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, கொளச்சல் துறைமுகங்களை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசு வலியுறுத்தப்படும். "கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தை" விரைந்து முடிக்க உடனடி நடவடிக்கை எடுக்கும்படி இவ்வரசு ஆந்திர அரசை வற்புறுத்தும். முல்லை-பெரியாறு அணையின் உயரத்தை 152 அடியாக உயர்த்த, கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். நீண்டகாலமாக தீர்வு காணப்படாமல் உள்ள காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதில் இவ்வரசு, கர்நாடக அரசின் ஒத்துழைப்பை நாடும்.

8. அடுத்தடுத்து வந்த நிதிக் குழுக்கள் நிதிப் பகிர்வில், தமிழ்நாட்டிற்குச் சேர வேண்டிய நியாயமான பங்கினை அளிக்கத் தவறியுள்ளன என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். முன்னேற்றப் பாதையில் செயல்படுகின்ற மாநிலங்களின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதில், மத்திய அரசு தன்னுடைய கடமையைப் புறக்கணிக்கக் கூடாது என்பதை இவ்வரசு மத்திய அரசிடம் வலியுறுத்தும்.

9. வேளாண்மை ஊரகப் பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமாக விளங்குவதால், வேளாண் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்கும் வகையில் நவீன பாசன முறைகள், அறிவியல் ரீதியான நீர் நிர்வாக முறைகள் மற்றும் வேளாண் நடைமுறைகள் ஆகியவற்றை விவசாயிகளிடம் பரப்புவதற்குத் தனி முக்கியத்துவம் அளிக்கப்படும். நிலத்தை முழுமையாகப் பயன்படுத்துதல், வேளாண் நோக்கங்களுக்காக தரிசு நிலங்களை மேம்படுத்துதல், மண் வளத்தை மேம்படுத்துதல் மற்றும் புன்செய் பயிர் மேம்பாடு, தோட்டக்கலை, மலர்ச் செடி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, அறுவடைக்குப் பின் பராமரிப்பு, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்ட,

புதிய வேளாண் கொள்கை உருவாக்கப்படும். தொடர்ந்து நிலவிவரும் பாசன நீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க, மழைநீரைச் சேகரிக்கும் முறைகளில், விவசாயிகளுக்கும், மற்றவர்களுக்கும் பயிற்சி அளிக்கும் பெருந்திட்டம் ஒன்று செயலாக்கப்படும்.

*10.* உழவர் சந்தைகளால் விவசாயிகளும் பயனடையவில்லை; நுகர்வோரும் பயனடையவில்லை. எனவே இத்திட்டம் தோல்வி அடைந்துள்ளது. இவ்வரசு செயல்படாமல் உள்ள உழவர் சந்தைகளை மூடிவிடக் கருதியுள்ளது. தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்ற உள்ளூர் சந்தைகளுக்கு "கிராமச் சந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்" (மேசையைத் தட்டும் ஒலி) மூலமாக புத்துணர்ச்சி அளிக்கவும், அவற்றை வேளாண் விளைபொருள் விற்பனை மையங்களாக மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கக் கருதப்பட்டுள்ளது.

*11.* ஊரக மக்களுடைய குடும்ப வருவாயைப் பெருக்குவதில், கால்நடைகள் மிகவும் முக்கியமான பங்கு வகிக்கின்றன. கறவைக் கால்நடைகளின் தரத்தை உயர்த்த வல்லுநர்கள் பரிந்துரைகளின் அடிப்படையில் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. விவசாயிகள் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ள ஏதுவாக, கூடுதல் தொழிலாக கலப்பின செம்மறியாட்டுப் பண்ணைகள், மீன் வளர்ப்புப் பண்ணைகள், கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஆகியவற்றை நடத்த ஊக்கமளிக்கும் சிறப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

*12.* இம்மாநிலத்தில் அதிகரித்துவரும் வீட்டுவசதித் தேவையை நிறைவு செய்வதற்காக இவ்வரசு முனைப்புடன் செயல்படும். "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்பதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு, இவ்வரசு செயல்பட்டு, அந்நோக்கத்தை எய்தும் வகையில் "வீட்டுமனை விரைவு ஒதுக்கீட்டுத் திட்டம்" ஒன்றை வகுக்கும்.

*13.* தமிழ்நாட்டை தற்போது தாக்கியுள்ள கோடையின் கடுமை காரணமாக ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையால் மக்கள் சொல்லொணாத அளவிற்கு அவதிப்படுகின்றனர். பாசனத்திற்காகவும், வீடுகளில் பயன்படுத்துவதற்காகவும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து நீர் கிடைக்கச் செய்வதற்காக, உடனடி நடவடிக்கையை இவ்வரசு மேற்கொள்ளும். பின்வரும் வழிகளின்மூலம் இது நிறைவேற்றப்படும்:

- தமிழ்நாட்டில், *100* பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள குடியிருப்புப் பகுதிகள் ஒவ்வொன்றிக்கும், ஒரு குடிநீர் ஆதாரத்தையாவது ஏற்படுத்திக் கொடுப்பதற்காக காலவரையறைக்குட்பட்ட திட்டம் ஒன்றைச் செயல்படுத்துதல்.



- கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தின்கீழ் ஸ்ரீசைலம்-சோமசிலா பகுதியில் எஞ்சியுள்ள வாய்க்கால் வெட்டும் பணியை உடனடியாக முடிக்க ஆந்திர மாநில அரசு வலியுறுத்தப்படும். சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்காக, இரண்டு புதிய நீர்த் தேக்கங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

- புதிய வீராணம் திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இத்திட்டம் தேசிய மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும்.

- பயன்படுத்துவோரின் தீவிர ஒத்துழைப்புடன் இம்மாநிலம் முழுவதிலும் அமைந்துள்ள அனைத்து ஏரிகள், பாசன வாய்க்கால்கள் ஆகியவற்றை நவீனப்படுத்தி, அவற்றின் கொள்ளளவுத் திறனை மேம்படுத்தும் சிறப்புத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

- இந்நாட்டிலுள்ள அனைத்து ஆறுகளையும் தேசியமயமாக்கவும், மத்திய இந்தியா மற்றும் தென்னிந்தியாவிலுள்ள பெரும் ஆறுகளை இணைக்கும் தீபகற்ப ஆற்று நீர் இணைப்புத் திட்டத்தைப் படிப்படியாக செயல்படுத்தவும் மத்திய அரசு வலியுறுத்தப்படும்.

*14.* தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புகள், நிதிநிலை மற்றும் நிர்வாகத்தில் தொடர்ந்து பின்னடைவைச் சந்தித்து வந்துள்ளன. அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் தேர்தல்களை விரைவில் நடத்த இவ்வரசு உத்தேசித்துள்ளது. பாகுபாடு எதனையும் காட்டாமல், உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்களை மேம்படுத்த இவ்வரசு முயற்சி செய்யும். இவ்வாறு செய்வதன் மூலம், ஊரக மற்றும் நகர்ப்பகுதிகளில் நிலையான அடிப்படை ஆதாரங்களை உருவாக்க இயலும். உள்ளாட்சி நிர்வாகத்தில் இரண்டு அடுக்கு முறைக்கு வகை செய்வதற்கும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களை மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்க வழிவகை செய்வதற்கும் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசு வலியுறுத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி).

*15.* தொடக்கக் கூட்டுறவுச் சங்க நிர்வாக அமைப்புகளின் பதவிக் காலம் ஏற்கெனவே முடிந்துவிட்டதால், இவ்வமைப்புகளைக் கலைத்து

[2001 மே 28

விடுவதற்காக இவ்வரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற முறைகேடுகள் முழுமையாகப் புலனாய்வு செய்யப்பட்டு, ஊழலில் ஈடுபட்டவர்கள்மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 2001 செப்டம்பர் திங்களில் நடத்தப்படவிருக்கும் தேர்தல்கள் மூலம், இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களில் உண்மையான ஜனநாயக உணர்வை ஊட்டவும் இவ்வரசு விழைகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

16. பொது விநியோகத் திட்டத்திற்கு, உணவு மானியமாக இதுவரை மாநில அரசு பெருந்தொகையைச் செலவிட்டு வந்துள்ளது. இருப்பினும், இத்திட்டத்தில் இலஞ்சமும் ஏனைய முறைகேடுகளும் மலிந்துள்ளன. பொது விநியோக முறை, நுகர்வோரின் நலனை நோக்கமாகக் கொண்டதாகவும் முறைகேடுகள் அற்றதாகவும் அமைகின்ற வகையில் அதனைச் சீரமைக்கவும், மாற்றியமைக்கவும் இவ்வரசு உயர் முன்னுரிமை அளிக்கும். பொது விநியோக முறைக்காக வழங்கப்படும் பொருள்கள் கடத்திச் செல்லப்படுவது இரும்புக் கரம் கொண்டு தடுக்கப்படும். குடும்ப அட்டைகள் வழங்குவதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் சரிசெய்யப்படும். தரமுள்ள அனைத்து வகையான இன்றியமையாப் பொருள்களும் தடையின்றி வழங்கப்படுவதற்கான முயற்சிகளை இவ்வரசு மேற்கொள்ளும். இன்றியமையாப் பொருள்களின் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களில், கொள்முதல், விற்பனை மற்றும் நிதி நிர்வாகப் பணிகள் கணினிமயமாக்கப்பட்டு மின்னணுசார் நிர்வாகம் செயல்படுத்தப்படும்.

17. தமிழ்நாடு நமது நாட்டிலேயே மிகவும் தொழில்வளம் மிக்க மாநிலமாக உயர்வதற்கான நடவடிக்கைகளை இவ்வரசு மேற்கொள்ளும். புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவான ஆய்வை மேற்கொள்ள, வல்லுநர் குழு ஒன்று ஏற்படுத்தப்படும். முதலீட்டை ஈர்ப்பதையும், வேலைவாய்ப்பை உருவாக்குவதையும் குறிக்கோளாகக் கொண்ட புதியதோர் தொழில் கொள்கை வகுக்கப்படும். வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதற்கும், தொழில்நுட்ப உத்திகளை இம்மாநிலத்திற்குக் கொண்டுவருவதற்கும், உலகம் முழுவதிலும் வாழும் தமிழர்களைக் கொண்ட "வெளிநாட்டில் வாழும் இந்தியத் தமிழர்களின் கூட்டமைப்பு" (Consortium) ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

18. தொழில் மயமாக்குவதை ஊக்குவிக்க, போதிய அளவிற்கு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது மிகவும்



2001 மே 28]

இன்றியமையாததாகும். தேசிய நெடுஞ்சாலைகளைப் பராமரிப்பதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இவ்வரசு, மத்திய அரசை வலியுறுத்தும். மாநில நெடுஞ்சாலைகள், ஊரகச் சாலைகள் மற்றும் பாலங்களின் தரத்தை உயர்த்தவும், பராமரிப்பதற்கும் பன்னாட்டு அமைப்புகளின் மூலம் நிதியுதவியைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் இவ்வரசு ஆராயும். செலுத்த இயலுகின்ற கட்டணத்தில், மக்கள் பயணம் செய்வதற்கும், சரக்குகள் எடுத்துச் செல்வதற்கும், அதிக வசதிகள் செய்துகொடுக்கும் நோக்குடன் போக்குவரத்துத் துறையின் நிலை ஆய்வு செய்யப்படும்.

19. வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதற்கும், மக்களின் வருமானத்தை உயர்த்துவதற்கும், மாநிலத்தின் நிர்வாக முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடனும், "தகவல் தொழில்நுட்பவியல்" புரட்சியை முதன்மைப் பணியாக மேற்கொள்ள வேண்டியது அவசியமென்று இவ்வரசு உணர்ந்துள்ளது. "கண்ணாடி இழை" (fibre-optic) தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி, தகவல் தொழில்நுட்பவியல் கட்டமைப்பு அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இணையம் வாயிலாக ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளை இணைப்பதில் தனியார் தொழில் முனைவோர்களின் முக்கியப் பங்கை அரசு உணர்ந்துள்ளது. கணினி மென்பொருள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோருக்கு பன்னாட்டுச் சந்தைகளை எளிதில் அணுகும் வகையில் பல்வேறு மாவட்டங்களில், செயற்கைக்கோள் தரை நிலையங்கள் (Satellite Earth Stations) நிறுவப்படும்.

20. தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில் நிறுவனங்கள் பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ளன. அரசுக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்வதில் சிறுதொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வந்த முன்னுரிமையைத் தடைசெய்து 19-2-1997 அன்று வெளியிடப்பட்ட நிதித் துறையின் அரசு ஆணை எண் 75 இரத்து செய்யப்பட்டு, இந்நிறுவனங்களுக்கான ஆதரவு மீண்டும் வழங்கப்படும். திருமுல்லைவாயலில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதொழில் தொழிற்பேட்டை ஒன்றும், தக்கதோர் இடத்தில் மகளிருக்கான தொழிற்பேட்டை ஒன்றும் ஏற்படுத்த முனைப்பான நடவடிக்கை எடுக்கப்படும். இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பளித்து வந்த கட்டுமானத் தொழில் மற்றும் வீடுகள்-மனைகள் வாங்குதல்-விற்றல் (real estate business) ஆகிய தொழில்களுக்கு புத்துயிரளிப்பதற்காக உடனடி

நடவடிக்கை எடுக்கப்படும். சிமெண்ட் தொழிலில், நேர்மையற்ற வணிக நடைமுறைகளைத் தவிர்ப்பதற்காகவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் மற்றும் சிமெண்ட் விலையேற்றத்தைச் சமாளிப்பதற்கு, முறையான கட்டுப்பாட்டு அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்காகவும் தகுந்த நடவடிக்கை எடுக்க மத்திய அரசு வலியுறுத்தப்படும்.

*21.* பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சிக்கு போதிய மற்றும் தடையில்லா மின்வசதி இன்றியமையாததாகும். *1991* முதல் *1996* வரை, இவ்வரசு ஆட்சியிலிருந்தபோது, இம்மாநிலத்தின் மின் உற்பத்தித் திறனளவு *968* மெகா வாட் அதிகரிக்கப்பட்டது. ஆனால் கடந்த *5* ஆண்டுகளில் *458* மெகா வாட் அளவே அதிகரிக்கப்பட்டுள்ளது. *1991-96* ஆம் ஆண்டுக் காலத்தில் உருவாக்கப்பட்டு, பின்னர் முந்தைய அரசால் கைவிடப்பட்ட அனல் மின் நிலையத் திட்டங்கள், தற்போது இம்மாநிலத்தின் மொத்த மின் சக்தியின் தேவையளவைக் கருத்தில்கொண்டு, மீண்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். மின் உற்பத்தி, விநியோகம், அனுப்புகை ஆகிய நிலைகளில், “மின்சக்தித் தணிக்கை” மற்றும் “மின்சக்தித் திட்டமிடுதல்” செயல்படுத்தப்படும். காற்றாலை, சூரிய ஒளி (Solar energy), எரிசாராவி, கருப்பஞ்சாறு கசண்டுகள், நகராட்சிக் கழிவுகள் போன்ற மரபு-சாரா எரிசக்தி ஆதாரங்களுக்குப் புத்துயிரளிக்கவும் தனிக் கவனம் செலுத்தப்படும்.

*22.* அனைவருக்கும் நோயற்ற வாழ்வு (Health for All) மற்றும் தரமுள்ள மருத்துவ வசதி எளிதில் கிடைக்கச் செய்வது இவ்வரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். இம்மாநிலத்திலுள்ள மருத்துவமனைகளில் அடிப்படை மருத்துவ மற்றும் கட்டமைப்பு வசதிகளைப் பெருக்குவதற்கு, நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், தரமான மற்றும் அதிநவீன சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப்படும். மருத்துவமனைகளில் மருந்துகள் தடையின்றி கிடைப்பதற்கு வகை செய்யப்படும். மாவட்ட, நகராட்சி மற்றும் வட்ட மருத்துவமனைகள் அனைத்திற்கும் மின் உற்பத்தி எந்திரங்கள் (Generators) வழங்கப்படும்.

*23.* பதினான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் தரமான கல்வி அளிக்க இவ்வரசு முனைப்பாக செயல்படும். நடப்பாண்டில், பள்ளிகளில் சேராத மற்றும் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திய குழந்தைகள் கண்டறியப்பட்டு, அவர்கள் அனைவரையும் பள்ளிக்கு அழைத்துவரும் பேரியக்கம் தொடங்கப்படும். குறிப்பாக, ஆதிதிராவிடர், பழங்குடியினர், சீர்மரபினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட



மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த பெண் குழந்தைகளைப் பள்ளிக்கு வரவழைப்பதில் தனிக் கவனம் செலுத்தப்படும். வகுப்பறை, பள்ளிக் குழந்தைகளுக்கு உகந்ததாகவும், ஆர்வமுடன் அவர்கள் பள்ளிக்கு வரும் பழக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைய வேண்டும். இந்நிலையை ஏற்படுத்த, “சுயமாகக் கற்றலை” (self-learning) ஊக்குவிக்கும் பொருத்தமான கற்பிக்கும் முறை உருவாக்கப்பட்டு, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் மூன்று ஆண்டுகளுக்குள் இதற்கான பயிற்சி அளிக்கப்படும். அதிகாரமளிக்கப்பட்ட மக்கள் குழுக்கள் மூலமாக, பள்ளிகளைக் கட்டுவதிலும், பராமரிப்பதிலும், நடத்துவதிலும் பள்ளிக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு முக்கியப் பங்களிக்கக் கருதப்பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்-ஆசிரியர் விகிதம் சீரமைக்கப்படும். ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் ஆசிரியர் என்ற நிலையை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும். ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து உயர்நிலைப் பள்ளிகளும் படிப்படியாக மேனிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும். தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களிலும், தொழிற்படிப்புக் கல்லூரிகளிலும், ஊரக மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு *15* சதவீதத்திலிருந்து *25* சதவீதமாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பதினொன்று மற்றும் பன்னிரண்டாம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் சமுதாயங்களைச் சார்ந்த மாணவிகள் அனைவருக்கும், இவ்வரசு, இலவசமாக மிதிவண்டி வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி). ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயங்களைச் சார்ந்த மாணவிகளுக்கு, அரசுக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கும் திட்டம் செயலாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பொறியியல் கல்லூரிகளும், புதிதாக அமைக்கப்படவுள்ள தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின்கீழ் கொண்டுவரப்படும். ஆசிரியர் சமுதாயத்தின் நலனுக்காக, வெளிப்படையான, தெளிவான பணி இடமாற்ற வழிகாட்டி விதிமுறைகள் வகுக்கப்படும். கல்வி நிறுவனங்கள், நம்முடைய குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவுகின்ற, சிறந்த, திறமைமிக்கவர்களை உருவாக்கும் மையங்களாக ஆகவேண்டுமெனில், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போதுமான நிதிவளம் பெற்றவையாக இருக்க வேண்டியது அவசியம். கல்விசார் அடிப்படை வசதிகளை மேம்படுத்த சுயநிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை இவ்வரசு ஆராயும்.

*24.* நமது சமுதாயத்தில் மிகவும் பாதிப்பிற்குள்ளாகக் கூடியவர்கள் மகளிர், குழந்தைகள், ஊனமுற்றோர், முதியோர் ஆகியோராவர்.

இப்பிரிவினரின் பிரச்சினைகளில் இவ்வரசு தனிக் கவனம் செலுத்தும். வேலைவாய்ப்புகளிலும், நாடாளுமன்றத்திலும், மாநிலச் சட்டமன்றப் பேரவைகளிலும் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிப்பதற்கு வகை செய்யும் சட்டம் இயற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஊரகப் பகுதிகளில் நலிவுற்ற மகளிர் மேம்பாட்டிற்காக கடன் வசதிகளைப் பெறுவதற்கும், நிதி அதிகாரங்களைப் பெறுவதற்கும் வகை செய்யும் பொருட்டு, "மகளிர் மேம்பாட்டு மன்றங்கள்" ஏற்படுத்தப்படும். மகளிருக்கான சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்க ஐந்து இலட்சம் பெண்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் ஒரு பெருந்திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்கு பாதுகாப்பு உணர்வை ஊட்டும் வகையில், அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். வறிய குடும்பத்தினருக்கு, குறிப்பாக பெண்களுக்கு இன்னல் தரும் கள்ளச்சாராய வியாபாரத்தை இவ்வரசு கடுமையான நடவடிக்கைகளால் ஒடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

25. கடந்த ஐந்து ஆண்டுகளில், சத்துணவு மையங்கள் படிப்படியாக சீர்கேடடைந்துவிட்டன என்பது கண்கூடு. தகுதியானவர்களுக்கு, தரமான சத்துணவு கிடைக்கும் வகையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 1991-1996 ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட "தொட்டில் குழந்தை திட்டம்" மற்றும் ஏனைய குழந்தைகள் நலத் திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நமது முதியோர் கண்ணியமாகவும், வசதியாகவும் வாழும் வகையில், முதியோர் இல்லங்கள் ஏற்படுத்த அரசுசாரா அமைப்புகளுக்கு இந்த அரசு ஊக்கம் அளிக்கும். ஊனமுற்றோருக்கு பொது இடங்களில் சாய்வுதளங்கள், சிறப்புக் கழிப்பிடங்கள் போன்ற தனி வசதிகளுக்கு வகை செய்யும் சட்டங்கள் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படும்.

26. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய பெருமக்கள், ஏற்றத் தாழ்வற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்காக, ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியோரின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையே தங்கள் கொள்கையாகக் கொண்டு பாடுபட்டனர். மாண்புமிகு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள், தனது முந்தைய பதவிக் காலத்தில், சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்காக,



கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 69 சதவீத இடஒதுக்கீடு அளித்து வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம் ஒன்றை இயற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலமைப்புச் சட்டத்தின் 9-ஆம் விவர அட்டவணையில் இதனை இடம்பெறச் செய்தார். உச்சநீதிமன்றம் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இச்சட்டத்தைக் கருத்தில் கொள்ளாதபோதும், இச்சட்டத்திற்குப் பாதுகாப்பு அளிக்க சட்டத் திருத்தம் கொண்டுவர மத்திய அரசு வலியுறுத்தப்படும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை 27 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்துமாறும், அனைத்திந்திய பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணியிடங்களுக்கான தேர்வுகளில் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை செயல்படுத்துமாறும் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்படும். தாராளமான கடன்வசதி கிடைக்கச் செய்வதற்காக, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தை இவ்வரசு வலுப்படுத்தும்.

27. சிறுபான்மையினரின் பாதுகாப்பு மற்றும் நலன்களைப் பேணுவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. சமுதாய ஒற்றுமையையும், சகோதரத்துவ உணர்வையும் பேணிக்காக்க, அனைத்து மதப் பிரிவுகளையும் சார்ந்த சமயப் பெரியோர்கள் மற்றும் இளைஞர்கள் அடங்கிய நல்லிணக்கக் குழுக்கள் ஏற்படுத்தப்படும்.

28. வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் மக்களின் நலன் கருதி, இலக்கிடப்பட்ட மற்றும் தீவிர சமூகப் பாதுகாப்பு அமைப்பு முறை ஒன்றை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, வேலைவாய்ப்பை இழந்த பணியாளர்கள் விரைவில் மறுவாழ்வு பெறும்வகையில், பலதரப்பட்ட தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். தொழிலாளர் நலச் சட்டங்களை மறுபரிசிலனை செய்து தொகுப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படும். அமைப்புசாரா துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், அவர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைப்பதற்கு வகை செய்யவும், கண்ணியமான பணிச்சூழலை உறுதி செய்யவும் தனிக் கவனம் செலுத்தப்படும்.

29. தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் நலன் குறித்து இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. வானிலைத் தகவல் மற்றும் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் பகுதிகள் குறித்த தகவல் மீனவர்களுக்கு எளிதில் கிடைக்க ஏதுவாக, தகவல் தொழில்நுட்ப முறையிலான நவீன தகவல் வசதிகள் உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். 'கச்சத் தீவை' மீட்டு,

நம்முடைய மீனவர்களுக்கு மீன்பிடி உரிமையை திருப்பித்தர இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தும். (மேசையைத் தட்டும் ஒலி).

30. தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மோசமான நிலையில் உள்ளது. நூற்பாலைகள் நலிவுற்றதற்குரிய காரணங்களை ஆராய்ந்து, அவை இயங்க உரிய நிவாரண நடவடிக்கைகளை அரசு எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி).

31. இவ்வரசு, மாநிலத்தில் சுற்றுலாத் தொழிலை ஊக்குவிக்கக் கருதியுள்ளது. வேலைவாய்ப்பு, உள்ளூர் கைவினைஞர்கள் மேம்பாடு, அரசுக்கு வருவாயை அதிகரித்தல் ஆகியவற்றிற்குரிய வாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் விரிவான சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படும்.

32. சுதந்திரமாகவும், தன்னாட்சி உரிமையுடனும் இயங்கும் நீதிமன்ற அமைப்பு, நமது ஜனநாயக அமைப்பின் அடித்தளமாகும். சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்து, நிலுவையாகவுள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்கு நீதி நிர்வாகம் மற்றும் ஏனைய தேவைகளைக் கண்டறிந்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

33. தமிழ்நாட்டில் உள்ள கோயில்கள், தமிழக மக்களின் பழங்கால பண்பாடு, நாகரிகம், கலை, வாழ்க்கை முறை ஆகியவற்றை பிரதிபலிக்கின்றன. கோயில்களின் முறையான நிர்வாகத்தை உறுதிசெய்ய இந்த அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கக் கருதியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

34. பேரறிஞர் அண்ணா அவர்களால் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்ட தமிழ் மற்றும் ஆங்கிலம் என்ற இரு மொழிக் கொள்கையை, இவ்வரசு தொடர்ந்து செயல்படுத்தும். மாநில நிர்வாகத்தில் தமிழ் மொழி பயன்படுத்தப்படுவதை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாட்டின் கலைப் பண்புகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

35. எந்தவொரு நிர்வாக அமைப்பிற்கும் அரசுப் பணியாளர்களே வலுவான அடிப்படையாக விளங்குகின்றனர். இவ்வரசு தன் பணியாளர்களின் உண்மையான குறைகளைப் பரிவுடன் பரிசீலித்து, அவர்களுடைய நலன் மற்றும் பணி நிலை தொடர்பான பிரச்சினைகளைப் பரிசீலிக்க நடவடிக்கைகளை எடுக்கும். இதற்கு ஏதுவாக



அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், ஏனைய பிரிவுகளிலுள்ள பணியாளர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள், மாவட்டங்களிலும், மாநில அளவிலும் உள்ள துறைத் தலைவர்களைச் சந்தித்து, தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வகைசெய்யும் ஒரு திட்டம் செயல்படுத்தப்படும். தரமான நிர்வாகத்தை அளிக்கும் வகையில் பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும், அவர்களுடைய திறமையைக் கூர்மைப்படுத்தவும் மற்றும் பணிச் சூழல்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

36. அரசையும், மக்களையும் இணைப்பதில் தகவல் தொடர்புத் துறை (media) முக்கியப் பங்கு வகிக்கிறது. இத்துறையில் பணிபுரியும் செய்தியாளர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, அவர்தம் நலன்கள் குறித்துத் தேவையான நடவடிக்கைகளை இவ்வரசு எடுக்கும்.

37. வணிகர்கள் துன்பத்திற்குள்ளாகாவண்ணம் விற்பனை வரி நிர்வாகம் சீரமைக்கப்படும். வறுமையில் வாழும் வணிகர்களுக்கு நிதியுதவி மற்றும் ஏனைய உதவிகள் அளிப்பதற்குரிய வாய்ப்புகள் ஆராயப்படும்.

38. இம்மாநிலத்தில் வெளிப்படையான, நேர்மையான, திறமையான நிர்வாகத்தை அளிக்கும்பொருட்டு, அரசு தேவையான அனைத்து வழிமுறைகளையும் பின்பற்ற உறுதிபூண்டுள்ளது. கோப்புகளை 90 நாட்களுக்குள் முடிக்கும் வகையில், "கோப்புகளை முடிக்கும் வாரம்" என்ற திட்டம் செயலாக்கப்படும். மக்களுக்கும், அரசுக்கும் இடையே நேரடித் தொடர்பு இருக்க இயலும்பொருட்டு, மின்னணுசார் நிர்வாக முறை பின்பற்றப்படும்.

39. இம்மாநில மக்கள், இந்த அரசிடம் அதிக எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளனர் என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். ஆனால் மாநிலம் கடுமையான நிதி நெருக்கடியில் இருக்கும் நேரத்தில், புதிய அரசு பொறுப்பேற்றுள்ளது. 1996-ல் இந்த அரசு பதவி விலகியபோது, ரூ. 874 கோடி ரூபாய் ரொக்க இருப்புடன், வளமான பொருளாதார நிலைமையை விட்டுச் சென்றது. ஆயினும், கடந்த ஐந்தாண்டுகளில், இந்த நிதிகள் கரைக்கப்பட்டதோடு அல்லாமல், இந்த ஆண்டு மார்ச் இறுதியில் அரசுக் கருவூலத்திலிருந்து அளிக்கப்படவேண்டிய தொகை (cash liabilities) ரூ. 700 கோடிக்கு மேல் இருந்தது. மாநில அரசு, அன்றாட பணத் தேவைகளுக்குக்கூட தற்போது இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில் வருவாய்ப் பற்றாக்குறை கட்டுப்படுத்த

முடியாத அளவுக்கு வளர்ந்துள்ளது. பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில், "தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை" ஒன்றை இப்பேரவையில் வைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. அரசு நிதிநிலை அடிப்படையில் ஆரோக்கியமாக இருக்கும்போதுதான், மக்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவு செய்ய முடியும். மாநில அரசின் நிதி நிலையை மீண்டும் சரியான தடத்தில் கொண்டுவரும் பொருட்டு, நிதிச் சீர்திருத்த நடவடிக்கை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இது பயனளிக்க சிறிதுகாலம் ஆகும். இம்மாநில அரசின் நிதிநிலையை சீரமைக்க இந்த அரசு எடுக்க இருக்கும் நடவடிக்கைகளுக்கு, தமிழக மக்கள் ஆதரவு அளிப்பர் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

*40.* வறுமை மற்றும் இல்லாமையை ஒழிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று தமிழக மக்களுக்கு இவ்வரசு உறுதி அளிக்கிறது. வறுமையை முற்றிலும் நீக்குவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படும். திட உறுதியுடனும், திண்ணிய எண்ணத்துடனும் இம்மாநிலத்தை பொருளாதார வகையில் முன்னேற்றமடையச் செய்து, வறுமையை ஒழித்தல் என்கிற உறுதிமொழியை முற்றிலுமாக நிறைவேற்ற உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

*41.* இவ்வரசின் பொதுவான செயல்முறைகளையும், நோக்கங்களையும் குறிக்கின்ற சில கொள்கை நெறிமுறைகளை மட்டுமே நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இந்நெறிமுறைகளை தீவிரமாகச் செயலாக்குவதன் மூலமாக, தமிழ்நாட்டை, இந்நாட்டிலேயே வளமும் எழுச்சியும் மிக்க மாநிலமாக நம்மால் மாற்றமுடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நடைபெறவிருக்கும் விவாதம், தமிழ்நாட்டு மக்களின் வளமான வாழ்க்கையை உறுதிசெய்யும் இவ்வரசின் தொலைநோக்கு கண்ணோட்டத்தை விரிவாக்கும் என்று நம்புகிறேன்.

*42.* நம்முன் காத்திருக்கும் கடுமையான பணிகளை நிறைவேற்ற என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வணக்கம்.** (மேசையைத் தட்டும் ஒலி)

**ஜெய் ஹிந்த்.**

D
V2, 3' P0
P01.13

இந்நாளைய நடவடிக்கைக் குறிப்புகள் சட்டமன்றப் பேரவை நிருபர் பிரிவால் கணினி மூலம் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகத்தால் அச்சிடப்பட்டது.

223286

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.